நகல் அரசியல் தீர்மானம்

(கட்சியின் 11வது காங்கிரசுக்கு சமர்ப்பிக்கப்படவிருக்கும்)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

1981, நவம்பர்

(கட்சி உறுப்பினர்களுக்கு மட்டும்)

வெளியீடு:

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

தமிழ் மாநிலக்குழு.

m.R.V

11வது கட்சிக் காங்கிரசிற்கு (நகல்) அரசியல் தீர்மானம்

சர்வதேச நிலைமை

''இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் முதலாளித்துவம் மிக ஆழமான பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்டது. உலகப் போருக்குப் பின்னால் ஏற்பட்ட இந்தமுதற்பெரும் நெருக்கடி ஏககாலத்தில் அனைத்து முதலாளித்துவ நாடுகளையும் பாதித்தது.

உற்பத்தி வினியோகம் இரண்டில் மட்டுமின்றி நாணய செலாவணி, கடன் வழங்குதல் ஆகிய துறைகளிலும் இந்த நெருக்கடியின் கடுமையான தன்மைஏககாலத்தில் முழுமையாகக் காணப் பட்டது.''இவ்வாறு நமது கட்சியின் ஜலந்தர் மாநாடு கூறுகிறது.

1932ம் வருடத்திய நெருக்கடிக்குப் பிறகு இன்று மீண்டும் முதலாளித்துவம் மிக மோசமானதொரு நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளது.

1980ல் பல முதலாளித்துவ நாடுகளில் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. அதைத் தொடர்ந்து 1981ல் முதலாளித்துவ உலகிற்கு உற்பத்தியில் மேலும் சரிவு ஏற்பட்டுள்ளது.

தற்போதைய தேக்கநிலை நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. முதலாளித்துவ நாடுகளின் தலைவர்கள் நல்ல காலம் வருகிறதென நம்பிக்கையூட்டும் நல்வாக்குகளைத் திரும்பத்திரும்பக் கூறி வந்த போதிலும் இந்நிலை 7 ஆண்டு காலமாகவே நீடித்து வருகிறது.இந்த ஆண்டும் இத்தேக்க நிலை குறையவில்லை. உற்பத்தியில் மட்டும் மிகச்சிறிய அளவிற்கு மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன என்று தெரிகிறது.

1974ம் ஆண்டிற்கு முந்தைய கால கட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் மேற்கத்திய நாடுகளின் வருடாந்திர சராசரி பொருளாதார வளர்ச்சி 2 மடங்கிற்கும் அதிகமாக வீழ்ச்சியடைந்துள்ளது. 1980ம் ஆண்டு மிக ஆழமான பொருளாதாரத் தேக்கநிலை ஏற்பட்டது. ஏகாதிபத்திய நாடுகளின் ஆயுத வர்த்தகத் துறை மட்டுமே செழிப்பாக வளர்ச்சியடைந்துள்ளது.

1976ம் ஆண்டு பியூர்ட்டோ ரிகோ என்னும் நாட்டில் நடைபெற்ற, 7 பெருங்கொண்ட நாடுகளின் இரண்டாவது மாநாட்டில் பணவீக்கம்தான் முதல் எதிரி என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப் பட்டது. அதற்குப் பின்னர் நடைபெறும், ஒவ்வொரு மாநாட்டிலும், உச்சமட்ட தலைவர்கள் பணவீக்கத்தை முறியடிப்பதாக சபதமிட்டு வந்துள்ளார்கள். ஆனால் அவர்களால் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

1974, 1975ம் ஆண்டுகளில் பெருங்கொண்ட மேற்கு நாடுகளில் விலைவாசி உயர்வு என்றுமில்லாத அளவிற்கு சராசரியாக

ஆண்டுக்கு 12 சதவீதம் உயர்ந்திருந்தது. 1981ம் ஆண்டில் மீண்டும் பணவீக்க விகிதம் 1974ம் வருடத்திய அளவிற்கு உயர்ந்துள்ளது.

உற்பத்தியில் ஏற்பட்ட குறைவை கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்.

முதலாளித்துவ நாடுகளின் மொத்தபொருளுற்பத்தி, விநியோகம்ஆகியவற்றின் வளர்ச்சிவிகிதம் (சதவிகிதம்)

நாடுகளின் கோஷ்டி		வருடாந்திர சராசரி 1961-73	1973-79	1980
எல்லா நாடுகளும்	—	5.1	3.1	1.9
வளர்ந்த முதலாளித்துவ நாடுகள்	—	5.0	2.7	1.5
வளர்முக நாடுகள்	—	6.0	5.2	5.0

இந்த வீழ்ச்சிக்கு உலக முதலாளித்துவ பொருளாதார மையங்களே பிரதானபங்காற்றியுள்ளன. 1979-80ம் வருடத்திய உலக பொருளாதார ஆய்வறிக்கையின்படி இந்நிலைநீடிக்கும் என்றும் அதன் தொடர்ச்சியாக வேலையில்லாத் திண்டாட்டமும், பணவீக்கமும் இன்னும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

முதலாளித்துவ சமுதாயத்தின் முரண்பாடுகளால் ஏற்பட்டுள்ள நெருக்கடி பல முன்னணி தொழிற்துறைகளில் ஏற்பட்ட கட்டமைப்பு நெருக்கடிகளின் விளைவாக தீவிரமடைந்துள்ளது. இரும்பு,உருக்கு,மோட்டார் ஆகிய தொழிற்துறைகளில் உற்பத்தித் தேக்கம் ஏற்பட்டுள்ளது. கச்சாப் பொருள் பிரச்சினை தீவிரமடைந்தோடு, எரிபொருள் (எனர்ஜி) நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக அமெரிக்காவில் (ஆட்டோ) வாகனத் தொழிற்துறையில் 1981 ஆகஸ்டு வரை சுமார் 21 மாதங்களுக்கு 'லே-ஆப்' செய்தனர். இதனால் 1 லட்சத்து 50 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிப்புற்றனர். பணவீக்கமும், உயர்ந்த வட்டி விகிதமும், தொழில் முடக்கம் ஒன்றுதான் நெருக்கடியைச் சமாளிக்க ஒரேவழி என்று பொருளாதார வல்லுனர்களை எண்ண வைத்துள்ளன. வர்த்தகத் துறையினர் தெரிவிதுள்ள புள்ளி விவரங்களின்படி ஏப்ரல், மே, ஜூன் மாதங்களின் பொருளாதார அசைவு 2.4 சதவீதம் குறைந்துள்ள இந்த வேளையில் இது ஏற்படுகிறது.

நாட்டிலுள்ள 4600 சேமிப்புகடன் வசதிக்கான கூட்டுறவு அமைப்புகளில் 80 சதவீதம் அபாய நிலையில் உள்ளன. அவற்றில் 3ல் ஒரு பங்கு கூட்டுறவு அமைப்புக்களைமூடிவிடும் ஆபத்து உள்ளது.

1981 முதல் மூன்று மாதங்களில் அமெரிக்கப் பொருளாதாரம் ஜரூர வேகத்தில் 9.8 சதவீத அளவிற்கு விரிவடைந்தது. ஆனால் அடுத்த மூன்று மாதங்களில் அமெரிக்கப் பொருளாதாரம் வளர்ச்சியுறாதது மட்டுமின்றி வீழ்ச்சியுமுற்றது.'நியூஸ்வீக்' என்னும் அமெரிக்கப் பத்திரிக்கை கடந்த மே மாதம் வீடுகட்டுதல் 14 சதவீதம் வீழ்ச்சியுற்றது என்றும், தனிப்பட்ட வருமானம் மிகக் குறைந்த வேகத்திலேயே அதிகரித்தது என்றும் தொழில்துறை உற்பத்தி மல்லாந்து விட்டது என்றும், சில்லரை விற்பனை மிகச் சிறுத்து 2 சதவீதமே அதிகரித்தது என்றும் தகவலளித்துள்ளது.

முதலாளித்துவ நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் 240 லட்சத்தை எட்டிவிட்டது. 1982ம் ஆண்டில் இது 260 லட்சமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவில் மட்டும் 78 லட்சம் பேர்களுக்கு வேலையில்லை. 10 ஐரோப்பிய வர்த்தகக் கூட்டு (10''ஐரோப்பிய பொருளாதார கம்யூனிட்டி'')நாடுகளில் உழைக்கும் பிரிவினரில் 8.3 சதவீதம்பேர் அதாவது 90 லட்சம் பேர் வேலையின்றி இருக்கிறார்கள். இதில் 14 லட்சம் பேர் மே.ஜெர்மனியிலும், 30 லட்சம் பேர் பிரிட்டனிலும், 20 லட்சம் பேர் இத்தாலியிலும், 18.4 லட்சம் பேர் பிரான்சிலும் இருக்கிறார்கள். மேலும் உழைக்கும் பிரிவினரில் 12.2 சதவீதம் பெல்ஜியத்திலும், 8.5 சதவீதம் நெதர்லாந்திலும், 8.2 சதவீதம் டென்மார்க்கிலும் வேலையின்றியிருக்கின்றனர்.

உற்பத்தித் தேக்கமும், வீழ்ச்சியும் அத்துடன் கணக்கிடவியலாத அளவு பணவீக்கமும் ஏற்பட்டுள்ளன.

கடந்த 10 ஆண்டுகளில் முதலாளித்துவ நாடுகளில் விலைவாசி இரண்டு மடங்கிற்கு மேலும், 1975க்குப் பிறகு 50 சதவீதமும் உயர்ந்துள்ளது.

இதன்விளைவாக பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் உண்மையான சம்பளம் 1980ல் இருந்ததைவிட குறைந்துவிட்டது. அதேசமயத்தில் 500அமெரிக்க பெரும் முதலாளித்துவ கம்பெனிகள் மட்டும் 1979ம் ஆண்டில் 23 சதவீதம் அதிக லாபமடைந்துள்ளன. இத்தொகை 1.1 லட்சம் கோடி டாலர்களாகும் (சுமார் ரூ.11 லட்சம் கோடி)

கூலி சம்பாத்தியம்

1973லிருந்து 1980 வரையுள்ள ஆண்டுகளில் அமெரிக்காவில் கூலி பெறுவோரின் வருமானம் 10.5 சதவீதம் வீழ்ந்தது; ஆனால் பத்திரிகைகளின் அறிக்கையின்படி இது 15 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. 1930ப் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு இது அமெரிக்க உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட மிகக் கூர்மையான சரிவாகும்.

ஏகபோகங்களின் நலன்களுக்காக ஏற்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் பொருளாதார ஒழுங்கு விதிகள் இதை மாற்றத் தவறிவிட்டன என்பதையே இந்த நெருக்கடிகாட்டுகிறது. முதலாளித்துவ நாடுகளில் ஆட்சிபுரியும் ராணுவ தொழிற்துறை அமைப்புக்கள் நாட்டுப் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த முடியாதது மட்டுமின்றி நாசமடையவும் செய்துவிட்டன.

இவ்வமைப்புகள் பொருளாதாரத்தை நிலை நிறுத்துவதற்கு ராணுவச் செலவை அதிகரிப்பதை ஒரு வழியாகக் கொண்டுள்ளன. இன்று இந்த ராணுவச் செலவுகள் பட்ஜெட்டின் பெரும் பகுதியை எடுத்துக் கொண்டு பொருளாதாரத்தை வீழ்ச்சியுறச் செய்து வருகின்றன. இந்த அழிவுப் பாதைக்கு ஏராளமான பணம் செலவழிக்கப்படுகிறது என்பதை அசுர வேகத்தில் அதிகரித்து வரும் அமெரிக்க ராணுவச் செலவுகளிலிருந்து அறிய முடியும்.

1976-ல்அமெரிக்க ராணுவச் செலவு 100 பில்லியன் டாலர்களைத் (சுமார் ரூ 1 லட்சம் கோடி) தாண்டி விட்டது. 1980க்குள் அது 145 பில்லியன் டாலர்களாக (சுமார் ரூ 1 லட்சத்து 45 ஆயிரம் கோடி) ஆனது. 1982ம் ஆண்டிற்கு ராணுவச் செலவிற்கு 200 பில்லியன் டாலர்கள் (சுமார் ரூ2லட்சம் கோடி) ஒதுக்க வேண்டுமென்று கார்ட்டர் திட்டமிட்டிருந்தார். ஆனால் ரீகன் வந்தபிறகு அதை 227 பில்லியன் டாலர்களாக (சுமார் ரூ 2 லட்சத்து 27 கோடி)ஆக்கினார். 1986ம் ஆண்டிற்கு இது 400 பில்லியன் டாலர்களை (சுமார் ரூ 4 லட்சம் கோடி) நெருங்கும். 1981—86 ஆண்டுகளுக்கு மட்டும் 1500 பில்லியன் டாலர்களை (சுமார் ரூ 15 லட்சம் கோடி) அமெரிக்கா ராணுவச் செலவிற்கென பட்ஜெட்டில் ஒதுக்கியுள்ளது.

முதலாளித்துவ நாடுகளில் உண்மையான சம்பளம் குறைவதும், வேலைகள் இழப்பதுமான சூழ்நிலையில் அதிகமான ராணுவச் செலவுகளின் இந்த சுமை எல்லாவிதமான சமூக முரண்பாடுகளையும் தீவிரமடையச் செய்துவருகிறது.

சோசலிச உலகம்

மாறாக சோலிச நாடுகள் பொருளாதார நெருக்கடிகளின்றி சுதந்திரமாக இருக்கின்றன. சமாதான லட்சியத்திற்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டு செயல்படும் அந்த நாடுகள் சோசலிச நிர்மாணத்தில் மேலும் முன்னேற்றத்தை அடைந்துள்ளார்கள்.

1970ம் ஆண்டுக்கும் 1980ம் ஆண்டுக்கும் மத்தியில் ஒப்பு நோக்குகையில், சோவியத் யூனியனின் மொத்த சமூக உற்பத்தி 67 சதவீதம் அதிகரித்துள்ளது. நுகர்விற்காகவும், சேமிப்பிற்காகவும், உபயோகப்பட்ட தேசிய வருமானம் 55 சதவீதம் உயர்ந்துள்ளது. தொழிற்துறை உற்பத்தி 78 சதவீதம் அதிகரித்துள்ளது. விவசாய விளைபொருள் உற்பத்தி (வருடாந்திர சரா

சரி உற்பத்தி) 23 சதவீதம் அதிகரித்துள்ளது.

கடந்த ஐந்தாண்டு திட்ட காலத்தில் கிழக்கு ஜெர்மனி தனது தேசிய வருமானத்தை 25.4 சதவீதம் அதிகரித்துள்ளது.

ஆயினும் சோஷலிச நாடுகளும் சமீப காலத்தில் ஒரு சில கஷ்டங்களைச் சந்தித்தன. அவற்றின் வளர்ச்சி வேகம் ஓரளவிற்கு தாமதப்பட்டுள்ளது. ஏகாதிபத்திய நாடுகளின் யுத்த முஸ்தீபுகளை யொட்டி சோசலிச நாடுகளும் தங்களது மூல ஆதாரங்களில் ஒரு கணிசமான பகுதியை ராணுவச் செலவுகளுக்காக ஒதுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதும் சோசலிசநாடுகள் புதியவர்த்தக உறவு கொண்டுள்ள நாடுகளில் தேங்கிக் கிடக்கும் வியாபார நிலைமைகளும் காரணம் எனலாம். ஆனாலும் சோசலிச நாடுகள் தங்களது தேசிய வருமானத்தையும், தொழிற்துறை உற்பத்தியையும் கணிசமான அளவிற்கு தொடர்ந்து பெருக்கிக் கொண்டு வந்துள்ளன.

சமீபகாலத்தில் சோசலிச நாடுகளிலும் பொருளாதார நிர்மாணப்பணிகளில் ஏற்படுகின்ற பிரச்னைகள் மிகவும் சிக்கலானவைகளாகி வந்துள்ளன, உலகப் பொருளாதார நிலையில் ஏற்படும் சீரழிவுகள், விலைவாசியில் ஏற்படும் விரிவான ஏற்ற இறக்கங்கள், ஏகாதிபத்திய நாடுகளின் திணிப்பினால் ஏற்பட்டுள்ள ஆயுதப் போட்டி போன்ற விஷயங்களையும் சோசலிச நாடுகள் கணக்கில் கொண்டாக வேண்டியுள்ளது.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் பொருளாதார சக்திகளுக்கிடையிலான சமநிலையில் ஏற்படும் மாற்றங்கள் பாராட்டத்தக்க வகையில் சோசலிச உலகத்திற்கு சாதகமாகவே இருக்கின்றன. 1979ல் சோசலிச நாடுகள் உலக தொழிற்துறை உற்பத்தியில் 40சதவீதத்தை உற்பத்தி செய்தன. இதில் சுமார் 3ல் 1 பங்கு பரஸ்பர பொருளாதார உதவிக் கழகத்தில் (சி.எம்.சி.ஏ.) அங்கம் வகிக்கிற நாடுகளிலிருந்து உற்பத்தியாகின்றன. 1975, 1979 ஆண்டுகளுக்கு மத்தியில் தேசிய வருமானத்தை பல்கேரியா 27 சதவீதமும், கியூபா 19 சதவீதமும் செக்கோஸ்லேவாக்யா 16 சதவீதமும், ஹங்கேரி 18 சதவீதமும், மங்கோலியா 25 சதவீதமும், போலந்து 13 சதவீதமும், ருமேனியா 37 சதவீதமும், சோவியத் யூனியன் 19 சதவீதமும் அதிகரித்துள்ளன.

பரஸ்பர பொருளாதார உதவிக் கழக நாடுகளின் தொழிற்துறை உற்பத்தி 1978ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1979ம் ஆண்டு 3.6 சதவீதம் அதிகரித்துள்ளது. நடப்பு ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் இந்நாடுகள் எட்டியுள்ள வளர்ச்சி 22சதவீதமாகும்.

1975ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1979ம் ஆண்டில் இந்

நாடுகளில் ஏற்பட்டுள்ள தொழில்துறை உற்பத்தி பின் வருமாறு:— (1975ம் ஆண்டு தொழிற்துறைஉற்பத்தி 100 என்க.)

நாடுகள்		1979 ல் தொழில்துறை உற்பத்தி
பல்கேரியா		129
கியூபா		117
செக்கோஸ்லோவாக்கியா	—	121
கிழக்கு ஜெர்மனி	—	122
ஹங்கேரி	—	121
மங்கோலியா	—	135
போலந்து	—	124
ருமேனியா	—	148
சோவியத் யூனியன்	—	120

ஏராளமான பிரச்னைகளும், தடங்கல்களும் இருந்த போதிலும் வியட்நாம் இந்த கால கட்டத்தில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. இதே நிலைமைகளைகொண்ட லாவோசும் குறிப்பிடத் தக்கமுன்னேற்றம் கண்டு வருகிறது. போல்பாட்டின் கொடுங்கோல் ஆட்சியைத் தூக்கியெறிந்துவிட்ட பிறகு கம்பூச்சியா ஏறக்குறைய ஆரம்ப நிலையிலிருந்த தனது பொருளாதாரத்தை வெகுவேகமாக புனரமைத்து வருகிறது.

கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு வெற்றிமேல் வெற்றியாகப் பெற்று வருகிறது. 1970 - 1979ம்ஆண்டுகளில் கொரியாவின் தொழில்துறை உற்பத்தி ஒவ்வொரு ஆண்டும் 15.9 சதவீதம் அதிகரித்துள்ளது. விவசாய உற்பத்தியின் அனைத்துப் பிரிவுகளிலும் வேகமாக முன்னேற்றம் கண்டுள்ளது.

உள்நாட்டு குழப்பங்களும், ஏராளமானஇண்டு இடக்குகளும் உள்ள நிலைமையிலும் சீன மக்கள் குடியரசு வேகமாக முன்னேற்றம் கண்டுவருகிறதுஎன்று பலராலும்அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சோசலிச ரீதியில் நவீனமயமாக்குவதற்கான போராட்டம் அங்கு ஏற்கனவே துவங்கிவிட்டது1980ல்சீனு3கோடியே70லட்சம்டன்எஃகும்62கோடி டன் நிலக்கரியும், 10.2 கோடி டன் 'குருட்' எண்ணெயும், 30 ஆயிரம் கோடி கிலோவாட் மின்சாரத்தையும் உற்பத்தி செய்துள்ளது.

பரஸ்பர பொருளாதார உதவிக் கழகத்தில் உறுப்பினராக இல்லாத யூகோஸ்லேவியாவும் முன்னேற்றம் கண்டு வருகிறது.

போலந்தில் கவலையளிக்கும் படுமோசமான நிலைமை நிலவுகிறது. போலந்து அரசின் — அதன் சமுதாயத்தின் சோசலிச அடிப்படைக்கே சவால் விடுகிற அளவிற்கு அங்கு எதிர்ப்புரட்சி சக்திகள் எழுந்துள்ளன. ஏகாதிபத்தியங்களும், முதலாளித்துவ சமுதாயத்தின்

பிற்போக்கு சக்திகளும் எதிர்ப்புரட்சி சக்திகளுக்கு ஆதரவளித்து வருகின்றன.

தொழிற் சங்கங்களில் லெனினிய விதிமுறைகள் மீறப்பட்டதும், போலந்து ஐக்கியத் தொழிலாளர் கட்சிக்குள் அதிகார வர்க்கப் போக்கு ஏற்பட்டதும், தவறான பொருளாதாரத் திட்டங்களும், வாலன்டாரிசமும் போலந்தின் இன்றைய நிலைக்குக் காரணங்களாகும்.

ஸ்தாபனத்தில் லெனினிய நடைமுறையைக் கறாராக கடைப்பிடிக்காவிட்டால், ஸ்தாபனத்திற்குள்ளே தோன்றும் அதிகார வர்க்கப் போக்கை எதிர்த்து உறுதியான போராட்டம் நடத்தாவிட்டால் மக்களுடைய குரலை நெருங்கி நின்று செவி கொடுத்துக் கேளாவிட்டால் கட்சியின் வழிகாட்டும் கடமையை நிறைவேற்ற முடியாது என்பதற்கு போலந்தில் உருவாகி வரும் சூழ்நிலைகள் மீண்டும் ஒரு எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

வார்சா ஒப்பந்த நாடுகள் சமாதானத்திற்காக நடத்தி வரும் போராட்டமும், அதற்கு உலக மக்கள் அளிக்கும் ஆதரவும், சோவியத் யூனியன் தயார் நிலையில் தனது ராணுவத்தை வைத்திருப்பதும் சமாதானத்தை உடைப்பவர்களுக்கு இன்று வரை தடைக்கல்லாக இருந்து வருகிறது.

அங்கோலா, எதியோப்பியா, மொசாம்பிக், யேமன் மக்கள் ஜனநாயகக் குடியரசு ஆகிய நாடுகளில் போராடி வரும் மக்களுக்கு அளிக்கப்படும் சோசலிச உதவி, முதன்மையாக சோவியத் யூனியன் அளித்து வரும் உதவிகளும் பாலஸ்தீனிய விடுதலைக்கு அது அளித்துவரும் ஆதரவும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளை வலுப்படுத்துவதோடு போராடுவதற்கான மன உறுதியையும் அளிக்கிறது.

சோவியத்யூனியன், கம்பூச்சியா, வியட்னாம் ஆகிய நாடுகளுக்கு அளித்து வரும் ஆதரவு தென்கிழக்கு ஆசியாவில் அமெரிக்கா வகுத்துள்ள திட்டங்களை சீர்குலைத்து விட்டது. சரியான நேரத்தில் ஆப்கானிஸ்தானுக்கு சோவியத் யூனியன் அளித்த ஆயுத உதவி ஆப்கான் நாடு தனது சுதந்திரத்தையும், சுயாதிபத்தியத்தையும் பாதுகாத்துக் கொள்ள உதவியது. அதன்மூலம் ஆப்கானிஸ்தானை அடிமைப்படுத்த நினைத்த அமெரிக்காவின் திட்டங்களைத் தகர்த்தது.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு சோவியத் யூனியன் காட்டிய எதிர்ப்பும் ஆக்கிரமிக்கப் பட்ட லெபனான், சிரியா ஆகிய நாடுகளுக்கு அது அளித்த ஆதரவும் பாலஸ்தீனர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற அரபு உலகத்தின் உறுதியை மீண்டும் வலுப்படுத்துகிறது.

புதிதாக விடுதலையடைந்துள்ள பல நாடுகளுக்கு சோவியத் யூனியன் அளித்து வரும் பொருளாதார உதவி அந்த நாடுகள்

தங்களது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கும், தங்களது சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்வதற்கும் உதவிவருகிறது.

பிற சோசலிச நாடுகளும் வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு மதிப்புயர்ந்த உதவிகளைச் செய்து வருகின்றன. புதிதாக விடுதலையடைந்துள்ள நாடுகளுக்குசோவியத் யூனியன் அளித்துவரும் மதிப்புமிக்க உதவி அந்நாடுகள் ஏகாதிபத்தியத்திற்கெதிராக தங்களது ராணுவ, பாதுகாப்புத் திறன்களை வலுப்படுத்திக் கொள்ள உதவுகிறது. மேலும் அங்கோலா, எதியோப்பியா ஆகிய நாடுகளில் நிகழ்ந்தது போல எதிர்ப் புரட்சித் தாக்குதல்களை முறியடிக்க உதவுகிறது.

ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான முரண்பாடுகள்

1970-ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் முதலாளித்துவ உலக தொழிற்துறை உற்பத்தியில் அமெரிக்காவின் பங்கு 30.9 சதவீதமாகும். மேற்கு ஐரோப்பாவோ 35.4 சதவீதம் உற்பத்தி செய்தது. இன்று முதலாளித்துவ நாடுகளின் மொத்த வர்த்தகத்தில் பாதிவரைக்குமான பங்கு மேற்கு ஐரோப்பாவினுடையது. 1979ம் ஆண்டு மேற்கு ஐரோப்பா ஏற்றுமதி செய்த பொருட்களின் மதிப்பு 222 பில்லியன் டாலர்கள் (சுமார் ரூ. 222 ஆயிரம் கோடி) ஆகும். அமெரிக்காவோ 182 பில்லியன் டாலர் (சுமார் ரூ. 182 ஆயிரம் கோடி) மதிப்பிற்குத்தான் இக்காலத்தில் ஏற்றுமதி செய்தது. ஜப்பான் ஐரோப்பிய பொருளாதார கம்யூனிடி (EEC) நாடுகளுக்கு 1979ல் ஏற்றுமதி செய்த மோட்டார் வாகனங்களை விட 29 சதவீதம் அதிகமாக 1980ல் ஏற்றுமதி செய்தது. தனது மொத்த மோட்டார் வாகன விற்பனையின் மூலம் ஜப்பான் 3 பில்லியன் டாலர் (சுமார் ரூ. 3000 கோடி) பெற்றது. அமெரிக்காவில் நடைபெறும் கார் வியாபாரத்தின் கால்பகுதியை ஜப்பான் கைப்பற்றிக் கொண்டது. அதுமட்டுமின்றி மினி கம்ப்யூட்டர்கள் தயாரித்தல் போன்ற உயர் நுட்பமான துறைகளிலும் அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு சவால் விடுகிறது.

1973ம் ஆண்டிலிருந்து 1979ம் ஆண்டு முடிவுவரை தென்கிழக்காசியப் பகுதியில் ஜப்பானின் மூலதனம் நான்கு மடங்காகப் பெருகியுள்ளது. 1979ம் ஆண்டு இறுதியில் ஜப்பானின் மூலதனம் அப்பகுதியில் 5.79 பில்லியன் டாலர்களை (சுமார் ரூ. 5790 கோடி) எட்டிப் பிடித்தது. தற்போது அப்பகுதியிலுள்ள மொத்த அன்னிய மூலதனத்தில் 33 சதவீதம் ஜப்பான் போட்டுள்ளது. அமெரிக்காவின் பங்கோ 23 சதவிகிதம் தான்.

1979லிருந்து 1980க்குள் ஜப்பானுடன் மேற்கு ஐரோப்பிக் வர்த்தகத்தின் பற்றுக்குறை 10.7 பில்லியன் டாலர்களாகும்.

(சுமார் ரூ. 10,700 கோடி) போகிற போக்கில் இங்குஒருவிஷயத்தை கவனிக்கவேண்டும். ஜப்பானின் துரித வளர்ச்சி அமெரிக்காவிற்கும், ஐரோப்பிய பொருளாதார கம்யூனிட்டி (இ.இ.சி.) நாடுகளுக்கும் கடுமையான போட்டியாளனுக ஆக்கியுள்ளது. இந்த நிலைமை ஜப்பான் மீது அதன் ஏகாதிபத்திய போட்டியாளர்கள், விசேஷமாக அமெரிக்கா திணித்த நிபந்தனைகளின் விளைவாகவே ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஒப்பந்த நிபந்தனைகளின் ஒருபகுதி என்ற அடிப்படையிலும், யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையிலும், ஜப்பான் ராணுவ தளவாடங்களுக்கு செலவழிப்பதற்கு தடை விதிக்கப்பட்டது. மேலும் தன்னை ஆயுதமயமாக்கிக் கொள்வதிலிருந்தும் ஜப்பான் தடைசெய்யப்பட்டது. இதன் விளைவாக, ஜப்பானிய ஏகபோகங்களிடம் மலிந்து குவிந்துவிட்ட லாப மூட்டைகளை தனது பொருளாதார புனர் நிர்மாணத்திற்காக ஜப்பான் திருப்பிவிட்டது. இதனுலேயே தனது மேற்கத்திய பங்காளிகளுக்கு மிகுந்த அசௌகரியத்தைக் கொடுத்துள்ள ஜப்பானிய "அற்புதம்'' நிகழ்ந்தது. தற்போது தனது சுமையை குறைத்துக் கொள்வதற்காக ஆயுததயாரிப்புக்காக பெரும் தொகைகள் செலவிட வேண்டும் என்று அமெரிக்கா ஜப்பானை கேட்டுவருகிறது.

ஜப்பானும், அமெரிக்காவும் ஐரோப்பிய கார் தொழிற்துறையை பேராபத்திற்குள்ளாகக் கூடும் என்றுமே. ஜெர்மனி உட்பட ஐரோப்பிய நாடுகள் அச்சமடைந்துள்ளன. 1985ம் ஆண்டிற்குள், தற்போது சரிவடைந்துள்ள மோட்டார்வாகனத் தொழிற்துறையில் அமெரிக்கா 80 பில்லியன் டாலர்களை (சுமார் ரூ80ஆயிரம் கோடி) முதலீடு செய்யவிருப்பதாக அமெரிக்காவின் சமீபத்திய திட்ட அறிக்கைகள் கூறுகின்றன. இது இந்நாடுகளை மேலும் அச்சுறுத்தியுள்ளது. இந்த வளர்ச்சிப் போக்கின் விளைவாக எழுந்து வரும் மோதல்களும், போட்டிகளும் கடந்த சில ஆண்டுகளாகவே வளர்ந்துவந்துள்ளன.

இது நாணய செலாவணிமுறை, போட்டி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரிவிதிப்பது, சர்வதேச செலாவணி முறையில் தங்கத்தின் பாத்திரம் எஸ். டி. ஆர் முறை (பணம் பெறும் சிறப்புரிமை) எண்ணெய். உற்பத்தி செய்யும் நாடுகளின்பால் கடைப்பிடிக்கும் கொள்கை, ராணுவக் கூட்டுகளின் பிரச்சனை ஆகிய விஷயங்களில் கடைப்பிடிக்கப்படும் தொடர்ந்த பல பொருளாதார கொள்கைகளில் காணப்படுகிறது.

முதலாளித்துவநாடுகளில் முரண்பாடுகள்

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும், அவற்றைச் சார்ந்த பிற நாடுகளிலும் அந்த அமைப்பு முழுவதுமே அடிப்படையிலேயே ஆட்டங்கண்டு வருகிறது.

பணவீக்கம், ஊதியக்குறைப்பு, வேலைநீக்கம், வேலையில்லா திண்டாட்டம் ஆகிய தாக்குதல்கள் தங்களது வாழ்க்கைத் தரத்தின் மீது தொடுக்கப் படுகிற போது முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கம் அதை எதிர்த்து தொடர்ந்து போராடி வருகிறது. வேலை கடுமையாக்கப்படுவதை எதிர்த்தும், பாது காப்பு வசதிகளை அதிகரிப்பது, மருத்துவ வசதிகளைப் பெருக்குவது ஓய்வூதியப் பாதுகாப்பு, தொழில்துறைகளில் தொழில் நுட்ப ஏற்பாடுகளைச் செய்வது ஆகியவற்றைக் கோரியும் தொழிலாளி வர்க்கம் போராடி உள்ளது. பணவீக்கத்தை கட்டுப்படுத்துவது என்ற பெயரால் ஊதிய முடக்கம் செய்வதை தொழிலாளி வர்க்கம் ஏற்க மறுத்து வருகிறது.

பிரிட்டனில் 1980ம் ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் வரையிலான காலத்திற்குள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேலைநிறுத் தங்கள் நடைபெற்றுள்ளன. இந்த வேலை நிறுத்தங்களில் 7 லட்சத்து 50 ஆயிரம் பேர் பங்கேற்றுள்ளார்கள். இதனால் ஏற்பட்ட 'வேலை நாட்கள் இழப்பு' 1 கோடியே 18 லட்சம் நாட்களாகும். 1977ம் ஆண்டு வேலை நிறுத்தங்களால் ஏற்பட்ட 'வேலைநாள் இழப்பு' 1 கோடியே 1 லட்சம் நாட்களும், 1978ம் ஆண்டு ஏற்பட்ட இழப்பு 94 லட்சம் நாட்களும் ஆகும். 1980ம்ஆண்டின் முதல் 6மாதங்களில் மட்டும் அமெரிக்காவில் 3000 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றுள் ளன. இந்த வேலை நிறுத்தங்களில் 11 லட்சம் பேர் பங்கேற்றுள்ள னர். இதனால் ஏற்பட்ட 'வேலை நாள் இழப்பு' 2 கோடியே 7 லட்சம் நாட்களாகும்.

1980ம் ஆண்டு ஸ்காண்டிநேவிய நாடுகளில் வேலை நிறுத்தப் போராட்ட அலை உச்சக்கட்டத்தை எட்டியது. இந்த நாடுகளில்தான் வர்க்க சமாதானம் கோலோச்சி வந்ததாக முதலாளி வர்க்கம் கூறி வந்தது. கடந்த மே மாதம் ஸ்வீடன் நாட்டு வரலாற்றிலேயே என் றும் காணாத அளவு மிகப் பிரம்மாண்டமான வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டத்தில் 7லட்சம் தொழி லாளர்கள் பங்கேற்றனர்.

நார்வே நாட்டில் தொழிற்துறைத் தொழிலாளர்கள் நாடு தழுவிய வேலை நிறுத்தத்தைச் செய்தார்கள். அத்துடன் பல அரசு ஊழியர் வேலை நிறுத்தப் போராட்டங்களும் இணைந்து நடைபெற் றுள்ளன. 1980ல் ஜப்பானில் நடைபெற்ற ''ஸ்பிரிங் அபென்சிவ்'' (''இளவேனிற் கால பேரணி'') என்னும் போராட்டத்தில் 70 லட் சம் பேர் பங்கேற்றனர்.

தொழிலாளி வர்க்கத்துடன் ஊழியர்கள், அறிவு ஜீவிகள்

மற்றும் பிற பிரிவினரும் சேர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். 1976—80 ஆண்டுகளில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, கனடா, மே.ஜெர்மனி, ஜப்பான் ஆகிய 7 முதலாளித்துவ நாடுகளில் 9 கோடிப்பேர் போராட்டங்களில் பங்கேற்றுள்ளனர்.

இந்தப் போராட்டங்களில் உயர்ந்து வரும் விழிப்புணர்வு அதிகரித்துவரும் போராட்ட நடவடிக்கைகளில் பிரதிபலிக்கிறது — அதாவது தற்போது எடுக்கப்பட்டுவரும் தேசிய, சர்வதேசிய அளவிலான நடவடிக்கைகள்; தொழிலாளி வர்க்க நடவடிக்கைகளை பொதுவான ஜனநாயக நடவடிக்கைகளான சமாதானத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடுவது, நிறவெறி, பயங்கரவாதம் ஆகியவற்றை எதிர்ப்பது, இளைஞர்கள், பெண்கள் ஆகியோரது உரிமைகளுக்காகப் போராடுவது போன்ற நடவடிக்கைகளுடன் இணைப்பது போன்றவற்றில் பிரதிபலிக்கிறது.

ஸ்தாபன ரீதியாக ஒன்று திரட்டப்படாத தொழிலாளர்கள் தங்களுடைய வேலைநிறுத்தப் போராட்டங்களில் முன்வைக்கிற கோரிக்கைகள் வெறும் பொருளாதார வரம்பிற்குள் நில்லாமல், ஆளும் வர்க்கங்களின் சமூக பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஜனநாயக மாற்றின் சில மூலகங்களைக் கொண்டதாக இருக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளில் முன்னேற்றமடைந்த முதலாளித்துவ நாடுகளில 80 முறை அரசாங்கங்கள் கலைக்கப்பட்டுள்ளன—அதாவது அரசியல் சட்டத்திற்குட்பட்டு, தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட கால வரையறை முடிய அரசாங்கத்தை நடத்திச் செல்ல இயலவில்லை— இது வளர்ந்துவரும் நிலையற்ற அரசியல் தன்மையைக் காட்டுகிறது.

வலதுசாரி சக்திகள், மக்கள் பெற்றுள்ள ஜனநாயக வெற்றிகளின் மீது திரண்டெழுந்து தாக்குதல் தொடுக்க முயற்சிக்கின்றன. ஆனால் அந்த சக்திகள் வெற்றி பெறவில்லை. ஸ்பெயினில் எதிர்ப்புரட்சி சக்திகள் முயற்சித்த ராணுவக் கலகமும், இத்தாலியில் முயற்சிக்கப்பட்ட 'மசோனிக்' சதித்திட்டமும் முறியடிக்கப்பட்டன. ஆனால் தீவிரவாத சக்திகள் பயங்கரவாதக் கூட்டங்களுடன் சேர்ந்து கொண்டு தொடர்ந்து தாக்குதல் நடத்திவருகின்றன.

1970ம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும், 1980ம் ஆண்டுகளின் முற்பகுதியிலும் பல ஏகபோக முதலாளித்துவ நாடுகளின் ஏகபோகங்களும், அரசும் உழைக்கும் மக்களின் பொருளாதார உரிமைகள் மீது புதிய ஒன்று திரட்டப்பட்ட தாக்குதலைத் தொடுத்தார்கள். மக்கள் நீண்டகாலமாகப் போராடிப்பெற்ற சமூகச் சட்டங்களினால் கிடைக்கக்கூடிய பலாபலன்களைக் குறைக்க முயற்சித்தார்கள்.

இந்த விஷயத்தில் குறிப்பாக முன்னாள் பிரான்சு அரசாங்

கம், பிரிட்டனில் உள்ள 'கான்சர்வேடிவ்' (பிற்போக்கு) கட்சியின் அமைச்சரவை, அமெரிக்காவிலுள்ள ரீகன் நிர்வாகம் ஆகியன முழுமூனைப்போடு இருந்தன. ரீகன் நிர்வாகம் 'பொருளாதார மீட்புத் திட்டம்' என்ற ஒன்றை அறிவித்தது.

இத்திட்டத்தின் பேரால் ஏழைகளுக்கு உணவுக்கு அளிக்கப் பட்டு வந்த உதவித் தொகையை வெட்டியது. வேலையற்றோருக்கும், வேலைபார்க்கும் தகுதியற்ற ஊனமுற்றோருக்கும் கொடுக்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையைக் குறைத்தது குறைந்த வருமான முடையவர்களுக்கு மருந்துப் பொருட்களைக் கொடுப்பதற்கான செலவைச் சுருக்கிவிட்டது. கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக முன் னேற்றத்திற்கான திட்டங்களுக்காக செலவழிப்பதையும் குறைத் துக் கொண்டது. வாஷிங்டனில் ரீகனுடைய கொள்கைகளை எதிர்த்து மிகப் பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முதலாளித்துவ அரசாங்கங்கள் தொழிலாளி வர்க்கத்தின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக சதி செய்து வருகிற அதே நேரத் தில் தொழிலாளி வர்க்கம் இடதுசாரிப் பாதையில் திரும்புகிறது. மார்க்ரெட்தாட்சரும், அவரது ஆதரவாளர்களும் வலதுசாரிப் பாதையை நோக்கித் திரும்புகிற அதே நேரத்தில் தொழிலாளர் கட்சி மேலும் இடதுசாரி பாதையை நோக்கித் திரும்புகிறது. பிரான்சில் நடைபெற்ற தேர்தலில் சோசலிஸ்டு கட்சி பெற்ற வெற்றியானது மக்களது மனோநிலையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

அமெரிக்காவுக்கு, பிரான்சில் மித்தரண்ட் வெற்றி பெற் றதை மட்டுமல்லாது, சோசலிஸ்டு அமைச்சரவையில் பிரான்சு கம்யூனிஸ்டுக் கட்சி பங்கு பெறுவதையும் சகித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டது. கடந்த 10 ஆண்டுக ளாக அமெரிக்கா இத்தாலியின் உள்விவகாரங்களில் தலையிட்டு வரு கிறது. அரசாங்கப் பொறுப்புக்களிலிருந்து பலம் வாய்ந்த இத்தாலி கம்யூனிஸ்டு கட்சியை அகற்றுவதற்கு முயற்சித்து வருகிறது.

மித்தரண்ட் அரசாங்கம் தொழிற்துறை உற்பத்தியில் 40சதவீததகை அரசு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்குத் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. 11கேந்திரமான தொழிற்குழுக்கள்--இவற்றில் கடந்தஆண்டுமட்டும் 40பில்லியன் டாலர்களுக்கு (சுமார் ரூ.40ஆயிரம் கோடி) விற்பனை நடை பெற்றுள்ளது—தேசிய மயமாக்கப்படவிருக்கின்றன. உள் நாட்டுக் கம்பெனிகள் தவிர மூன்று பெரிய அன்னிய மூலதனக் கம் பெனிகளும் தேசியமயமாக்கப்பட வேண்டிய கம்பெனிகள் பட்டி யலில் இடம் பெற்றுள்ளன. அவற்றில் ஒன்று மூலதனத்தில் 47 சத வீதம் அமெரிக்கா போட்டுள்ள 'சி. எச். ஹனிவெல்புல்' கம்பெனி யாகும். மற்றொன்று நியூயார்க்கை தலைமையகமாகக் கொண்ட சர்வதேசிய தந்தி-தொலைபேசிக் கழகத்தின் துணை நிறுவனமான

'ஐ.டி.டி.-பிரான்சு' கம்பெனியாகும்.

கிரீஸில் பாரம்பரியமாக ஆட்சியதிகாரத்தில் இருந்து வந்த 'கன்சர் வேடிவ் கட்சி' சோசலிஸ்டுக் கட்சியால் தோற்கடிக்கப் பட்டுள்ளது

இத்தாலி, ஸ்பெயின், போர்ச்சுக்கல், கிரீஸ் ஆகிய நாடுகளி லுள்ள கமயூனிஸ்ட்டுக் கட்சிகள் தாங்கள் பொது மக்கள் மத்தியில் பெற்றுள்ள செல்வாக்கை அதிகரித்து வருகின்றன;இது மக்கள் தீவிர தன்மை அடைந்து வருவதின் அறிகுறியாகும்.

சோசலிச முகாமுடன் கூர்மையடைந்துள்ள முரண்பாடுகள்

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி, சோஷலிச முகாமிற் கும், ஏகாதிபத்தியங்களுக்குமிடையிலான முரண்பாட்டை கூர்மை யடையச் செய்து வருகிறது. இதை உலக அமைதிக்கான கெடுபிடி. தணிப்பு, கடமையை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கைவிட்டதி லும் தீவிரமாக யுத்த தயாரிப்பு வேலைகளில் அவர்கள் இறங்கியதி லும் பார்க்க முடிகிறது. ரீகன் நிர்வாகம் ஆயுதங்களைப் பொறுத்த வரை அமெரிக்காவுக்குத்தான் மேலாதிக்கம் வேண்டும் என்று யுத்த வெறிகூச்சல் போடுகிறது.அத்துடன் விரைந்து சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளை ஐரோப்பாவில் நிறுத்தி வைத்துள்ளது. மனிதகுலத் தையே பூண்டறுக்கும் நியூட்ரான் குண்டுகளை ஏராளமான அள வில் உற்பத்தி செய்யத் துவங்கியுள்ளது.

அதே சமயத்தில் சோசலிச நாடுகளின் மீதான அவதூறுப் பிரச்சாரத்தையும், சோசலிச ஆட்சியைக் கவிழ்க்கவும் தன்னால் முடிந்ததனைத்தையும் செய்து வருகிறது. அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் போலந்தில் எதிர்ப்புரட்சிக்கு அளித்து வரும் ஆதரவு வெட்ட வெளிச்சமானது, பகிரங்கமானது.

யுத்த அபாயம்

உலக நாடுகளிடையே கெடுபிடி நிலைமையை தணித்தல் மற்றும் ஆயுதக் குறைப்பு ஒப்பந்தங்களுக்கு பதிலாக போர் அபாயம் உருவாகியிருப்பது இக்கால நெருக்கடியின் புதிய அம்சமாகும். ஐரோப்பாவில் விரைந்து சென்று தாக்கக் கூடிய ஏவுகணைகளையும் அணு ஆயுதங்களையும்பயன்படுத்தும்முயற்சிகள்ரஷியாவுக்கு விடுக்கப் பட்டுள்ள நேரடி அச்சுறுத்தலாகும். 1000த்திலிருந்து 2000 கிலோ மீட்டர் வரை பாயும் இந்த ஆயுதங்கள் ஜெர்மன் மண்ணிலிருந்து ரஷியாவின் ஐரோப்பிய பகுதியை நேரடியாகத் தாக்கும் பேரா பத்தை ஏற்படுத்தியுள்ளது. மேற்கு ஜெர்மனியும் பிரிட்டனும் இம் முயற்சிகளுக்கு ஆதரவளித்துள்ளதானது போர் அபாயத்தைமேலும்

அதிகப்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் நியூட்ரான் குண்டு மற்றும் ஆயுத அதிகரிப்புக்கு மேற்கு ஜெர்மனியும் பிரிட்டனும் அடக்க ஒடுக்கமாக ஆதரவளித்துள்ளன. நியூட்ரான் குண்டு விஷயத்தில் மௌனம் சாதிக்கும் பிரான்ஸ் ஆயுதக் குறைப்புப் பேச்சு வார்த்தை குறித்து ரீகனின் பிடிவாதப் போக்கை அங்கீகரித்துள்ளது.

இதன் மூலம் போர் அபாயம் மிகவும் கூடேறியுள்ளது. ஆனால் இந்நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கமும், மக்களும் வாளாயிருக்கிறார்கள் என நினைக்கக் கூடாது. 'வேண்டுவது வேலையேயன்றி துப்பாக்கி அல்ல' என்று பிரிட்டனில் நடந்த மாபெரும் ஆர்ப்பாட்டமும் ஐரோப்பாவில் நடந்துவரும் பெருந்திரள் சமாதான இயக்கமும் இப்போர் வெறியர்களை மக்கள் நிச்சயம் கட்டுப்படுத்துவார்களெனக் காட்டுகின்றன. பான், பாரிஸ், ரோம், பிரஸ்ஸல்ஸ், ஹெல்சிங்கி முதலிய நகரங்களில் மாபெரும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வெறிச் செயல்களால் அணு ஆயுதப் போர் அபாயம் மனித இனத்தை அச்சுறுத்துகிறது. இப்போர் வெறியர்கள் உரிய நேரத்தில் கட்டுப்படுத்தப்படாவிட்டால் கோடிக்கணக்கான மக்கள், நகரங்கள், இனங்கள் மற்றும் முழுமையாக நாடுகள் கூட அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட அணு ஆயுதப்போர் என்ற பேச்செல்லாம் மக்களின் விழிப்பு உணர்ச்சியை மழுங்கச் செய்ய வைக்கும் ஏமாற்று வித்தையாகும். இப்போர் வெறியர்கள் இன்றிருப்பதைப் போல் சுறுசுறுப்பாக அண்மை ஆண்டுகளில் இருந்ததில்லை. மனித இனத்தையே பூண்டோடு ஒழித்துக்கட்டும் அவர்களது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு என்றும் இல்லாத அளவு வசதிகளைப் பெற்றுள்ளார்கள். இந்த அபாயத்தை எதிர்ப்பதும், அணு ஆயுதப் போர் மூலம் உலகை அழிக்க முனையும் ஏகாதிபத்தியவாதிகளை மக்களுக்கு அடையாளம் காட்டுவதும் உலகெங்கிலுமுள்ள தொழிலாளி வர்க்கம் மற்றும் முற்போக்கு சக்திகளின் உடனடிக்கடமை என இந்தியமார்க்சிஸ்ட் கட்சி கருதுகிறது.

உலக சமாதான இயக்கமும், உலகெங்கிலுமுள்ள முற்போக்கு சக்திகளின் போர் எதிர்ப்பு இயக்கங்களும் கூட்டுசேரா நாடுகளின் சக்தியும் அமெரிக்கச் சதியை முறியடிக்கும் பலமிக்க எதிர் சக்திகளாகும். சோவியத் யூனியன் மற்றும் சோசலிச நாடுகளின் சமாதான இயக்கங்களும், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புகளைச் சமாளிக்கும் தயார் நிலையும் உலக அமைதியைக்காக்கும் அடிப்படை நிலைகளாக உள்ளன. அணு ஆயுதப் போட்டியைத் தவிர்க்க சோவியத்யூனியனின் கொள்கைகள் உலகெங்கிலுமுள்ள முற்போக்கு சக்திகளின் ஆதரவைப் பெறும்.

உலக ஆதிக்கம்

இதே சமயத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகம் முழு

வதும் ஆதிக்கம் செலுத்துவதற்கு பல்வேறு அமைப்புக்கள் மூலம் செயல்படுகிறது. இம் முயற்சியினால் அதற்கும் அதனுடைய அட்லாண்டிக் கூட்டாளிகளுக்கும் முரண்பாடு தோன்றுகிறது, அட்லாண்டிக் கூட்டாளிகள் அமெரிக்காவின் எல்லாக் கொள்கைகளையும் அதே கண்ணோட்டத்தில் காண்பதில்லை. (உதாரணமாக ஆப்கன் கொள்கை பெர்சியன் வளைகுடாவில் அமெரிக்காவின் பேராசைகள் அல்லது லத்தீன், அமெரிக்க நாடுகளின்பால் அனுஷ்டிக்கும் கொள்கை) வேறொன்றும் நடக்கிறது. பிரான்ஸ், எல்சால்வடாரில் வெளிப்படையாக கொரில்லாப் போர் வீரர்களை ஆதரித்தும் அமெரிக்காவின் ஆதரவோடு செயல்படும் சர்வாதிகார அரசை எதிர்க்கவும் செய்கிறது.

அட்லாண்டிக் உடன்படிக்கையை மத்தியக்கிழக்குபிரதேசத்திற்கு விரிவுபடுத்துவதையும் பல கூட்டாளிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதேபோன்று அரபு நாடுகளுக்கு எதிராக இஸ்ரேலை அமெரிக்கா ஆதரிப்பதையும் பல கூட்டாளிகள் ஏற்றுக் கொள்ளவில்லை.

மேற்கு, ஆசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் லெபனானுக்கு எதிரான நேரடிப்போரை எதிர் நோக்கியுள்ளன. அமெரிக்காவின் தூண்டுதலாலும் உத்தரவாலும் இஸ்ரேல ஈராக் நாட்டின் அணு நிலையங்களை அழிக்கும் தாக்குதலை நடத்தியது.

ஈரானில் தோற்கடிக்கப்பட்டிருந்தும் கூட அமெரிக்க ஏகாதிபத்தியம் எண்ணெ வள நாடுகளில் உறுதியாக காலூன்றவும். ஆப்கானிஸ்தான் விடுதலை வீரர்கள் என கூறிக் கொள்பவர்களுக்கு உதவுவதாகக் கூறி பாகிஸ்தானில் இராணுவதளம் அமைக்கவும் அமெரிக்கா முழு முயற்சியுடன் ஈடுபட்டுள்ளது.

ஆப்கனிஸ்தானத்தில் ஏகாதிபத்திய தாக்குதல்களை முறியடிக்க முற்போக்கு சக்திகளுக்கு அளிக்கப்படும் சோவியத்தின் உதவியை அப்பகுதியையே இராணுவ முகாமாக்குவதற்கு ஒரு சாக்காக (அமெரிக்கா) பயன்படுத்துகிறது.

எண்ணெ வள நாடுகளில் எண்ணெ படிவங்களுக்காக வேட்டையாடிக் கொண்டு முன்னேறாத நாடுகளிலுள்ள யுரேனிய வளங்களைப் பெற வேட்டையை நடத்திக்கொண்டு, முன்னேறாத நாடுகளின் மீது தமது யஜமானத்துவத்தை நீட்டுவதற்காக எல்லா சமுத்திரங்களிலும் தமது பேராதிக்கத்தை ஏற்படுத்த முயலும் ஏகாதிபத்தியத்தின் வெறிச் செயல்கள் உலகை ஒரு பயங்கர அணுஆயுதத்தால் ஏற்படும் சர்வநாசத்தின் தலைவாயிலுக்கு தள்ளிவிட்டுள்ளன.

மூன்றாவது உலக நாடுகளுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையேயுள்ள கூர்மை அடைந்துவிட்ட முரண்பாடு

முதலாளித்துவத்தின் நெருக்கடி நிலை மற்றும் மூன்றாம்

உலக நாடுகளின் முதலாளித்துவப் பொருளாதார பாதை இவற்றின் பின்னணியில் இந்நாடுகளின் மீது ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் அதிகமாகி அதன் மூலம் அவர்களுக்குள் உள்ள முரண்பாடுகளும் முற்றியுள்ளன; அந்நாடுகளின் கடன் சுமையும் அதிகரித்துள்ளது; அவர்களுக்கு பாதகமான வியாபார விதிகளும் அந்நாடுகள் சுரண்டப்படுவதை அதிகரித்துள்ளன; அந்நாடுகளில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு உத்தரவாதமுள்ள விலை கிடைக்காததால் அவை வேறு வழியின்றி மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளை அண்டியிருக்க வேண்டிய நிலையுள்ளது. பன்னாட்டு கம்பெனிகளின் ஊடுருவல், சுரண்டலையும் அதன் மூலம் முரண்பாட்டையும் மேலும் அதிகப்படுத்தி ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளையும் ஊக்கிவிடுகிறது.

எல்சால்வடார், நிகராகுவா, ஜிம்பாப்வே, நமீபியா, தெற்கு ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்து நடத்திக் கொண்டிருக்கும் போராட்டங்களும், மூன்றும் உலக நாடுகளை ஏகாதிபத்தியவாதிகள் அடிமைப்படுத்தும் முயற்சிகள் தோல்வியைத் தழுவும் என்பதற்கு சான்றாக விளங்குகின்றன. ஈரான், ஆப்கானிஸ்தான், மற்றும் பாகிஸ்தானில் உருவாகிவரும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிகழ்ச்சிகளும் இதையே எடுத்துக்காட்டுகின்றன. சிரியா, லிபியா நாட்டு அரசுகளும் மக்களும் புதிதாக விடுதலைஅடைந்த நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு மற்றொரு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன எகிப்து, இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற இடங்களில் சில பின்னடைவுகள் ஏற்பட்ட போதிலும் மூன்றாவது உலக நாடுகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை மிகுந்த உத்வேகத்துடன் நடத்திக்கொண்டிருக்கின்றன.

சுதந்திரம் பெற்ற பின்னும் கூட அவர்களது பொருளாதாரம் முதலாளித்துவ சந்தையுடன் பிணைக்கப்பட்டு இருப்பதால் புதிதாகவிடுதலை அடைந்த நாடுகள் மிகுந்த கஷ்டத்துக்கு உள்ளாகி உள்ளன. இந்நாடுகளின் அந்நியக் கடன் ஐந்நூறு பில்லியன் டாலருக்கு அதாவது ரூ 5 லட்சம் கோடிக்கு அதிகமாகவும், ஆண்டு தோறும் அவை செலுத்த வேண்டிய கடனும் வட்டியும் 44 பில்லியன் டாலருக்கும் அதாவது ரூ. 44 ஆயிரம் கோடிக்கு மேலாக உள்ளது. 1978-80ல் உலக வங்கி கணக்குப்படி அந்நிய நாட்டு பெரு முதலாளிகள் இந்நாடுகளில் 42 2 பில்லியன் டாலர்கள் (ரூ. 42200 கோடி)மூலதனம் போட்டு 100 பில்லியன் டாலர்களுக்கு(ரூ 1லட்சம் கோடிக்கு) மேலாக லாபமாக எடுத்துக் கொண்டு போய் உள்ளனர். இதே காலத்தில் அமெரிக்கா மட்டும் 39 பில்லியன் டாலர் (ரூபாய் 39000 கோடி) மூலதனத்துக்கு அதே அளவு லாபத்தை எடுத்துச் சென்று இருக்கிறது. இதர பகுதிகளில் இதுபோன்ற தொழில்களில் கிடைத்ததைவிட இது இரண்டு மடங்கு லாபமாகும்.

எந்தநாடும் இத்தகைய சுரண்டலைத் தாங்க முடியாது.

ஆகவே இந்நாடுகள் மேலும் மேலும் ஏழ்மை அடைந்து கொண்டு வருவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதே சமயத்தில் ஏகாதிபத்திய வாதிகள் இந்நாடுகளுக்கு நவீன காலனி ஆதிக்கத் தத்துவத்தின் வழியில் சமுதாய ஆதரவு எனும் சதித்திட்டத்தை அமுல் செய்யவும் முன்வருகின்றன. மூன்ருவது உலகநாடுகளின் ஆளும் வர்க்கங்கள் பொருளாதார உதவி பெறுவதில் கையாளும் சார்புநிலைக் கொள்கையை பயன்படுத்திக்கொண்டு நவீன காலனி வாதிகள் அந்நாடுகளில் தொழிலகங்களை நிறுவ முன்வருகிருர்கள். இதன் நோக்கம் உள்நாட்டு முதலாளிகளுடன் கூட்டு சேர்ந்து ஏகபோக மூலதனம் நுழைவதற்கு வழி வகுப்பதாகும்.

தங்களது நாடுகளில் காலாவதியாகிவிட்ட தொழில் நுட்ப யந்திரங்களை மூன்ருவது உலக நாடுகளுக்கு மாற்றி, இந்நாடுகளில் கிடைக்கும் மலிவான உழைப்பைப் பயன்படுத்தி கொள்ளை லாபம் பெறுவதே இதன் நோக்கம். இந்த வழிவகைகள் மூலம் இந்த மூன்ருவது உலக நாடுகளில் தங்களுக்கு ஒரு சமூக ஆதரவை ஏற்படுத்தவும், இந்த நாடுகளின் தொழில் வளர்ச்சிக்கு தாங்கள் உதவுவதாக இந்நாட்டு மக்களிடையே ஒரு நல்லெண்ணத்தை ஏற்படுத்தவுமே நவீன காலனி ஆதிக்கவாதிகள் முயலுகிருர்கள். ஈரான்-ஈராக் சண்டையில் நேர்ந்த மாதிரியே நாடுகளுக்கு மத்தியில் உள்ள தேசிய வேற்றுமைகளையும், விரோதங்களையும் ஏகாதிபத்தியம் நன்கு பயன்படுத்திக் கொள்கிறது. ஆனுல் புதிய ஆக்கிரமிப்பு முயற்சிகளின் விளைவாக ஏகாதிபத்தியத்தின் முகமூடி கிழிக்கப்பட்டு அம்பலமாகி நிற்கிறது.

கொள்ளையையும், சூறையாடலையும் எதிர்த்த தங்களது போராட்டத்தில் புதிதாக விடுதலையடைந்த நாடுகள் ஒரு புதிய ''உலகப் பொருளாதார ஏற்பாட்டை'' கோரத் துவங்கியுள்ளன. தங்களுக்கு அதிகப்படியான செல்வாதாரங்கள் வேண்டும் என்ற ஏகாதிபத்தியவாதிகளின் மடியில் கைவைப்பதும், ஒரு நியாயமான பரிவர்த்தனை(எக்ஸேஞ்ச்)வேண்டும்என்பதுமாகும்இவை. வெளிநாட்டுக் கொள்கை, நாடுகளுடன் நேசஉறவு துறையில் ஏகாதிபத்தியத்தின் சவாலை சந்திக்க வேண்டியுள்ள மூன்ருவது உலக நாடுகள் கோஷ்டிச் சேரா முகாமில் தங்களை இணைத்துக்கொண்டு ஏகாதிபத்திய சதிகளை குலைத்து வருகின்றன.

புதிதாக விடுதலை அடைந்த நாடுகளின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போரும் அவற்றுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையே உள்ள முரண்பாடுகளும் உலக மக்களின் சுதந்திரம், சமாதானம், ஜனநாயகம், சோசலிசம் ஆகியவற்றிற்கான போராட்டத்தின் பகுதிகளேயாகும். இப்போராட்டம் வெற்றியடைய இவை சோசலிச நாடுகளின் அனுதாபத்தோடும், ஆதரவோடும் நடத்தப்பட வேண்டும்.

இந்நிலையில் கூட்டுச்சேரா நாடுகளின் இயக்கமானது பல கோணல்மாணல்கள், ஊசலாட்டங்கள், தயக்கங்களுக்குமத்தியிலும் கூட ஏகாதிபத்தியத்தின் நோக்கங்களையும் தலையீடுகளையும் தடுத்து நிறுத்தும் ஒன்றுபட்ட கருவியாக செயல்படுகிறது. இந்நாடுகளில் உள்ள அரசுகள் அவர்களது வர்க்க நலன்கள் காரணமாக இப் போராட்டத்தில் தயக்க நிலையை மேற்கொள்கின்றன என்பது உண்மையே. உள்நாட்டு சமூக முரண்பாடுகளை தீர்க்க முடியாமல் வெகுஜன ஆதரவை இழந்த நிலையில் அவர்கள் ஏகாதிபத்தியத்தின் நிர்ப்பந்தங்களுக்கு இரையாகும் நிலையில் இருக்கிறார்கள்.

மக்கள் சீனத்தின் வெளிநாட்டுக் கொள்கை

ஜலந்தர் தீர்மானம் கூறியதாவது: ''சோவியத் யூனியனுக்கும் மக்கள் சீனத்திற்கும் இடையேஉள்ள கூர்மையான கருத்து வேறுபாடுகள் ஏகாதிபத்தியவாதிகளால் தொடர்ந்து பயன் படுத்தப்படுகின்றன. இந்த இரு நாடுகளின் ஒருமித்த இராணுவ, பொருளாதார பலமானது ஏகாதிபத்தியத்திற்கு தகுந்த முறையில் பதிலடி கொடுப்பதாகவும் உலக நாடுகளின் சூழ்நிலையிலேயே ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் கருவியாகவும் இருந்திருக்கும்.''

கலாச்சார புரட்சியின் போது செய்த கடுமையான தவறுகளையும் திசைவழிச் சிதைவுகளையும் திருத்திக் கொண்டுவரும் மக்கள் சீனம் லெனினிஸ அடிப்படையில் நாட்டைக் கொண்டு செல்லும் பணியில் ஈடுபட்டு இருக்கிறது. ஆயினும், தவறான வழி முறைகள் அநேகமாக எல்லாத் துறைகளிலும் புகுந்துவிட்ட படியால் இப்பணி பகீரதப் பிரயத்தனமாகும், மிகவும் சிரமம் மிக்கதாகும்.

பொருளாதாரத்தின் சோசலிச அடிப்படையை நிலைநாட்டிக் கொண்டு, ஏற்பட்டுவிட்ட தவறான வழிமுறைகளைத் திருத்திக் கொண்டு சீனக்கம்யூனிஸ்ட் தலைவர்கள் நாட்டை நவீனமாக்கும் திட்டப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சோசலிசப் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி வளர்க்கும் இம்மகத்தான பணியில் சீனா வெற்றிபெற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்துகிறது. இதில் கிடைக்கும் வெற்றி உலகெங்கிலும் சோசலிச சக்திகளுக்கு பெரும் பலத்தைக் கொடுக்கும்.

இத்தகைய உள்நாட்டுக் கொள்கை மாற்றங்களும்சோசலிச அமைப்பின் கட்டாயமும் சீனத்தின் வெளிநாட்டுக் கொள்கையிலும் ஒரு மாற்றத்தை இயல்பாகவே ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் இதுவரை அது நடைபெறவில்லை.

ஏகாதிபத்தியத்தின் தாக்குதலுக்கு சோவியத் யூனியன் மையமாகும் போது சீனத் தலைவர்களும் சோவியத் யூனியனுக்கு எதிராக தங்களது நெற்றிக் கண்ணைத் திறக்கிறார்கள். சோவியத் யூனியனுக்கு எதிராக அமெரிக்கா போர்முரசு கொட்டுவதற்கு ஆதரவாகவும், உலக ஆதிக்கத்திற்கான தனது சதித்திட்டங்களின்

படி அமெரிக்கா மேற்கொள்ளும் பல நடவடிக்கைகளுக்கும், சாகசங் களுக்கும் ஆதரவாகவும் சீனத்தலைவர்கள் இருக்கிறார்கள். தங்களது வெளிநாட்டுக் கொள்கையை அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை யுடன் ஒன்றிணைத்துக் கொண்டு செயல்பட்டு வருவதாக சீனத்தலை வர்களே கூறுகிறார்கள்.

இக்கொள்கையின் விளைவாக நேட்டோவை பலப்படுத்த வேண்டும் என்றும் இந்துமகா கடலில் அமெரிக்க கடற்படை நுழைந்து தளமமைத்திருப்பதை வரவேற்று நியாயப் படுத்தியும் ஜப்பானின் ராணுவப் பட்ஜெட்டை இரு மடங்காக்கக் கேட்டும், ஆப்கானிஸ்தானத்துக்கு எதிராக அமெரிக்காவை ஆதரித்தும், பாகிஸ்தானுக்கு அமெரிக்க ராணுவ உதவியை ஆதரித்தும், கம்பூச் சிய மக்களுக்கு எதிரான போல்பாட் ஆட்சியை ஆதரித்தும் பல நிலைகளை அவர்கள் எடுத்துள்ளார்கள். இதே கொள்கையால் மக்கள் சீனம் வியட்நாமுடன் ஒரு நேரடி போரில் ஈடுபட்டதும் அங்கோலா பிரச்சனையில் தவறான நிலை எடுத்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

ஆயினும், மக்கள் சீனம் ஒரு சோசலிச நாடு என்பதை மறந்து, அதை அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு சேர்த்துத் தாக் பவர்கள் சர்வதேச ஒற்றுமையின்மைக்கு உதவுகிறார்கள். ஏகாகு பத்தியத்திற்கு மெருகிடுகிறார்கள்.

மக்கள் சீனத்தின் வெளிநாட்டுக் கொள்கையை கண்டிக்க வேண்டியது மிக அவசியம் என்றாலும், அது தனது தவறான வழி முறைகளை கைவிட்டு, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட் டத்தில் தனது உரிய இடத்தைப் பெற்று முன்னணியில் நிற்கும் என்ற கண்ணோட்டத்தில் இந்த விமரிசனம் செய்யப்பட வேண்டும்.

சோஷலிச நாடுகளில் ஆளும் கட்சிகளின் வெளிநாட்டுக் கொள்கைகளின் பலவீனங்கள் பற்றி நமது ஜலந்தர் மாநாடு விமர் சனம் செய்திருக்கிறது. முன்னேற்றமடையாத நாடுகளில் உள்ள புரட்சி சக்திகளின் நலன்களை புறக்கணித்து இந்நாடுகளின் நட்புறவு அரசாங்கங்களையே நம்பியிருப்பதாக நாம் விமர்சித்தோம். உள் நாட்டில் பிற்போக்கான கொள்கைகளை கடைப்பிடித்து தங்கள் நாட்டு மக்களை அடக்கு முறைக்கு ஆளாக்கும் சில முன்னேற்ற மடையாத நாடுகளின் அரசாங்கங்கள், சோசலிச நாட்டு பத்திரிக் கைகளால் அபரிமிதமாக பாராட்டப்படுகின்றன. இந்நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் மீது ஏவி விடப்படும் அடக்கு முறைகளைப் பற்றி அப்பத்திரிகைகளில் எதுவும் காணப்படுவதில்லை. இந்நாடு களிலுள்ள மக்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக நடத்தும் போராட் டங்கள் பற்றி சோசலிச நாட்டு தொழிலாளி வர்க்கத்துக்கு எதுவும் தெரிவிக்கப்படுவதில்லை. அத்துடன் தொழிலாளி வர்க்க சர்வ தேசிய தத்துவத்தின் அடிப்படையில் இந்நாட்டு மக்களின் ஜனநா யக,நியாயமான பொருளாதார, அரசியல் கோரிக்கைகளுக்கான

போராட்டங்களுக்கு ஆதரவும் அளிக்கப் படுவதில்லே.

இக்கால கட்டத்தில் எல்லா முரண்பாடுகளும்முற்றி நின்று ஒரு நேரடியான மோதலுக்கான சூழ்நிலே உருவாகி வருகிறது. உலகெங்கிலும் உள்ள முற்போக்கு சக்திகள் எல்லாம் அணுஆயுத போர் அபாயத்தை தடுக்கவும், சமாதானத்தை பாதுகாக்கவும் ஏகாதிபத்தியத்தின் உலக ஆதிக்க நோக்கத்தை முறியடிக்கவும் தேசிய சுதந்திரத்தை பாதுகாக்கவும், ஜனநாயக வழியில் மேலும் முன்னேறவும், போராட முன்வரவேண்டுமென்று அறைகூவல் விடப்பட்டுள்ளது. நம் நாட்டு சூழ்நிலேயிலும், இந்திய மக்களும் இதே பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தேசிய நிலேமை

இந்தியாவின் பொருளாதாரம் முதலாளித்துவ நாடுகள் அவற்றின் சந்தைகளோடு பெரிதும் பிணேக்கப் பட்டுள்ளதால் இன்றைய முதலாளித்துவ நெருக்கடியின் முழு விளேவுகளேயும், மற்ற ஏன்றும் உலக நாடுகளேப் போல் அனுபவித்து வருகிறது. இது நெடுங்காலமாக தீராது இருந்து வரும் பொருளாதார நெருக்கடியை தீவிரப் படுத்தி, மக்கள் மத்தியில் விரிந்து பரந்த பெருந்திரள் அதிருப்தியையும் எழுச்சிகளேயும்உருவாக்கி நாட்டில்வளர்ந்துவரும் பொருளாதார அரசியல் ஸ்திரத்தன்மையின்மையை ஏற்படுத்தியுள்ளது.நெருக்கடி நிலே காலத்தில்இருந்த சர்வாதிகாரபோக்கு மக்களின் அதிருப்தியை அடக்கவும் முடியவில்லே: நாட்டுக்கு ஒரு ஸ்திர தன்மையை ஏற்படுத்தவும் முடியவில்லே. நெருக்கடி நில ஆட்சி மக்களால் நிராகரிக்கப்பட்டும், ஜனதா அரசு அமைக்கப்பட்டும் கூட நாட்டில் ஸ்திர தன்மைகளே உருவாக்க முடியவில்லே. ஜனதா அரசு தங்கள் ஆட்சி நடத்த அதிகாரம் பெற்ற 5 ஆண்டு காலத்தில் பாதிக்கு முன்னதாகவே பதவி விலக நேரிட்டது நமது ஜலந்தர் மாநாடு ஏற்கனவே எச்சரித்துள்ளது. ''சர்வாதிகாரத்தின் ஆபத்தை ஒழிப்பதில் அக்கறை கொண்டுள்ள அனேத்து ஜனநாயக சக்திகளும் ஜனதாக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளே எதிர்த்தாக வேண்டும், ஆளும் வர்க்கங்களின் நலன்களுக்காக தொழிலாளிகளே பலியாக்கிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்''என முழங்கியது.

''(ஜனதா அரசின்) இந்தக் கொள்கைகள் சர்வாதிகார சக்திகளே பலப்படுத்தும், அவர்களே உயர்வடையச் செய்யும், அவசர கால ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் உருவான மக்களின் ஜனநாயக ஒற்றுமைக்கு உலேவைக்கும்'' என்றும் கூறியது.

ஜனதாக் கட்சியின் தோல்வியும், இந்திரா காந்தி மீண்டும் பதவிக்கு வந்ததும் நிலேமையை மேலும் மோசமாக்கின. எதேச்சதிகாரக் கட்சி மீண்டும் பதவிக்கு வந்த பின்னர், ஒரு மாறிவிட்ட சூழ்நிலேயில், மக்களுக்கும் எதேச்சாதிகார சக்திகளுக்குமிடையிலான மோதல் நடைபெற்று வருகிறது. ஏகாதிபத்தியத்துக்கும் இந்திய

மக்களுக்குமிடையிலான முரண்பாடு முற்றியிருக்கும்நிலை, உள் நாட்டிலுள்ள பிளவு சக்திகளின் தாக்குதல்கள், ஆளுங்கட்சிக்கும் பூர்ஷ்வா எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் தீவிரமடைந்திருக்கும் மோதல்கள், பூர்வாக்களுக்கும் நிலப்பிரபுகளுக்குமிடையில் இருந்து வருகின்ற இழுபறிநிலைமை, அதிகரித்துவரும் இடதுசாரி ஒற்றுமை— இவையெல்லாம் மாறுபட்டசூழ்நிலையின் பல்வேறு அம்சங்களாகும்.

முப்பது ஆண்டுகளாக காங்கிரஸ் அரசாங்கமும் அதற்குப் பின் குறுகிய காலம் ஆட்சி நடத்திய ஜனதா மற்றும் சரண்சிங் அரசாங்கமும், மீண்டும் இ. காங்கிரஸ் அரசாங்கமும் பின்பற்றி வந்திருக்கிற முதலாளித்துவப் பாதையும் கொள்கைகளும் தான் நமது நாட்டை இத்தகைய இக்கட்டான நெருக்கடியில் ஆழ்த்தியுள்ளன.

நமது கட்சியின் கடந்த காங்கிரசுக்குப் பின்னர், ஏற்பட்டிருக்கும் பொருளாதாரச் சூழ்நிலை, முந்தைய முரண்பாடுகள் அனைத்தையும் மேலும் மோசமாக்கியிருப்பதுடன், புதிய சில அம்சங்களையும் சேர்த்திருக்கிறது.

அவற்றுள் நமது பொருளாதாரத்தில் மேற்கத்திய ஏகாதிபத்தியம் வெளிப்படையாகவும் நேரடியாகவும் தலையிட்டு, நமக்கு ஆணையிடும் அளவுக்கு சக்தி பெற்றிருப்பது ஒரு அம்சமாகும். பூர்ஷ்வா — நிலப்பிரபுத்துவக் கட்சிகளுக்குள் இழுபறி நிலைமை இருந்து வருவதும் ஒரு வெடிக்கும் சூழ்நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளாக, தேக்கமடைந்து நொண்டிக் கொண்டிருக்கும் பொருளாதாரம் மக்களின் மீது தாங்க முடியாத கஷ்டங்களைச் சுமத்தியிருக்கிறது. இந்த காலத்தில் மேலோங்கி நின்றது கடுமையாக உயர்ந்துவிட்ட விலைவாசிப் பிரச்னை ஒன்று. ஜனதா ஆட்சியும் விலைவாசிகளை கீழே கொண்டுவரவில்லை. அவசர நிலை காலத்திற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட விலையேற்ற சாம்ராஜ்யம் ஜனதா ஆட்சியில் தொடர்ந்து இருந்து வந்தது. தற்போதைய இந்திரா ஆட்சியில் இதுவரை காணாத அளவில் விலைவாசி உத்வேகத்துடன் உயர்ந்துள்ளது.

கடந்த பத்தாண்டுகளாக பணவீக்கம், தங்குதடையின்றி தொடர்ந்து ஏறிக்கொண்டே வருகிறது. இந்தியப் பொருளாதாரத்தில், பணவீக்கம் ஒரு நிரந்தரமான அம்சமாக மாறிவிட்டது.

மத்திய அரசாங்கம் பெருமளவில் செய்துவரும் பற்றாக்குறை நிதிநிலை ஏற்பாடு இந்தக் கொள்கையின் பிரதான கருவியாகும்.

நமது பொருளாதாரம், மேற்கத்திய முதலாளித்துவ பொருளாதாரங்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருப்பதால், அவற்றின் பொருளாதார தேக்கமும் இரட்டை இலக்க பண

வீக்க விகிதமும் நமது பொருளாதாரத்தை மேலும் மோசமாக்கி யிருக்கின்றன.

எண்ணெய் உற்பத்தி நாடுகள் எண்ணெய் விலையை உயர்த்தும்போது, அதை பயன்படுத்திக் கொண்டு எண்ணெய்த் தொழிலிலுள்ள ஏகபோக முதலாளிகள் அதிக விலையை நம்நாட்டின் மீது திணிப்பதும் நிலைமையை மோசமாக்கியிருக்கின்றன. உலக வங்கி மற்றும் சர்வதேச நிதி அமைப்பு ஏஜன்சிகளும் நமது பணவீக்கத்திற்கு காரணமாக உள்ளன. ஏனெனில், வரி விகிதங்களை உயர்த்தவும், எண்ணெய், உரவிலைகளை அதிகரிக்கவும், மக்களின் நுகர்வுதரங்களைக் குறைக்கவும் வேண்டும் என அந்த அமைப்புக்கள், இந்திய அரசாங்கத்திற்கு கட்டளையிடுகின்றன.

அதிகரித்து விட்ட சார்புத் தன்மை

திட்டச் செலவுகளுக்குத் தேவைப்படும் நிதிக்காக, வெளிநாட்டு 'உதவி'யைச் சார்ந்திருக்கும் நிலை குறைந்து கொண்டே வருகிறது எனக் காட்டுவதற்காக எவ்வளவு தான் முயற்சி செய்யப்பட்டாலும், உண்மை இதற்கு நேர்மாறானதாகவேயிருக்கிறது.

ஆறாவது திட்டத்தில் பயன்படுத்தப்படும் வெளிநாட்டுக் கடன் ரூ 13,000 கோடியிலிருந்து ரூ. 15,000 கோடி வரையாகும். 1980—81க்கான வெளிநாட்டுக் கடன் ரூ 2,340 கோடி என, 1980-81க்கான பொருளாதார சர்வேயின்படி, மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. நமது ஏற்றுமதியில் கடனுக்கும், வட்டிக்குமாக செலுத்த வேண்டிய அளவு 27 சதமானம் என்ற உச்சாணிக்கு சென்றது. 1978—79ல் நமக்கு ஏற்றுமதியில் பெருவாரியாக வருமானம் வந்த போதிலும் கடன் வகையில் நாம் செலுத்த வேண்டிய தொகை ஏற்றுமதி வருமானத்தில் 15.4 சதமானமாக நின்றது. மேலும் மேலும் ஏற்றுமதியைப் பெருக்க வேண்டும் என்று கூச்சலிடுவதற்குப் பின்னணியிலுள்ள காரணம் இதுதான். அந்நிய நாட்டுக்கடன்களை அடைப்பதற்காக ஏற்றுமதி நமது நாட்டின்மீது திணிக்கப்படுகிறது. அப்படி திணிக்கப்படும் ஏற்றுமதியும், மேற்கத்திய நாடுகளைச் சார்ந்து நிற்கும் நிலையும் ஈடு இணையற்ற வகையில் நமது நாடு கொள்ளையடிக்கப்படுவதற்கு இட்டுச் சென்றிருக்கின்றன.

அநேகமாக, மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளையே முழுக்க முழுக்க நாம் சார்ந்து நிற்கிறோம் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டை கூறமுடியும். 1979—80ம் ஆண்டில், சோவியத் யூனியன் உள்ளிட்ட, கிழக்கு ஐரோப்பிய நாடுகளிடமிருந்து நமது நாடு செய்த இறக்குமதி மொத்த இறக்குமதியில் 11.5 சதவீதம் மட்டுமே. அதே போன்று ஏற்றுமதி, மொத்த ஏற்றுமதியில் 9.1 சதவீதம் மட்டுமே.

இந்தியப் பொருளாதாரத்தில், உலக வங்கியும், சர்வதேச நிதி நிறுவனமும் தலையிடுவது மிகவும் அப்பட்டமாகி வருகிறது.

உணவு மானியங்களை ஒழிக்க வேண்டுமெனவும், மக்களின் நுகர்வுத் தரங்களை (Consumption Standards) குறைக்க வேண்டுமெனவும் உலக வங்கி வற்புறுத்தி வருகிறது.

இந்தியா தனது திட்டச் செலவுகளுக்காக வணிகக் கடன்களைப் பெறவேண்டுமென்றும் உலக வங்கி வற்புறுத்தி வருகிறது.

இறக்குமதி மாற்றுக் கொள்கையை (Import Substitution Policy)க் கைவிட வேண்டுமெனவும் பண்டங்களை உள்நாட்டுச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் சந்தைகளுக்கு திருப்பி விடும் வகையில் ஒரு தீவிரமான ஏற்றுமதிக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் உலக வங்கி வற்புறுத்தி வருகிறது.

அதே நேரத்தில், பன்னாட்டுக் கார்ப்பரேஷன்களும், பொதுவாக அந்நிய மூலதனமும் இந்தியாவிற்குள் ஆழமாக ஊடுருவும் வகையில் நிபந்தனைகளை எளிதாக்க வேண்டும் என வங்கி வற்புறுத்தி வருகிறது.

இந்தியா சர்வதேச நிதி நிறுவனத்திடம் கோரியிருக்கும் ரூ 5000 கோடி கடனுக்காக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில், உலக வங்கி வற்புறுத்தி வருவது போலவே சர்வதேச நிதி நிறுவனமும் கடுமையான நிபந்தனைகளை விதித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது உலக நாடுகள் மீது இத்தகைய நிபந்தனைகள் விதிக்கப்படுவது வழக்கமான ஒன்றுதான் என்பதிலிருந்தே இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். மக்களுடைய நுகர்வுத் தரங்களைக் குறைப்பதற்காக பொது விநியோக அமைப்புக்களின் மூலம் வழங்கப்படும் பொருட்களுக்கான மானியத்தை ஒழித்து விடுவது அத்தகைய நிபந்தனைகளில் ஒன்று. அரசாங்கத்தின் செலவுகளைக் கட்டுப்படுத்துவது என்பதன் பேரில் இந்த ஆலோசனை கூறப்படுகிறது. இது முழுவதுமாக அமுல்படுத்தப்பட்டால் வேலைக்கான உணவுத் திட்டம் அறவே ஒழிக்கப்பட்டுவிடும். பட்ஜெட், வரி விதிப்புத் திட்டங்கள், அந்நியச் செலாவணி நிலுவை பற்றிய கட்டுப்பாடு ஆகிய விஷயங்களிலும், ஐ.எம்.எப்பைக் கலந்தாலோசிக்காமல் எதுவும் செய்யக்கூடாதென நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது. ''நாணய மாற்று விகிதம், பரிவர்த்தனை விஷயத்தில் நடைமுறையை அனுசரித்துப் போகும் கொள்கையைக்'' கடைப்பிடிப்பதாக இந்தியா ஐ.எம்.எப்பிடம் வாக்குறுதியளித்திருக்கிதது.

நிர்ப்பந்தத்தால் வந்த விளைவுகள்

நிர்ப்பந்தங்களின் விளைவாக, இந்திய அரசாங்கம் இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு, மக்களின் மீது மேலும் அதிகமான சுமையை சுமத்திக் கொண்டிருக்கிறது.

பட்ஜெட்டில் விதிக்கப்படும் வரி, பட்ஜெட்டுக்குப் பின்

எடுக்கப்படும் வரி விதிப்பு நடவடிக்கைகள், செயற்கை உரம் மற்றும் பெட்ரோலியப் பொருட்களின் விலையை உயர்த்துவது, பஸ், ரயில், மின்சாரம் ஆகியவற்றின் கட்டணங்களை உயர்த்துவது ஆகிய இவையனைத்துக்கும் காரணம் அரசாங்கத்தின் பொருளாதாரத் தேவைகள் மட்டுமல்ல, ஓரளவு வெளிநாட்டு நிர்ப்பந்தங்களும் இதற்குக் காரணமே.

அனைத்துக்கும் மேலாக உணவு மானியங்களை ரத்து செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்கு நமது அரசாங்கம் அடிபணிந்து விட்டதாகத் தெரிகிறது. உணவு மானியம் என்பது முறையாக இன்னும் ரத்து செய்யப்படவில்லையென்றாலும் கூட, நாட்டில் ஏராளமான பகுதிகளில் ரேஷன் கடைகளில் சரக்கு வினியோகம் இல்லாத காரணத்தால், உணவு தானியங்களுக்கு மக்கள் அதிக விலை கொடுக்க வேண்டிய நிலையிலிருக்கின்றனர்.

அத்தியாவகிய சேவைப் பராமரிப்புச்சட்டம் என்பது கடன்களைப் பெறுவதற்கு ஐ.எம்.எப்பை(சர்வதேச நிதி நிறுவனம்) மகிழ்விக்கும் வகையில் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையேயாகும்.

ஆறுவது திட்டத்துக்கு வணிகக் கடன் பெறவேண்டும் என்ற உலக வங்கியின் வற்புறுத்தலுக்கு இந்திய அரசாங்கம் அடிபணிந்து விட்டது. திட்டத்திற்காக ரூ 4000 கோடி வணிகக்கடன் பெறப்போவதாகவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இரயில்வேயின் முன்னேற்றத்திற்காக, உலக வங்கியிடம் பெறும் ரூ 500 கோடி கடனுக்காக பின்வரும் நிபந்தனைகளை உலக வங்கி விதித்திருப்பதாக, நாடாளுமன்றத்திலேயே ஒத்துக் கொள்ளப்பட்டது. 1) பயணிகள் கட்டணத்தையும், சரக்குக் கட்டணத்தையும் ஒவ்வொரு ஆண்டும் உயர்த்த வேண்டும் 2) மிகப் பெரிய பன்னாட்டுக் கம்பெனிகளில் ஒன்றாகிய ஐ. பி. எம். கம்பெனியின் கம்ப்யூட்டர் எந்திரத்தைக் கொண்டு இரயில்வே கம்ப்யூட்டர் மயமாக்கப்படவேண்டும். 3) இரயில்வே போர்டின் காலம் (போர்டு மெம்பர்களின் சேவைக் காலம்) அதிகரிக்கப்படவேண்டும்.

பன்னாட்டு முதலாளிகளுக்கும், தனியார் துறைக்கும் அதிகமான வசதிகள் செய்து கொடுப்பதற்கும், மக்களின் வசதிகளைக் குறைத்துக் கொண்டு கூட ஏற்றுமதியை அதிகரிக்கவும், இறக்குமதி மாற்றுக்கொள்கையை தளர்த்திக் கொள்ளவும் இந்தியா ஒத்துக் கொண்டுவிட்டது.

லைசன்ஸ் ஏதுமில்லாமலேயே உற்பத்தியளவை 25 சதவிகிதம் விரிவுபடுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அங்கீகாரமில்லாத உற்பத்தித்திறனை சட்டபூர்வமாக்க முறைப்படுத்தப்படுகிறது. பங்குகளை மாற்றுவதற்கான சட்டப்பிரிவில் அரசாங்கத்தின் பங்கை 40 சதவிகிதத்திற்கு மேல் உயர்த்துவதில்லை என வாக்குறுதியளிக்கப்பட்டிருக்கிறது. நூறு சதவிகிதம் ஏற்றுமதி நோக்கோடு

இயங்கும் தொழில்களுக்கு , அன்னியச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (FERA) படி அந்நிய நாட்டிலுள்ள அவர்களின் பங்கு 40 சதவிகிதமாகக் குறைக்கப்பட மாட்டாது என உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. தொழிலுற்பத்தியளவைக் கொண்டு ஒரு தொழிலின் ஆதிக்கத்தரத்தை நிர்ணயிக்கும்போது, ஏற்றுமதியாகும் பொருளின் அளவை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற வகையில், ஏகபோக வர்த்தகக் கட்டுப்பாட்டுச் சட்டம் திருத்தப்பட்டுவிட்டது. இத்தகைய பல நடவடிக்கைகளின் மூலம் பன்னாட்டு ஏகபோக முதலாளிகளை அரசாங்கம் திருப்திப்படுத்தியிருக்கிறது.

அந்நியத் தொழில் கூட்டுகளுக்கும் அதேபோன்று அந்நிய மூலதனம் பயன்படுத்தப்படும் பல்வேறு அமைப்புகளுக்கும் வழங்கப்பட்ட அனுமதிகள் 1979ஐ ஒப்பிடும் போது 1980ல் இவை இரு மடங்காகியிருக்கின்றன. முந்தைய ஆண்டைப் போலவே, அந்நிய வர்த்தகக் கூட்டுகளில் பெரும்பான்மையானவை மேற்கு ஜெர்மனி, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளுடன் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு முதலாளிகளுக்கும் மற்றவர்களுக்கும் பல்வேறு சலுகைகள் அளிக்கும் வகையில் அரசாங்கம் எடுத்த முடிவுகளின் மூலம்தான் இந்தக் கூட்டுகள் திடீரென அதிகரித்திருக்கின்றன.

இத்தகைய மேற்கத்திய நாடுகளினாலும், பன்னாட்டு முதலாளிகளினாலும் தங்கள் நாட்டின் சுதந்திரத்திற்கும், ஜனநாயகத்திற்கும் நேரவிருக்கும் அபாயத்தை மூன்றாவது உலக நாடுகள் உணரத் தொடங்கியிருக்கும் இந்தக் காலத்தில்தான் இந்திய அரசாங்கம் இத்தகைய முடிவுகளை மேற்கொண்டு வருகிறது. சிலி மற்றும் தென் அமெரிக்க நாடுகளின் அனுபவம், ஆசிய நாடுகளில் புரியப்பட்டிருக்கும் சதிகள் இவையெல்லாம், பொருளாதார அதிகாரம் மற்றும் அரசியல் சூழ்ச்சி நிறைந்த சக்திகளைப்பற்றி விசாரணை செய்யுமாறு ஐ.நா. சபையை நிர்ப்பந்தித்துள்ளன. இந்தச் சதிகளெல்லாம் புதிய காலனியாதிக்கத்துக்கான கருவி தான் என்பதை மூன்றாவது உலக நாடுகள் உணர்ந்துவருகின்றன.

'ஈக்விடி' பங்குகளை (Equity) 'கரைத்தல் சம்பந்தமாக அரசாங்கத்தின் கட்டளைகளை மருந்து தொழிலிலும், இதர துறைகளிலும் ஈடுபட்டுள்ள பன்னாட்டு முதலாளிகள் மீறிவரும் இந்த வேளையில்தான், அவர்களுக்கு இந்தியாவில் இத்தகைய சலுகைகள் தரப்படுகின்றன.

அவர்களது ஆட்சேபனைகளின் மூலம் அந்த பன்னாட்டு ஏகபோக முதலாளிகளுக்கு அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறும் சுதந்திரம் கிடைத்து விட்டது போலும். அவர்கள் ஈக்விடி விதிகளையும் எதிர்க்கிறார்கள். மிகவும் நவீனமான தொழில் நுட்பத்தை நமது நாட்டுக்குத் தருவதாலும், தங்களது பொருட்களை பெருமளவில் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வ

தாலும் தங்களது ஈக்விடி மூலதனத்தை 74 சதவிகிதமாகவே வைத்துக் கொள்வதாக வாதிடுகின்றனர்.

பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளை தேசிய மயமாக்க வேண்டுமென ஹாத்தி கமிட்டி பரிந்துரை அளித்த போதிலும் கூட ஜனதா அரசாங்கத்துக்கோ, இந்திரா அரசாங்கத்துக்கோ அதை அமுல்படுத்தும் அளவிற்கு திராணியில்லாத அளவு அந்த பன்னாட்டு முதலாளிகள் பலமாக இருக்கிறார்கள்.

அண்மையில் நமது நாட்டில் பெட்ரோ—டாலர் முதலீடு செய்யப் படுவதற்காக அழைப்பு விடப்பட்டிருக்கிறது. பிற்போக்குத்தனமான ஆட்சிகளைக் கொண்டிருக்கும் நாடுகளை பெட்ரோ-டாலர்களை முதலீடு செய்வதற்கும் வர்த்தகக் கூட்டிற்காகவும் அழைப்பு விடுப்பது ஒரு அபாயகரமான சூழ்நிலையையே தோற்றுவிக்கும்.

இதன் தொடர்பாக நமது ஜலந்தர் கட்சிக் காங்கிரஸ் தெள்ளத் தெளிவாக ஒரு கட்டளையைப் பிறப்பித்தது: ''ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இத்தகைய அபாயத்துக்கெதிராக மக்களை தட்டியெழுப்புவதும், பன்னாட்டு முதலாளிகள் மற்றும் உலக வங்கிகளின் சதித் திட்டங்களை முறியடிப்பதுவும் நமது பொருளாதாரத்தை ஊடுருவும் வகையில் அமையும் கொள்கைகளைத் தோல்வியுறச் செய்வதும் நமது கட்சியின் கடமையாகும்.

சோசலிச நாடுகளுடன் குறிப்பாக சோவியத் யூனியனுடன் நாம் கொண்டிருக்கும் வர்த்தக உறவுகள் மூலமாக நமக்கு சிறந்த உதவி கிடைத்தும் கூட மேற்கத்திய உலகத்தைச் சார்ந்து நிற்கும் போக்கு அதிகரித்து வருகிறது. சோவியத் யூனியனுக்கும் இந்தியாவிற்குமிடையிலுள்ள வர்த்தக பரிவர்த்தனையில், நமது ரூபாயையே பணமாகச் செலுத்தலாம் என்பதற்கான ஒப்பந்தம் நமக்கு மிகவும் துணைபுரிவதால், இரு நாடுகளுக்கிடையில் வர்த்தகத்தை வளர்த்துக் கொள்ள முடியும். நமக்கு நெருக்கடியான நேரங்களில் நம்மிடமிருந்து பொருட்களை விலைகொடுத்து வாங்கிக் கொள்வதன் மூலம், நமது பொருளாதாரத்திற்கு சோவியத் யூனியன் மிகச்சிறந்த உதவியைச் செய்து வருகிறது. மேலும் இந்தியாவின் கேந்திரமான தொழில்களை கட்டமைக்கவும் இந்தியப் பொருளாதாரம் சிறப்பாக நடப்பதற்கு தேவையான பொருட்களை வழங்குவதிலும் சோவியத் யூனியன் நமக்கு உதவி வருகிறது.

நமது கட்சித்திட்டத்தில் இது பற்றி மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ''உலக சோஷலிச அமைப்பு தோன்றியதையடுத்து, சிலபெருந்தொழில்களைக் கட்டமைப்பதற்குசோசலிச நாடுகளின் உதவியைப் பயன்படுத்திக் கொண்டாலும் கூட, அவர்கள் (பெருமுதலாளிகள்) ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்து மேலும் உதவி பெறுவதற்கு இதை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள்; ''மிக முக்கியத்துவம் வாய்ந்த உதவியை சோசலிச நாடுகளிலிருந்து

நாம் பெற்றுக் கொண்டாலும் கூட, நமது நாட்டின் முழுமையான பொருளாதார நிலைமையின் யதார்த்தம் என்னவென்றால், பல்வேறு வகையிலும், நமது நாடு மேற்கத்திய நாடுகளின் குறிப்பாக அமெரிக்காவின், உதவியையே பரிதாபமாக சார்ந்து நிற்கிறது. முதலாளித்துவப் பாதையில் சிக்கிக் கொண்டு தீவிரமான நிலச்சீர் திருத்தங்களைச் செய்ய இயலாத நமது நாடு பூர்ஷ்வா-நிலப்பிரபுத் துவ ஆட்சியின் கீழ் மேற்கத்திய நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலைமையை மாற்றுவதற்கு சோஷலிச உதவியை பயன்படுத்தமுடியாத நிலையிலிருக்கிறது.

பொருளாதார நெருக்கடி

நமது பொருளாதாரத்தின் சார்புத் தன்மை மேலோங்கி வருவதைத் தவிர வேறுசில அம்சங்களிலும் முதலாளித்துவப்பாதையின் நெருக்கடிகள் வெளிப்படுகின்றன.

ஆறாவது திட்டம் தொடங்கிய காலந்தொட்டே நெருக்கடியின் விளைவுகளால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அறிவிக்கப்பட்ட இலக்குகள் அடையமுடியாதவையாகி விட்டன. செங்குத்தான விலையேற்றம், பண வீக்கம் ஆகியவற்றால் திட்டத்தின் உண்மையான அளவு ஏற்கனவே வெட்டிக் குறைக்கப்பட்டு விட்டது. இந்தத் திட்ட காலத்தில் பற்றுக்குறை நிதி நிலைமைக்கு அரசாங்கம் தொடர்ந்து திட்டமிட்டு வருவதால், திட்டத்தின் அளவு மேலும் குறைக்கப்படும். ஐ.எம்.எப்.விதிக்கும் நிபந்தனைகளைப் பார்த்தால், திட்டத்தில் கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் பொருத்தமற்றவையாகிவிடுகின்றன. ஆகவே, ஒரு கட்டத்தில் அவைகள் முறையாகக் கைவிடப்படும்.

1981 தொடக்கத்தில் தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில், திட்டத்தின் வர்க்கத்தன்மை பற்றியும், அன்னிய நாட்டு உதவியின் மீது மென்மேலும் சார்ந்து நிற்கும் நிலை பற்றியும், மேற்கு வங்கம், கேரளம், திரிபுரா ஆகிய மாநில முதல்வர்கள் தோலுரித்துக் காட்டினார்கள். ஆறாவது திட்ட அறிக்கையில் நிலச்சீர் திருத்தங்கள் பற்றி, ஏதோ சாதாரணமாகக் குறிப்பிட்டிருக்கிறதே தவிர, விவசாயிகளின் உற்பத்தி வளர்ச்சிக்கும், நில உறவுகளுக்குமிடையிலான நெருக்கமான உறவுகள் பற்றியெல்லாம் ஒன்றுமே கூறப்படவில்லையென்று அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அத்தகைய திட்டத்தின் மூலம், சமநீதியற்ற இந்த சமுதாய வர்க்கக் கட்டமைப்பை தொடர்ந்து காப்பாற்றுவதற்காக, அந்நியச் செலாவணியைச் சம்பாதிப்பதற்காக ஏற்றுமதிகள் நடத்தப்படும்; வருமானம் மற்றும் செல்வ விநியோகத்தில் சமமற்ற நிலைகள் மேலும் வளரும்; என அவர்கள் எச்சரித்தார்கள். திட்டத்தைப்பற்றிய இந்த விமர்சனத்தில் முதலாளித்துவப் பாதையின் நெருக்கடி பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தீவிரமான நிலச்சீர்திருத்தங்கள் மூலம் உழுபவர்களுக்கு நிலத்தை விநியோகிப்பதற்கு இ.காங்கிரஸ், ஜனதா அரசாங்கங்கள் இரண்டுமே தவறிவிட்டன. விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் மறுக்கப்பட்டு, பணவீக்கம், விலையேற்றம், குறைந்த கூலி ஆகியவற்றின் மூலம் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் திட்டமிட்டுச் சுரண்டப்படுகிறார்கள். இவையனைத்தும் விவசாய அரங்கில் கடுமையான நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கின்றன.

விவசாயத் தொழிலாளர்களின் கூலியைப் பாதுகாப்பதற்கு முறையான சட்டங்கள் ஏதுமில்லாததால், அவர்கள் மீதான சுரண்டல் பழைய எல்லைகளையெல்லாம் கடந்து சென்றுவிட்டது. நகரங்களில் உணவு விலையைக் கட்டுக்குள் வைக்க வேண்டுமென்பதற்காக தானியக் கொள்முதல் விலைகளைக் குறைத்தும் வேறு சில நடைமுறைகளை கடைப்பிடித்தும் விவசாயிகளுக்கு நியாயமான விலையை மறுப்பது அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான விலைக் கொள்கையாகும். விவசாய விளைபொருள்களுக்கு நியாயவிலை என்ற பிரச்சினையில் விவசாயிகளின் சினத்தை நம்மால் காண முடிந்தது. விலைக் கொள்கைக்கெதிராக இன்று அவர்களின் கோபம் வெடித்துக் கிளம்பியிருக்கிறது.

தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறன் முழுவதையும் பயன்படுத்துவதற்கு நமது பொருளாதாரத்தால் இயலவில்லை. ஆறாவது திட்ட அறிக்கையில் ''அண்மைக்காலங்களில், பலதொழில்களில் உற்பத்தி திறனை பயன்படுத்தும் போக்குகள் மிகவும் மனச்சோர்வளிப்பதாகும். விவசாயத்திலும் இதே நிலைதான். நீர்ப்பாசனத்துக்காக உருவாக்கப்பட்ட சக்தி முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. நம் நாட்டில் இருக்கும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திகிடைக்க வேண்டிய விளைச்சலின் அளவை விட இந்தியாவின் பல பாகங்களில் விளைச்சல் மிகக் குறைவாகவிருக்கிறது'' எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தொழில் நசிவும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ரிசர்வ் வங்கியின் அறிக்கையில் 1979 ஜுன் மாத முடிவில் 345 பெரிய தொழில்கள் நசிவுற்றிருப்பதாகவும். அவற்றில் வங்கிக் கடனாக ரூ.1,011.2கோடி முடக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. கனரக தொழில்களுக்கான துறையின் கீழ் பொதுத்துறையில் முதலீடு செய்யப்பட்டிருக்கும் மொத்தத் தொகையைவிட இது அதிகம். ரிசர்வ் வங்கிக்கு வணிக வங்கிகள் சமர்ப்பித்திருக்கும் அறிக்கையின் படி, சிறு தொழில் துறையிலுள்ள நசிவுற்ற தொழில்கள் 20,326 ஆகும். 1980—81-க்கான பொருளாதார சர்வே ''பெரிய தொழில்களிலும், சிறிய தொழில்களிலும் தொழில் நசிவு ஏற்பட்டு வருவது மிகவும் கவலைப்படக்கூடிய விஷயம்'' என்று கூறுகிறது.

மென்மேலும் அதிகமான மக்கள் வறுமைக் கோட்டிற்குக்

கீழ் தள்ளப்பட்டு வருகிருர்கள். அதிகாரபூர்வமான தகவல்களின்படி 48 சதவீதம் அதாவது 30 கோடி மக்களுக்கு மேல் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கிருர்கள் எனத் தெரிகிறது. ஆனுல் இது ஒரு குறைவான மதிப்பீடேயாகும். 1968—69ல் 43 சதவீதமாக இருந்த இந்த மக்கள் 1973—74லேயே61சதவீதமாக அதிகரித்துவிட்டனர்.

விவசாயத் தொழிலாளர் பற்றிய விசாரணைக் கமிட்டியின் அறிக்கை 1978ல் சமர்ப்பிக்கப்பட்டது. விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்கள் 10 வருடங்களில் 49சதவீதம் உயர்ந்திருப்பதாகவும், சிறிய, மத்திய தர விவசாயிகள் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்டு கூலிகளாக மாற்றப்பட்டுவிட்டதாகவும் அறிக்கை கூறுகிறது.

பெருமளவில் நிலவெளியேற்றம் தொடர்ந்து வருவது முதலாளித்துவப் பாதையின், நெருக்கடியில் ஒரு அம்சமாகும்.

பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டம் நெருக்கடியைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வைக்கும் ஒரு சுலபமான வெளிப்பாடாகும். அதிகாரபூர்வமான புள்ளிவிவரங்களின்படி, ஐந்தாவது திட்டத்தின் முடிவில் வேலையற்றோரின் எண்ணிக்கை 22.1 மில்லியன் (2.21கோடி) இது ஒரே குறைவான மதிப்பீடாகும். உழைப்புச் சந்தைக்குப் புதிதாக வருபவர்கள் 32 மில்லியன் (3.2 கோடி) ஏற்கனவே இருப்பவர்கள் 24.2 மில்லியன் (2.42 கோடி) உண்மையாகப் பார்த்தால், எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே இருக்கும். 40 மில்லியனுக்கு (4கோடி) குறையாது. 30 மில்லியன் (3கோடி) புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் என்பதற்கு ஆதாரம் ஏதுமில்லை. வேலையற்ற படித்தவர்களின் எண்ணிக்கை மட்டுமே 1985 இல் 11.85 மில்லியன் (1.185 கோடி) ஆகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1973-74லிருந்து 1980-81 வரை பதிவு செய்யப்பட்ட வேலையற்றோர் எண்ணிக்கை ஆண்டுக்கு 10.6 சதவீதம் உயர்ந்து வந்திருக்கிறது. 1979-80க்கும் 1980-81க்கு மிடையில் எண்ணிக்கை அதிகரிப்பு 13.3 சதவீதமாகும் (''காமர்ஸ்'' 22.8.81)

நகரங்களிலும், கிராமங்களிலும் வீட்டு வசதியின்மை அதிகரித்து வருவதால நிலைமை வேகமாக சீர்கெட்டு வருகிறது.

நகர்வாழ் மக்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் சேரிகளில் வசிப்பவர்களே. 1985ல் வீட்டு வசதியில்லாமல் வசிப்போரின் எண்ணிக்கை சுமார் 37 மில்லியன் (3.7கோடி) ஆகுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. முதலாளித்துவப் பாதையில் திட்டமிடும் நமது அரசாங்கம், 21 லட்சம் வீடுகளைக் கட்டப் போகிறதாம். மீதி உள்ளதை தனியார் துறைக்கு விட்டுவிடுவார்களாம். அதாவது மேலும் சேரிகள்.

கிராமங்களில் வீட்டு வசதி தேவைப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை 14.5 மில்லியன் (1.55கோடி) ஆகஇருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. இவர்களில் 7.7மில்லியன் (77 லட்சம்) குடும்பங்களுக்கு வீட்டு மனைக்கான காலியிடம் ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சுமார் 0.56 மில்லியன் (5,60,000) குடும்பங்களுக்கு மட்டும் வீடு கட்டும் உதவி அளிக்கப் பட்டிருக்கிறது.

ஒரு பக்கம் பொருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொண்டு வறுமை வளர்ந்து வருகிறது. மறுபக்கம் குறிப்பிட்டசிலரின் கைகளில் மூலதனம் குவிந்து வருகிறது. அரசாங்கம் நிலச்சீர் திருத்தம் பற்றி தம்பட்டம் அடித்துக் கொண்டாலும் கூட முன்போலவே நிலமும் சிலர் கைகளிலேயே குவிந்து வருகிறது. நிலம் வைத்திருப்பவர்களில் 3 சதவீதத்தினர் 26 சதவீத நிலத்தை வைத்துக் கொண்டிருக்கின்றனர். பொதுத் துறையும், சரியாக நிர்வாகிக்கப்படுவதற்குப் பதிலாக, தனியார் மூலதனத்துக்கு உதவுகின்ற வகையில் அதிகார வர்க்கத்தால் நிர்வாகிக்கப் படுகின்ற ஒன்றாக மாறிவிட்டது.

ஏறிவரும் விலைவாசி அனைத்துப் பகுதி மக்களையும் கடும் துயரத்துக்குள்ளாக்கியிருக்கிறது. ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்படாத தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் துயரம் மிக மிக கடுமையாகவுள்ளது.

ஊதிய முடக்கம், பஞ்சப்படியில் கட்டாய டெபாசிட்டுக்கான திட்டம், விவசாயிகளுக்கு நியாயமான விலைமறுப்பு, விவசாயத் தொழிலாளர்களுக்கு சரியான கூலி தர மறுப்பு, உயர் ஊதியத்தீவுகள் எனக் கூறி சில ஊழியர் பிரிவினர் மீது தாக்குதல் தொடுப்பது, வேலைநிறுத்தங்களைத் தடை செய்வது ஆகிய இத்தகைய கொள்கைகளின் மூலம் நெருக்கடியின் சுமையை சாதாரண மக்கள்மீது சுமத்த முயலுகின்ற அரசாங்கம் நிலப்பிரபுக்களுக்கும் ஏகபோக முதலாளிகளுக்கும், பன்னாட்டு முதலாளிகளுக்கும், பெரு வணிகர்களுக்கும் சலுகைகளை வழங்கி வருகிறது.

நம்நாட்டின் உணவு விநியோக அமைப்பு அபாயத்திலிருந்து வருகிறது. நகரங்களில் ரேஷன் அளவு வெட்டப்படலாம், கிராமங்களில் பட்டினி என்ற நிலையும் ஏற்படுத்தப்படலாம்.

இதைத் தவிர, கிராமப்புறங்களிலுள்ள மிகவும் ஏழை எளியவர்களுக்கு ஒரளவு நிவாரணம் அளிக்கப் பயன்பட்டுவந்த வேலைக்கு உணவுத் திட்டத்திற்குக் கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் தானியக் கையிருப்பு இல்லாமல் போகலாம்.

மாறிவிட்ட சூழ்நிலைகள்

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நமது கட்சிக் காங்கிரஸ் நடைபெற்றபோது எதேச்சாதிகாரக் கட்சி பகிரங்கமாக நடை

பெற்ற தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு மக்களால் நிராகரிக்கப்பட்டு பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத்தில் இ. காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டதால் மட்டுமே சர்வாதிகாரத்திற்கெதிரான போராட்டம் முற்றுப் பெற்று விட்டதாக நமது ஜலந்தர் காங்கிரஸ் கூறவில்லை. ''காங்கிரசின் தேர்தல் தோல்வி, சர்வாதிகாரத்திற்கான சூழ்நிலையை உருவாக்கிய வர்க்கங்களின் தோல்விக்கு இட்டுச் செல்லவில்லை. ஆகவே சர்வாதிகாரத்திற்கெதிரான போராட்டம் ஒரு தொடர்ச்சியான போராட்டமேயாகும். ஏகபோக முதலாளிகளும், நிலப்பிரபுக்களும் தங்களது நலன்களைக் காத்துக்கொள்வதற்காக மக்களின் உரிமைகளை வெட்டிக் குறைத்து சர்வாதிகாரம் என்ற கட்டத்துக்கே செல்வார்கள். குறிப்பாக தொழிலில் கடுமையாக வீழ்ச்சி ஏற்பட்டு, சலுகைகள் எதுவுமே அளிக்க முடியாத நிலையில் மக்கள் கிளர்ந்தெழும் மனோ நிலைக்கு வந்த பின் ஆளும் வர்க்கங்கள் சர்வாதிகாரத்தை நோக்கியே செல்வார்கள். மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் பொருளாதாரத்தின் மீதும், உலக முதலாளித்துவச் சந்தையின் மீதும் மென்மேலும் சார்ந்து நிற்பதும், பன்னாட்டு முதலாளிகளை நமது நாட்டுக்குள் வர அழைப்பு விடுப்பதும், இதுவெல்லாம் சர்வாதிகார சக்திகளை வலுப்படுத்தக்கூடியவை. ஏகபோக முதலாளிகளும், பெரு முதலாளிகளும், நிலப்பிரபுக்களும் இந்தியப் பொருளாதாரத்தைத் தங்கள் பிடியில் வைத்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்தும் வரையில், தங்களது ஆட்சியை நிலைநிறுத்துவதற்காக இந்தக் கூட்டத்தின் ஏதாவது ஒரு பகுதியினர் தங்களது ஆட்சியை சக்தி படைத்ததாக வைத்திருக்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்வார்கள்'' என கட்சி கூறுகிறது.

1975இல் எமர்ஜென்சியையும், ஒரு நபர் சர்வாதிகார ஆட்சியையும் ஏற்படுத்திய அந்தக் கட்சி மீண்டும் அதிகாரத்திற்கு வந்திருக்கிறது. ஆளுங்கட்சிக்கும் மக்களுக்கு மிடையில் மோதல் மாறுபட்ட சூழ்நிலையில் நடைபெறுகிறது.

ஏகாதிபத்தியத்திற்கும் இந்திய மக்களுக்கும் முற்றியிருக்கும் முரண்பாடு, உள் நாட்டிலுள்ள பிளவு சக்திகளின் தாக்குதல்கள், ஆளுங்கட்சிக்கும் பூர்ஷ்வா எதிர்க்கட்சிகளுக்குமிடையில் தீவிரமடைந்திருக்கும் மோதல்கள், பூர்ஷ்வாக்களுக்கும் நிலப்பிரபுக்களுக்குமிடையிலிருந்துவரும் இழுபறி நிலைமை, அதிகரித்துவரும் இடதுசாரி ஒற்றுமை-இவையே அந்த மாறுபட்ட சூழ்நிலைகள்.

ஏகாதிபத்தியத்துடன் முரண்பாடு

நமது பொருளாதார விவகாரங்களில் ஏகாதிபத்தியத்தின் தலையீடு அதிகரித்து வருவதுடன், நமது பொருளாதார சுதந்திரத்தையும் ஆபத்துக்குள்ளாக்கி வருகிறது.

நம்மை மடக்கிப்போடும் வலிமையைப் பெற்றிருக்கும் அமெரிக்காவும் அதன் ஏஜன்சிகளும் நமது நாட்டின் அரசியல் ஒற்றுமையைக் கெடுப்பதற்கு அனைத்து வழிகளையும் பயன்படுத்தி வருகின்றனர்.

வெளிநாட்டுக் கிறிஸ்தவ மிஷனரிகளும் இதர ஏகாதிபத்தியத்தின் ஆட்களுமாகச் சேர்ந்து நமது நாட்டின் வடகிழக்குப் பிரதேசத்தை சீர்குலைக்கின்றன. பிரிவினை சக்திகளின் ஆதிக்கத்தில் அந்தப்பிரதேசம் உள்ளது. அஸ்ஸாம் கிளர்ச்சியில் ஏகாதிபத்தியத்தின் கைகள் உண்டு என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

ஆதிவாசிகள் வாழும் உள்நாட்டுப் பகுதிகள் பலவற்றில் சில வெளிநாட்டுக் கிறிஸ்தவ மிஷனரிகள் பிரிவினைப் பிரச்சாரத்தை நடத்திவருகின்றன. வெளிநாட்டிலிருக்கும் சில பிற்போக்குப் பழமைவாதிகளின் துணையுடன், ஏகாதிபத்தியம் முஸ்லீம் அடிப்படைவாதத்தின் மூலம் முஸ்லீம்கள் ஒரு தனிநாடு என்ற பிரிவினைப் பிரச்சாரத்தைக் கிளப்பி விடுகின்றது.

வடமேற்கில் சில சீக்கிய தீவிரவாத சக்திகள் காலிஸ்தான் என்ற பிரிவினைக் கோஷத்தை எழுப்பியிருக்கின்றனர். இங்கேயும் அந்நிய ஏகாதிபத்திய ஏஜன்சிகளின் கைகள் தெளிவாகத் தெரிகின்றன.

இத்துடன், நாட்டின் சுதந்திரத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும் சவால் ஏற்பட்டிருக்கிறது. நமது அண்டை நாடுகளிலிருக்கும் பிற்போக்காளர்களின் ஆதரவில் நமக்கு எதிராக உள்ள அரசாங்கங்களால் நமது நாட்டைச் சுற்றி வளையம் ஏற்படுத்துவதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் முயற்சி செய்து வருகிறது,

இலங்கையில் அண்மையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களினால், அமெரிக்கா ஒரு கடற்படைத்தளம் அமைப்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பங்களா தேசத்திலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது செல்வாக்கைத் திரட்டி வருவது நமக்கு எச்சரிக்கை அறிவிப்புகளாகும். ஆனால் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்களைதான் அமெரிக்கா அதிகம் நம்பியிருக்கிறது. அதைவைத்து நம்மீது போர் மற்றும் ஆக்கிரமிப்பு பயமுறுத்தலை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

பாகிஸ்தான், அணுகுண்டு தயாரிப்பதை காணமறுத்து அமெரிக்கா கண்ணை மூடிக்கொள்கிறது. இந்தியா அணு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி விஷயங்களில் சர்வதேச கட்டுப்பாடுகளை ஏற்றுக் கொண்டு நடக்க வேண்டுமென்றும், அமெரிக்காவின் மேறபார்வையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறி, ஒப்பந்தப்படி தாராபூர் அணுமின் நிலைபத்துக்குக் கொடுக்க வேண்டிய யுரேனியத்தைத் தர மறுத்துவிட்டது.

ஆக்கிரமிப்புக்கும், தாக்குதலுக்கும் மட்டுமே தேவையான எப். 16 ரக விமானங்கள் மற்றும் நவீன ஏவுகணைகள் ஆகியவற்றை பாகிஸ்தானுக்கு சப்ளை செய்வதற்காக 300 கோடி டாலருக்கான ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்கா பாகிஸ்தானுடன் செய்து கொண்டிருக்கிறது.

எப்.16ஐப் போன்றே' ஒலியை விட வேகமான நவீன நாசகாரி விமானங்களையும் பாகிஸ்தானுக்குத் தருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதிலுள்ள ஏவுகணைகளின் மூலம் இந்தியாவின் எந்தப்பகுதியையும் தாக்க முடியும்.

இத்தகைய நடப்புகளை நமது கட்சி கவலையுடன் கவனத்தில் கொள்கிறது. நமது நாட்டின் ஒற்றுமையையும், சுதந்திரத்தையும் காப்பதற்காக தேசபக்தி நிறைந்த அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்டி ஏகாதிபத்தியத்தின் சதித்திட்டங்களையும், பாகிஸ்தான் ராணுவ ஆட்சியின் சாகசங்களையும் முறியடிப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுதி பூண்டிருக்கிறது.

இந்தத் துணைக்கண்டத்தில், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிலுமே சுதந்திரமும், ஜனநாயகமும் நிலவ வேண்டுமானால், இவற்றில் எந்த ஒரு நாடும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிக்கு இரையாகிவிடக்கூடாது.

தங்களது நாட்டில் ஜனநாயகம் மீட்கப்படுவதற்காக, பிற்போக்கு ஆட்சியாளர்களின் கடுமையான அடக்கு முறைகளையும் எதிர்த்து வீரமாகப் போராடும் பாகிஸ்தான், பங்களாதேஷ் மக்களுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி தனது ஒருமைப்பாட்டைத் தெரிவித்துக் கொள்கிறது.

வெளிநாட்டுக் கொள்கை என்ற விஷயத்தில், சில பூர்ஷ்வா எதிர்க்கட்சிகள் சந்தர்ப்பவாத நிலையை எடுத்தாலும் கூட, நமது சுதந்திரத்திற்கு ஏகாதிபத்தியத்தினால் ஆபத்து தீவிரப்படும்போது, அந்தக் கட்சிகளையும் உள்ளடக்கிய ஒரு பரந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு தளத்தை உருவாக்க முடியும்.

ஏகாதிபத்தியத்தின் இராணுவ நிர்ப்பந்தங்களையும், ஆக்கிரமிப்பையும் முறியடிப்பதற்கு இந்திய — சோவியத் ஒப்பந்தம் பெருமளவில் உதவுகின்ற வகையில் நெம்புகோலாக அமைந்துள்ளது. ஆகவே அந்த ஒப்பந்தத்தைப் பலவீனப்படுத்துவதுதான், இத்தகைய ராணுவ நிர்ப்பந்தங்கள் மற்றும் வேறு வகை நிர்ப்பந்தங்களின் உடனடி நோக்கமாகும். இந்த ஒப்பந்தத்தைப் பலப்படுத்துவதற்கு நமது கட்சி முழுமையாகப்பாடுபடவேண்டும்; திசைதிருப்பி இதற்கு குழி பறிப்பவர்களை எதிர்த்துப் போராடவேண்டும். நமது நாட்டின் பாதுகாப்பிற்கு அது எவ்வளவு முக்கியமானது என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

மக்கள் சீனத்தின்பால் உள்ள பார்வை

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதித்திட்டங்களை எதிர்த்து மக்களின் கவனத்தை அதில் கூர்மைப்படுத்தும் வேளையில், அமெரிக்காவின் திட்டங்களுக்குத் துணை புரியும் வகையில் மக்கள் சீனக் குடியரசு நிலையெடுப்பதானது, சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

சமூக ஏகாதிபத்தியம் என்ற தத்துவத்துக்கும், அமெரிக்காவை விட சோவியத்யூனியன் அதிக ஆபத்தானது என்ற கருத்துக்கும் பலியாகியுள்ள மக்கள் சீன அரசாங்கம், இந்தப் பிரதேசத்தில் சோவியத் யூனியனை தனிமைப் படுத்த வேண்டும், நட்புறவு மற்றும் ஒத்துழைப்பிற்கான இந்திய - சோவியத் ஒப்பந்தத்தை பலவீனப்படுத்த வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

அதற்கு மாறாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த அளவில், அமெரிக்காவின் சதித்திட்டங்களை முறியடிக்க வேண்டுமானால், இந்த ஒப்பந்தத்தை பலப்படுத்துவது மிகவும் அவசியம் எனக் கருதுகிறது.

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்களுக்கு அமெரிக்கா இராணுவ உதவி அளிப்பதை ஆசியர்களுக்கெதிராக ஆசியர்களை மோதவிடும் அமெரிக்கச் சதியே எனவும், நமது சுதந்திரத்துக்கெதிரான சதியின் ஒரு பகுதியே எனவும் மார்க்சிஸ்ட்கட்சி கண்டிக்கிறது. பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி என்ற விஷயத்தில் மக்கள்சீன அரசாங்கம் நேர்மாறான நிலையை மேற்கொள்ளுகிறது. அமெரிக்காவின் ராணுவ உதவியை ஆதரிக்கிறது. இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நடைபெற்ற மூன்று போர்களின் அனுபவத்தைக் கொண்டுபார்க்கிற பொழுது மார்க்சிஸ்ட்கட்சி இதில்அசட்டையாக இருக்க முடியாது. சீனக் கட்சியின் இன்றைய வழி தவறிப்போன கொள்கைகளை எதிர்த்துப் போராடும் அதே வேளையில், சீனம் ஒரு சோசலிச நாடு என்பதை மார்க்சிஸ்ட் கட்சி மறக்கவில்லை. சீனத்திலுள்ள சோஷலிச அமைப்பு வலுவடைந்து, மற்ற சோசலிச நாடுகளின் ஒத்துழைப்புடன் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் மக்கள் சீனம் முன்னணியில் நிற்கும் என மார்க்சிஸ்ட் கட்சி உளப்பூர்வமாக நம்புகிறது.

இந்தியா, சீனு ஆகிய இருநாடுகளுக்கிடையில் நட்புறவுகள் மலரவேண்டுமென மார்க்சிஸ்ட் கட்சி எப்போதும் கூறிவருகிறது. உறவுகள் சீர்படுவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் வரவேற்கிறது.

இந்திரா அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை

வெளியுறவுக் கொள்கை பற்றிய பல பிரச்சனைகளில், கோஷ்டி சேராமை, ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்பு என்ற கருத்

துக்கு ஒப்ப, இந்திராகாந்தி அரசாங்கம் சரியான நிலையை மேற்கொள்கிறது.

ஆப்கன் பிரச்சனையைப் பொறுத்த அளவில் சந்தேகிக்கத் தக்க நிலைகளிருப்பினும் அரசாங்கத்தின் கொள்கை நிதானமாகவும், அமெரிக்காவின் திட்டங்களைத் தடுப்பதாகவும் உள்ளது.

மேற்காசியாவிலுள்ள சில கோஷ்டி சேரா நாடுகள் கடுமையாக நிர்பந்தித்தாலும் கூட, அரசாங்கம் இந்தக் கொள்கையில் தொடர்ந்து உறுதியாக இருக்கிறது. அதேபோன்று, கம்பூச்சியாவின் பாலும் போராடும் வியட்நாமுக்கு ஆதரவளிப்பதிலும், கோஷ்டி சேராத்தன்மைக்கொப்பவும், அமெரிக்க சதித்திட்டங்களை முறியடிக்க உதவும் வகையிலும் அதனுடைய நிலை உள்ளது. எதிர்த்தரப்பை சீனு ஆதரித்த போதிலும், தென்கிழக்கு ஆசியா மற்றுமுள்ள பிரதேசங்களிலுள்ள சில கோஷ்டிச் சேரா நாடுகளின் நிர்ப்பந்தம் இருந்த போதிலும் அரசாங்கம் தனது நிலையில் உறுதியாக இருந்தது.

பாகிஸ்தானுடனும், பங்களாதேசத்துடனும் நட்பை விரும்புவதாகவும், பிரச்னைகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளலாம் எனவும் அறிவித்ததானது இந்தத் துணைக் கண்டத்தின் மக்கள் நலனுக்கு உகந்ததேயாகும்.

அண்டை நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியம் சூழ்ச்சிகளைப் புரியும்போது, நமது நாட்டின் பாதுகாப்பைப் பற்றி அரசாங்கம் கவலைப்படுவது நியாயமானதே!

இதற்கு மாருக, நாட்டைப் பாதிக்கும் வேறு பல முக்கியமான பிரச்னைகளில், அமெரிக்காவின் மனதைப் புண்படுத்திவிடுவோமோ என்றஅச்சத்தினுலும், நாலா பக்கமும் இருந்து வரும் நிர்ப்பந்தங்களினுலும், இந்தியாவின் குரல் பலஹீனமாகவும், புரிந்துகொள்ள முடியாத வகையிலும் ஒலிக்கிறது. இந்துமாக் கடல் விஷயத்தில் ''இரு பெரும் வல்லரசுகள்'' என்று அடிக்கடி கூறுவது, நண்பனையும் பகைவனையும் சமமாக்கிப் பார்ப்பதற்கு ஒப்பாகும். கோஷ்டிச்சேரா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில், டையகோ கார்ஷியாவைப் பற்றிப் பேசாமலிருக்க ஒத்துக்கொண்டது, ஒரு முக்கியமான விஷயத்தில் அரசாங்கத்தின் ஊசலாட்டத்தைக் காட்டுகிறது.

ஏகாதிபத்திய அமெரிக்காவையும், சோஷலிச சோவியத் யூனியனையும் ஒரே சமமாக்கும் ''இரு பெரும் வல்லரசுகள்'' என்ற தத்துவம், உலகெங்கிலும் அமெரிக்கா புரிந்து வரும் போர் முயற்சிகளைத் திரை போட்டு மறைப்பதாகும். நண்பனுக்கும் பகைவனுக்குமிடையில், இந்தியா தன்னை மையப்படுத்திக் கொள்வது, இந்தியாவின் உண்மையான எதிரியின் சதித் திட்டங்களை மறைப்பதற்கே உதவுகிறது. இது சோவியத் எதிர்ப்பு, அமெரிக்க ஆதரவு சக்திகளையே ஊக்குவிக்கிறது.

நமது பொருளாதாரம் மென்மேலும் அதிகமாக மேற்கத்திய உலகத்தை நம்பி வருவதால், வெளியுறவுக் கொள்கையில் ஆளும் கட்சியின் ஊசலாட்டங்கள் அதிகரிக்கும். மக்களிடமிருந்து மென் மேலும் தனிமைப்பட்டு வரும் ஆளுங் கட்சியால், ஏகாதிபத்தியத் தின் சதித் திட்டங்களை முறியடிக்கவோ, நாட்டைப் பாதுகாப்பதற் காக மக்களைத் தட்டியெழுப்பவோ இயலாது.

அதனுடைய மக்கள் விரோதப் பொருளாதாரக் கொள்கை கள் மூலம் மக்களைப் பகைத்துக் கொள்கிறது. வெளிநாட்டு அபாயங் களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் வேளையிலேயே, பிரதமர், இடதுசாரிகளின் தலைமையிலுள்ள அரசாங்கங்கள் மீது தாக்குதல் களை நடத்தி வருவதால் மக்களை மேலும் பகைத்துக் கொள்கிறார். இவையனைத்தும், நாட்டின் பாதுகாப்பை பலவீனப்படுத்துவதாகும்.

வெளியுறவுக் கொள்கைகளிலுள்ள ஊசலாட்டங்களை எதிர்த்துப் போராடுவதும், ஏகாதிபத்தியத்தின் சதித் திட்டங்களை அம்பலப்படுத்தி அதன் முகமூடியைக் கிழித்தெறிவதும், மக்களிட முள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வுகளைப் பலப்படுத்துவதும், மார்க்சிஸ்ட் கட்சி மற்றுமுள்ள இடதுசாரி ஜனநாயகச் சக்திகளின் உடனடிக் கடமையாகும்.

அதேபோன்று இந்தியாவிற்கும் சோசலிச நாடுகளுக்கு மிடையிலிருக்கும் நட்பு உணர்வுகளை மேலும் நெருக்கமாக்குவதும், பலப்படுத்துவதும் மிகவும் முக்கியமானது. ஏகாதிபத்தியத்தைத் திருப்திப்படுத்துவதற்காக அந்தநட்புறவுகளைத் தளர்த்தும்போக்கை அம்பலப்படுத்தி அதை முறியடிக்கவும் வேண்டும்.

சந்தர்ப்பவாதத்திற்கும், சோவியத் எதிர்ப்புக்கும் எதிரான போராட்டம்

ஏகாதிபத்திய எதிர்ப்பின் அடிப்படையிலான, வெளியுறவு கொள்கைக்கான விடாப்பிடியான போராட்டத்தை நடத்தும் பொழுதே, சில பூர்ஷ்வா-நிலப்பிரபுத்துவக் கட்சிகளின் சந்தர்ப்ப வாதத்தையும், பாரதீய ஜனதா கட்சியின் அடிப்படையில் ஆழமான சோவியத் எதிர்ப்பு, கம்யூனிச எதிர்ப்புக் கொள்கைகளையும், மார்க் சிஸ்ட் கட்சியும், மற்ற இடதுசாரி ஜனநாயக சக்திகளும் எதிர்த்துப் போராட வேண்டும். ஜனதாவும் மற்றும்சில பூர்ஷ்வாக் கட்சிகளும் ஆப்கானிஸ்தான், கம்பூச்சியா, வியட்நாம் பிரச்சினைகளில் சந்தர்ப்ப வாத நிலையையும், சோவியத் எதிர்ப்பு நிலையையும் கடைப்பிடித் தன.

பாரதீய ஜனதாகட்சி சோவியத் யூனியனைக் கடுமையாக விமர்சனம் செய்வதற்கு, ஆப்கானிஸ்தான், கம்பூச்சியா பிரச்சினை களைப் பயன்படுத்திக் கொண்டது. பாரதீய ஜனதா கட்சி உண்மை,

யான கோஷ்டி சேராமைக் கொள்கை என்ற பெயரில் தொடர்ந் சோவியத் எதிர்ப்பு நிலையையே கடைப்பிடித்து வருகிறது.

கோஷ்டி சேராமை என்ற பெயரிலான பாரதீய ஜனதாக் கட்சியின் விதண்டவாதம், இந்திய-சோவியத் நட்புறவு ஒப்பந்தத் துக்கு ஊறு விளைவிப்பதாகவே அமைந்திருக்கிறது. அமெரிக்க வெளி யுறவுக்கொள்கையை உருவாக்குபவர்களின் நோக்கமும் அதுதான்.

ஆளுங்கட்சியின் நம்பிக்கை தேய்கிறது

உட்கட்சி நெருக்கடியும், கட்சியில் தொடர்ந்துவரும் திற மையின்மையும், ஆளுங்கட்சியைப்பற்றிய நம்பிக்கையைக் குறைத்து வருகின்றன. கட்சிக்குள் ஜனநாயகம் என்பதுஅறவே இல்லை. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக எந்த மட்டத்திலும் கட்சித் தேர்தல்கள் நடைபெறவில்லை. ஒரே தலைவரே கட்சியில் முழுமையாக ஆதிக்கம் செலுத்துகிறார். மத்தியிலும், மாநிலங்களிலும் திறமையற்றவர் களையே அமைச்சர்களாக நியமிப்பது என்பதை ஆளுங்கட்சி ஒரு கலை யாகவே கற்றுக்கொண்டுவிட்டது.

ஆளுங்கட்சியின் தேர்தல் தளம் குறுகிக் கொண்டே வருகிறது. அண்மையில் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் அதைக் காணமுடிந்தது.

மேற்கு வங்கத்தில், இ.காங்கிரஸ் நகராட்சித் தேர்தல்களை பகிஷ்கரித்தது. தன்னம்பிக்கை ஏதுமில்லாமலேயே சட்டமன்ற இடைத் தேர்தல்களில் பங்குபெற்ற அக்கட்சி, செகண்டரிக்கல்வி போர்டு தேர்தல்களை பகிஷ்கரித்தது தேர்தலில் நிச்சயம் தோற்று விடுவோம் எனத் தெரிந்தவுடனேயே, தேர்தல் பகிஷ்காரம் என்று அக்கட்சி குரலெழுப்பிவிடும். இப்படி அந்த கட்சி தனிமைப்படுத்தப் பட்டு வருவதால் ஜனாதிபதி ஆட்சி முறை பற்றி அக்கட்சி சிந்தித்து வருகிறது.

மாநில முதல்வர்களின் நடவடிக்கை லஞ்சமும், ஊழலுமாய் நாறிப் போயிருக்கின்றன.

இதில் அந்துலேயை எவராலும் வெல்ல முடியாது. தனது அர சாங்க அதிகாரத்தைப் பயன்படுத்தி, தனதுடிரஸ்டுகளுக்காக பெரும் தொகைகள் வசூல் செய்து, அந்த டிரஸ்டுகளில் ஒன்றுக்கு பிரதம ரின் பெயரையும் வைத்துக் கொண்டவர் அவர். ஐம்பதாம் வருடங் களில் நடைபெற்ற முந்திரா ஊழல், எழுபதாம் வருடங்களில் நடைபெற்ற மாருதி ஊழல் ஆகியவற்றிற்குப் பின் இந்தியாவை உலுக்கிவிட்ட பெரிய ஊழல் அந்துலே ஊழலாகத்தான் இருக்க முடியும்.

இத்தகைய சூழ்நிலையில், இந்திராகாந்தி அதிகார வர்க்கத் தில் தனக்கு நம்பகமானவர்களையும், கட்சியில் தனக்கு துதிபாடுப

வர்களையுமே மென்மேலும் நம்பிச் சார்ந்து வருகிறார். சர்வாதிகார ஆட்சி ஸ்தாபிக்கப்படும் போக்கில் உண்மையான ஆட்சியாளர்களின் வட்டம் மிகமிக நெருங்கிக் கொண்டேயிருக்கிறது. எனவே தவிர்க்க முடியாமல் ஆளுங்கட்சியானது இந்த லட்சியத்தை நோக்கியே சென்றுகொண்டிருக்கிறது. இதற்கு மாறான வாக்குறுதிகளை அள்ளி வீசிக்கொண்டே நேர்மாறாக நடக்கிறது.

கடுமையான நெருக்கடியின் சிறப்பு அம்சங்கள்

இந்த அமைப்பின் கடுமையான நெருக்கடியின் சில சிறப்பு அம்சங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பொருளாதார, அரசியல் இயக்கங்களில் ஈடுபட்டுவராத சாதாரண மக்களைப் பாதிக்கக்கூடிய வகையில் சட்டமும் ஒழுங்கும் நிலை குலைந்து வருவது அதில் ஒரு அம்சம்.

சட்டமும் ஒழுங்கும் நிலைகுலைவதற்கு எதிராக மக்களின் கோபாவேசம் பொங்கி எழுகிறது. காவல் நிலையங்களை வளைத்துக் கொள்கிறார்கள். குண்டர்களுக்கு ஒத்துக்கையாக இருந்த அல்லது மக்கள்மீது தாக்குதல் தொடுத்து குற்றமிழைத்த அதிகாரிகளை தண்டிக்க வேண்டும் என்று கோருகிறார்கள்.

இவை பட்டினியால் ஏற்படும் கொந்தளிப்புகள் அல்ல. நிர்வாகம் சீர்குலைவதை எதிர்க்கும் நடவடிக்கைகளே இவை. அரசியல் நடவடிக்கைகளுடன் தொடர்பு ஏதுமில்லாத மக்கள் கூட இதில் கலந்து கொள்கின்றனர்.

காவல்துறையினரும், அதிகார வர்க்கமும், சமூக விரோத சக்திகளும் சதிக் கூட்டுச் சேர்வது அதிகரித்துக் கொண்டே வருவது மோசமாகி வரும் சூழ்நிலையின் மற்றுமொரு அம்சமாகும். இந்திரா காந்தி மீண்டும் பதவிக்கு வந்த இந்த ஒன்றரையாண்டுகளில் இது அதிகரித்திருக்கிறது.

சமூக விரோதிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் மத்தியில் ஏற்பட்டுள்ள தொடர்பு இன்னொரு அம்சமாகும். சஞ்சய் சேனை இந்த கூட்டுக்கு சரியான எடுத்துக் காட்டாகும்.

அமைச்சர்கள், ஆளுங்கட்சி, தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் ஆகிய எவராலும் அதிகார வர்க்கத்தையும், குறிப்பாக காவல்துறையையும் கட்டுப்பாட்டுக்குள் வைக்க அறவே இயலாமற் போய்விட்டது முற்றிவரும் நெருக்கடியின் மற்றுமொரு அம்சம்.

அதிகாரிகளின் லஞ்சஊழல் ஒருபுறமிருக்க, கொள்ளை, கற்பழிப்பு, கொலை செய்பவர்கள் மீது கூட அவர்களால் நட

வடிக்கை எடுக்க இயலவில்லை. கைது செய்யப்பட்ட சிலரை காவல் துறையினரே கொலைசெய்து விட்டு ஆயுதங்களுடன் நடந்த மோதலில் அவர்கள் இறந்து விட்டனர் எனக் கதை கட்டி விடுகின்றனர்.

எமர்ஜென்சி மீண்டும் வராது என அடிக்கடி வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டாலும் கூட ஆளுங்கட்சியைச் சேர்ந்த சூறவளிப் படையினரின் துணையுடன் போலீஸ் ராஜ்யம் ஒன்று உதயமாவது கண்களுக்குப் புலப்படுகிறது.

சர்வாதிகார ஆட்சியை நோக்கி...

பொருளாதார நிலைமை மோசமடைவதால், மக்களின் கோபம் அதிகரிப்பதையடுத்து, மக்களின் அதிருப்தி எந்த ரூபத்தில் வெளிவந்தாலும் அதைக் கடுமையாக அடக்கி விடுவதென்ற வகையில் ஆளுங்கட்சி முயன்று வருகிறது. ஆகவே, போலீஸ் நடவடிக்கைகள், அதிகார வர்க்கம், நிர்வாகத்தினுடைய சட்டபூர்வமற்ற நடவடிக்கைகள் ஆகியவற்றை ஆளுங்கட்சி நம்பி நிற்பது அதிகரித்துக் கொண்டே வருகிறது.

சாதாரண மக்களுக்கெதிரான நடவடிக்கைகளுடன், ஜனநாயக இயக்கத்தையும், ஜனநாயக சக்திகளையும் நவீன ஆயுதங்களுடன் அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகளும் தொடர்ந்து வருகின்றன.

தேசிய பாதுகாப்புச் சட்டம் என்பது எமர்ஜென்சி காலத்திய கொடுங்கோல் சட்டமேயாகும் தனி நபர் சுதந்திரத்தை இல்லாத தாக்கி விடும் ஒரு நடவடிக்கையேயாகும்.

இதைத் தொடர்ந்து, வேலை நிறுத்தங்களைத் தடை செய்வதற்காக அத்தியாவசிய சேவைப் பராமரிப்புச் சட்டத்தை அரசாங்கம் இயற்றியிருக்கிறது. இதன் மூலம், தொழிற்சங்க இயக்கத்தின் சுதந்திரத்தின் மீதும், ஸ்தாபனம் அமைக்கும் உரிமையின் மீதும் தாக்குதல் தொடுக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் எமர்ஜென்சி கால நிலைமைகள் மீண்டும் சட்டமாக்கப்படுகின்றன என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

அரசாங்கம், மெள்ளமெள்ளஇரகசியமாக பத்திரிகைகளை மிரட்டி வருகிறது. ஒருவகையான செய்தித் தணிக்கை முறையும் கொண்டு வரப்படுகிறது. பத்திரிகைகள் சில இரகசியங்களை அம்பலப்படுத்தும் போது, ஆளுங்கட்சியும் அதன் கையாட்களும் பத்திரிகைகளைமிரட்டுகிறார்கள். பத்திரிக்கைகளின் வாயை மூடுவதற்காக அவற்றைப் பழி வாங்கப் போவதாகவும் அவர்கள் மிரட்டுகின்றனர். துணிவான சில பத்திரிகை நிருபர்களும், ஆசிரியர்களும் ஆளுங்கட்சியின் கூலிப்பட்டாளத்தினால் தாக்கப்படுகின்றனர். (ஒரிஸ்ஸா, கர்நாடகா)

பழைய காலத்து பிரிட்டிஷ் சட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டு தனிப்பட்ட பிரஜைகளுக்கு வரும் கடிதங்களை, வெட்கங்

கெட்ட முறையில் அரசாங்கம் தணிக்கை செய்துவருகிறது. நாடாளு மன்ற உறுப்பினர்களின் தபால்களைத் தணிக்கை செய்வதை லோக் சபாவின் சபாநாயகர் நியாயப்படுத்துகிறார்.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையிலான அந்தஸ்து தற்போது தேவையற்றது அனுவசியம் என்றாகிவிட்டது. இந்திரா ஆட்சியில் மக்களுடைய அரசியல் நல்வாழ்வுக்கு இப்போது பொறுப்பானவர்கள், உண்மையில் ஆட்சி செய்பவர்கள் யாரென்றால் போலீஸ் அதிகாரிகள்தான்! ஆளுங் கட்சி, நாடாளுமன்றத்திலும், பெரும்பாலான சட்டமன்றங்களிலும் தனக்கிருக்கும் பெரும்பான்மையை வைத்துக்கொண்டு, நாடாளு மன்ற நடைமுறைகளைக் கேலிக்கூத்தாக்கி வருகிறது.

சபாநாயகர்கள் பாரபட்சமின்றி நடந்துகொள்வதென்பது எல்லாம் அறவே கைவிடப்பட்டுவிட்ட விஷயம். ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கிடையில் தினமும் நடந்து வரும் மோதல்க ளின் கொந்தளிப்பில் எதிர்க்கட்சிகளுக்குப் பாதகமாக முடிவு செய் வதுதான் சபாநாயகர்களின் வேலை.

கேள்விகளுக்குப் பதிலளிக்கப்படும் முறை, அமைச்சர்கள் அவைக்குத் தகவல்கள் அளிக்கும் முறை, பிரேரணைகள் தள்ளுபடி செய்யப்படும் முறை ஆகிய அனைத்தும் நாடாளுமன்ற அமைப்புக்கள் ஒரு கட்சி ஆட்சியின் எந்திரங்களே என்பதைத் தெளிவாகக் காட்டு கின்றன.

எதிர்க்கட்சிகளை துச்சமென மதிப்பதும், ஆளும் கட்சியின் குற்றங்களையும் ஊழல்களையும் ரத்தம் கொதிக்கும்படியான நியாயப் படுத்தும் அமைச்சர்களின் போக்கும் மக்களை பிரதிநிதித்துவப்படுத் தும் அமைப்புகளுக்கு அவமானம் ஏற்படுத்துபவை. எதேச்சாதிகார ஒரு நபர் ஆட்சியில் என்னவெல்லாம் வரக் காத்திருக்கின்றன என்ப தற்கு இது ஒரு முன்னுதாரணமாகும்.

அரசியல் சாசனத்தின் கீழ் மாநில அரசுகளுக்குக் கொடுக் கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் மீது மேலும் மேலும் தாக்குதல் தொடுத்து மத்தியில் அதிகாரங்களை குவித்துக் கொள்வது சர்வாதி காரத்தை நோக்கிச் செல்லும் போக்கின் ஒரு பகுதியேயாகும். மாநிலங்களுக்கே உரித்தான சில பிரத்யேக அதிகாரங்களுக்குட் பட்ட பிரச்சனைகளிலும், மத்திய அரசாங்கம் தான்தோன்றித்தன மாகத் தலையிடுகிறது. பொதுப்பட்டியலிலிருக்கும் அதிகாரங்களோடு சில புதிய அதிகாரங்களைச் சேர்க்கவும் திட்டமிடப்பட்டு வருகிறது. சர்வாதிகார சக்திகளை எதிர்த்து நடத்தும் போராட்டத்தின் ஒரு பகுதியாக, மாநில அதிகாரங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் களுக் கெதிராகவும் போராடவேண்டும். மாநிலங்களின் அதிகாரங் களை விரிவுபடுத்துமாறும் கோரிக்கை எழுப்பப் படவேண்டும்.

நீதித்துறைக்கெதிராக, குறிப்பாக சுப்ரீம் நீதிமன்றத்திற்கெதிராக ஆளுங்கட்சிதாக்குதலைத் தொடுத்து வருகிறது. ஏனெனில் உச்சநீதிமன்றத்திலுள்ள பல நீதிபதிகள் ஜனநாயகக் கோட்பாடுகளைக் கொண்டவர்களாகவும், மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பவர்களுமாகவும் இருக்கின்றனர்.

அரசியல் சாசனத்தின் அடிப்படைத் தன்மையை மாற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு உரிமை இல்லை என்பது உச்சநீதிமன்றம் அறிவித்திருக்கும் கருத்து. இந்த கருத்து அரசியல் சாசனத்தை நினைத்தபடி திருத்துவதற்கு இடையூறாக உள்ளது. உச்சநீதிமன்றத்தில் புதிய நியமனங்கள் மூலம் தங்களுக்குச் சாதகமான நீதிபதிகள் பெரும்பான்மையாக வந்தவுடன் இந்த கருத்தைஉடைத்தெறிந்து விடலாம் என நிர்வாகத்திலுள்ளவர்கள் உறுதி பூண்டிருக்கின்றனர்.

ஜனாதிபதி ஆட்சிமுறையைத் திணிப்பதற்கும், அரசியல் சாசனத்தை திருத்துவதற்கும் தங்களுக்கு எல்லையில்லா அதிகாரங்கள் உண்டு என ஏற்றுக் கொள்ளக்கூடிய, தங்களுக்குப் பணிந்து நடக்கக் கூடிய நிர்வாகத்துக்குக் கீழ் அடங்கிய ஒரு அமைப்பாக நீதித்துறையை மாற்றிவிட வேண்டுமென்பதே ஆளுங்கட்சியின் நோக்கம்.

நிர்வாகத்திற்கு அடிபணிந்து சேவை செய்யும் நீதித்துறைக்கான முயற்சிகளை எதிர்க்கும் போராட்டம், ஒரு கட்சி ஆட்சித் திணிப்புக்கெதிராக நடைபெறும் போராட்டத்தின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாகும். இதையெதிர்த்து மிகப் பரந்துபட்ட பொதுவான ஒரு எதிர்ப்பணியை உருவாக்குவது தேவை.

இரண்டாவது நோக்கமான ஜனாதிபதி ஆட்சிமுறை கொண்டு வருவதற்காக தொடர்ந்து முயற்சிகள் நடத்தப் படுகின்றன. பொதுமக்களின் கருத்தை இதற்கெதிராக திரட்டினாலொழிய ''அரசியல் சாசன'' முறைகளின் மூலமாகவே இந்திராகாந்தி தனது முயற்சிகளில் வெற்றியடையக் கூடிய அபாயம் உண்டு.

அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் ராஜ்யசபைத் தேர்தல்களில் ஆளுங்கட்சிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைப்பதற்கு சாத்தியமுண்டு. கிடைத்தவுடனேயே ஜனாதிபதி ஆட்சிமுறைக்கான அரசியல் சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும்.

எனவேதான், இந்தத் துரோக முயற்சிகளை முறியடிப்பதற்காக மக்களைத் தட்டியெழுப்ப வேண்டியது மிக அவசியம்.

ஜனாதிபதி ஆட்சி முறைக்கான முயற்சிகளுக்கெதிராக, பூர்ஷ்வா எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட பரந்துபட்ட மிகப்பெரிய எதிர்ப்பு அணியை கட்டுவது சாத்தியமே.

தற்போதைய நாடாளுமன்ற அமைப்பிற்குப் பதிலாக, ஜனதிபதி ஆட்சி என்று பேசப்படுவதன் பொருள் என்ன? ஒரு கட்சி ஆட்சி ஒரு நபர் சர்வாதிகாரம் இறுதியில் கட்சித் தலைவரின் தனிநபர் சர்வாதிகாரம் — இவற்றின் மொத்தமான உருவம்தான் அது. நாடாளுமன்றமும், சட்டமன்றங்களும், நீதித்துறையும், மக்களின் அடிப்படை உரிமைகளும், சுதந்திரமும், எதிர்க்கட்சிகளின் சுதந்திரமும், நிர்வாகத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்டே இருக்க முடியும். தற்போது இருந்து வரும் சுதந்திரத்தைப் பாதுகாப்பதிலும் மேலும் முன்னேறி அவற்றை விரிவுபடுத்துவதிலும் தொழிலாளி வர்க்கமும், மக்களும் மிகவும் அக்கறை கொண்டிருக்கின்றனர்.

இடதுசாரிகளால் தலைமை தாங்கப்படும் அரசாங்கங்களுக்கெதிரான தாக்குதல்கள்

எதேச்சாதிகாரச் சக்திகளுக்கும், ஜனநாயக சக்திகளுக்கும் இடையே போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இ. காங்கிரஸ் அரசாங்கம், இடதுசாரி அரசாங்கங்கள் மீது திரும்பத் திரும்ப தாக்குதல்கள் தொடுப்பது இந்த மோதல்களின் ஒரு பகுதியாகும்.

இடதுசாரி கட்சிகள் ஆளும் மாநிலங்களில், அவற்றிற்கெதிராக கண்மூடித்தனமாக பொய்களையும், அவதூறுகளையும் பரப்புவதோடு, பிற்போக்குச் சக்திகள், சமூகவிரோதக் கும்பல்கள் ஆகியவற்றின் துணையுடன் அந்த மாநிலங்களில் இ. காங்கிரஸ் சட்ட ஒழுங்கு பிரச்சனைகளை உருவாக்கியது.

கடந்த ஏப்ரல் மாதத்தில், மேற்குவங்கத்தில் 'பந்த்' நடத்துவதற்கு அறைகூவல் விடுத்த இ. காங்கிரஸ் கல்கத்தா நகரில் தீவட்டி வன்முறையை கட்டவிழ்த்து விட்டது.

மேற்குவங்கத்திலுள்ள காங்கிரஸ் (எஸ்) கட்சியும், அமைச்சரவைக்கெதிரான இயக்கத்தில் இ. காங்கிரசுடன் சேர்ந்து கொண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அடாவடித்தனமாக நடந்து கொள்கிறதெனவும், வன்முறையில் ஈடுபடுகிறது என்றெல்லாம் கூறி இ காங்கிரசின் அவதூறுகளுக்கும் போராட்டங்களுக்கும் துணை நின்றது.

திரிபுரா மாநிலத்திலும், இடது முன்னணி அரசாங்கம், மத்திய அரசாங்கம் மற்றும் இ. காங்கிரசின் தொடர்ந்த தாக்குதல்களுக்கு ஆட்படுத்தப்பட்டது.

மத்திய அரசு தனது அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தி, இந்த இரண்டு மாநிலங்களிலும் உணவு உட்பட மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பண்டங்களின் சப்ளையை நிறுத்தி மக்களைப் பட்டினிக்குள்ளாக்கியது.

இதைத் தவிர திரிபுராவில், இ. காங்கிரஸ் ஆட்கள் சிலர் ஆதிவாசிப் பிரிவினைக் கோஷ்டியுடன் வெளிப்படையாக இணைந்து நின்று திரிபுரா மக்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களைச் சூறையாடினர். அந்தப் பிரிவினை கோஷ்டி இந்திய எல்லைக்கு அப்பாலிருந்து உதவி பெறக் கூடியதொன்றாகும். அதே போல் ஆதிவாசிகளுக்கெதிரான அம்ரா வங்காளி, ஆனந்த மார்க்கி ஆகிய அமைப்புகளுடன் இ. காங்கிரஸ் கைகோர்த்துக் கொண்டது.

கேரளாவில், கூட்டணி அமைச்சரவைக்கு ஊறுவிளைவிக்கும் நோக்கத்தோடு, ஆர். எஸ். எஸ், நக்சலைட் நடவடிக்கைகளை பயன்படுத்திக் கொண்ட இ. காங்கிரஸ் நாடுமுழுவதும் அவதூறுப் பிரச்சாரம் செய்தது. திருமதி. காந்தி கேரளத்திற்கு வருகை தந்தபோது ஆர். எஸ். எஸ்ஸின் கொலைத் தாண்டவங்களைப்பற்றி ஒருவார்த்தை கூடப் பேசவில்லை. நக்ஸலைட்டுகளுடைய வன்முறைகளை, அமைச்சரவைக்கு எதிராக விமர்சனம் செய்வதற்கும். சட்டம் ஒழுங்கு குலைந்து விட்டது என்று நிரூபிப்பதற்கும் பயன்படுத்திக் கொண்டது.

இத்தகைய வெளிப்படையான இயக்கங்களைத் தவிர, இந்த மூன்று மாநிலங்களிலும் நிறைவேற்றப் பட்ட பல மசோதாக்களுக்கு ஜனாதிபதி ஒப்புதல் கிடைப்பதைத் தடுப்பதற்காக இந்திராகாங்கிரசின் அரசாங்கம் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தது. குறிப்பாக, இப்போது மேற்குவங்கம் அனுப்பிய 20 மசோதாக்களுக்கும் கேரளம் அனுப்பிய 4 மசோதாக்களுக்கும் நீண்ட காலமாக ஒப்புதல் கிடைக்காமலிருந்து வருகிறது. இதில் மேற்கு வங்கம் அனுப்பிய முக்கியமான நிலச் சீர்திருத்தச் சட்டத்திருத்தங்கள் உள்ளன.

இந்த மசோதாக்களுக்கெல்லாம் ஒப்புதல் அளிக்கப்பட்டால் அவை அந்த மாநிலங்களில் அமுல் படுத்தப்பட்டு விடும். அப்படி அமுல்படுத்தப் பட்டால், இவைகளெல்லாம் இ. காங்கிரஸ் மாநிலங்களில் கடைபிடிக்கப் படும் சுயநல சக்திகளுக்கு ஆதரவான கொள்கைகளினின்று தெளிவாக மாறுபட்டு நிற்கும் இடதுசாரி மாற்றுக் கொள்கை என்பது மக்களுக்குத் தெரிந்து விடும். அதனால், ஏற்படும் விளைவுகளுக்கு பயந்துதான் இ. காங்கிரஸ் அரசாங்கம் இந்த மசோதாக்களுக்கு ஒப்புதல் கிடைக்கவிடாமல் பார்த்துக் கொள்கிறது.

இ.காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டது

இடதுசாரிகள் தலைமையில் உள்ள அரசாங்கங்களைக் கவிழ்க்கும் முயற்சிகளில் இ.காங்கிரசும், மத்திய அரசாங்கமும் திரும்பத்திரும்ப தோல்வியைத் தழுவி வருகின்றன.

ஆழமான பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும், இந்திரா காந்தி மீண்டும் பதவிக்கு வந்த பின்பு கூட இந்த அமைச்சரவைகள் தொடர்ந்து பதவியிலிருப்பதானது, இந்தியாவின் சர்வாதிகார சக்திகளுக்கு எதிராக ஜனநாயக சக்திகள் நடத்திவரும்

போராட்டத்தின் ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியென்றே கூறவேண்டும்.

வளர்ச்சியடைந்த இந்த ஜனநாயகத்தின் எல்லைக்கப்பங்கள் சர்வாதிகாரப் புயலுக்குப் பின்னும் நிமிர்ந்து நிற்கின்றன வென்றால் அதற்குக் காரணம் ஜனநாயக சக்திகளின் பரவலான ஆதரவு அவற்றுக்கு இருப்பதால்தான், சர்வாதிகாரத்திற்கெதிராக பரந்துபட்ட அணியைக் கட்டவேண்டுமென்ற மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முயற்சிகள், நாடுமுழுவதிலுமுள்ள உணர்வு பூர்வமாக வளர்ச்சி பெற்ற மக்கள் பகுதியினரின் விழிப்புணர்ச்சி ஆகியவற்றின் மூலம் நாடாளுமன்ற நடைமுறைகள் பிழைத்திருப்பதால், இந்த அமைச்சரவைகளும் பதவியில் நீடிக்கின்றன.

இந்த அமைச்சரவைகளுக்கு சில சாதனைகளும், சில மாற்று கொள்கைகளும், மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் தன்மையும் இல்லாதிருந்தால், அமைச்சரவைகளுக்கு ஆதரவு என்பதையே நினைத்துப் பார்த்திருக்க முடியாது.

இந்திரா காந்தி மீண்டும் பதவிக்கு வந்தபோது இந்த அமைச்சரவைகளின் தலைவிதி தானாகவே முடிந்துவிடும் என்று நினைத்திருந்தவர்கள், ஜனநாயக சக்திகளின் வலிமையையும், சர்வாதிகாரத்திற்குள்ள எதிர்ப்பையும் குறைத்து மதிப்பிட்டு விட்டனர்.

நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகளை உறுதிப்படுத்துவதிலும், எதேச்சாதிகாரத்திற்கெதிராகப் போராடுவதிலும், இடதுசாரி ஒற்றுமையைப் பலப்படுத்துவதிலும் இந்த இடது முன்னணி அரசுகள் பதவியிலிருந்து நன்கு செயல்பட்டதன் மூலம் பெரும்பங்கு வகித்திருக்கின்றன.

தங்களது மாநில எல்லைகளுக்கப்பால் நெடுந்தொலைவிலும் கூட அவைகளுக்கு ஒரு பாத்திரம் உண்டு.

கேரள அமைச்சரவை பதவி விலகல்

தனது அவதூறுப் பிரச்சாரத்தின் மூலமும், ஆர்.எஸ் எஸ். நக்சலைட் நடவடிக்கைகளைப் பயன்படுத்திக் கொண்டதன் மூலமும், இ. காங்கிரசினால் சாதிக்க முடியாத ஒன்றை அமைச்சரவையிலிருந்து வெளியேறிச் சென்றதன் மூலம் காங்கிரஸ் (எஸ்) கட்சியாலும் இதைத் தொடர்ந்து கேரள காங்கிரஸ் (மாணிபிரிவு) கட்சியாலும் சாதிக்க முடிந்தது.

உண்மையில். கேரள இடதுசாரி - ஜனநாயக முன்னணி அமைச்சரவை இடதுசாரி கட்சிகளைக் கொண்ட கூட்டு அல்ல. அதில் இடதுசாரிக் கட்சிகளும், இடதுசாரியல்லாத பூர்ஷ்வா எதிர்க்கட்சிகளும் அடங்கும். ஒரு இடதுசாரி முன்னணி அமைச்சரவையில் எதிர்பார்க்கக்கூடிய பொதுவான நோக்கத்துடன்

கூடிய ஒற்றுமையை இத்தகைய கட்சிகளிடம் எதிர்பார்க்க முடியாது.

21 மாதங்களுக்கு முன்பு நடந்த சட்டமன்றத் தேர்தலில், இந்தக் கூட்டணி இ.காங்கிரஸ் கட்சியைத் தோல்வியுறச் செய்து, ஜனநாயக சக்திகளுக்கும், சர்வாதிகார சக்திகளுக்குமிடையிலான போராட்டத்தில் பங்கு வகித்தது. அமைச்சரவை அமுல்படுத்திய கொள்கைகள் ஏற்கனவே தேர்தல் காலத்தில் உறுப்புக் கட்சிகள் அனைவரும் ஒப்புக் கொண்டவைதான் என்றாலுங்கூட, இந்தக் கட்சிகளின் வர்க்க நோக்கு அந்தக் கொள்கைகளுடன் இணையவிடாமல் அவர்களைத் தடுத்து விட்டது.

இந்த இரண்டு கட்சிகளும், குறிப்பாக காங்கிரஸ் கட்சி, இந்த ஜனநாயகக் கொள்கைகளை அமுல் நடத்துவதில் தங்களது பதவிகளைப் பயன்படுத்திக் குறுக்கீடு செய்து வந்தன. மாநில அரசின் அதிகாரங்களை மாவட்டக் கவுன்சில்களுக்கு பரவலாக்குவது, இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்குப் பென்ஷன் வழங்குவது, தொழிலாளர் இலாகா ஜனநாயக ரீதியில் இயங்குவது ஆகியவையே அக்கொள்கைகள்.

உள்துறை சரியாக நிர்வகிக்கப்படவில்லையென்றும், சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்றெல்லாம் காங்கிரஸ் (எஸ்)கூக்குரலிட்டதற்கு உண்மையான காரணம் என்னவென்றால், தொழிலாளர்களையும், சாதாரண மக்களையும் அடக்கியொடுக்குவதற்கும், சுயநல சக்திகளைப் பாதுகாப்பதற்கும் காவல்துறை பயன்படுத்தப்பட வேண்டும் என அவர்கள் விரும்பியதேயாகும்.

இடதுசாரி ஜனநாயக முன்னணியிலிருந்து காங்கிரஸ் (எஸ்) கட்சியின் கேரள மாநிலக்கிளை விலகிச் சென்றுவிட்டதால், எதேச்சாதிகாரத்திற்கெதிராக பரந்தஅணியைகட்டுவதற்கானதொடர்ந்த விடாப்பிடியான முயற்சி தேவையில்லை என்ற முடிவுக்கு வரக் கூடாது.

பூர்ஷ்வா எதிர்க்கட்சிகளும், எதேச்சதிகார எதிர்ப்பும்

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தியும, ஜனாதிபதி ஆட்சி முறையைத திணிப்பதில் ஆளுங்கட்சி உறுதி பூண்டும இருப்பதால், பூர்ஷ்வா எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட பரந்த மக்கள் பகுதியினர் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் போராட்டத்தில் இறங்குவது தவிர்க்க முடியாதது.

பொருளாதார நெருக்கடி தீவிரப்படுவதன் விளைவாக பூர்ஷ்வா ஆளுங்கட்சிக்கும் பூர்ஷ்வா எதிர்க்கட்சிகளுக்கும் இடையே

அரசு இயந்திரத்தைப் பிடிப்பதற்கான போராட்டமும் தீவிரமடைந்துள்ளது, இந்த மோதல் மேலும் தீவிரமடைந்து பரவும்.

ஜலந்தர் காங்கிரஸ் அரசியல் தீர்மானம் கூறுகிறது: ''எதேச்சாதிகார சக்திகளுக்கெதிராக ஜனநாயக சக்திகளின் எதிர்ப்பின் முழு பலத்தையும் மோதவிடும் வகையில் மிகப்பரந்த ஆதரவை திரட்டுவதற்கு கட்சி அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இத்தகைய ஜனநாயக மாற்றங்களை ஆதரிக்கக் கூடிய சக்திகள், குழுக்கள், பகுதியினர், தனிநபர்கள் முதலியோர் நமது கட்சியின் அல்லது இடதுசாரி — ஜனநாயக முன்னணியின் பொருளாதாரத் திட்டங்களை ஆதரிக்காமலிருக்கக் கூடும். இருப்பினும், இந்த பரந்த அணிக்கு ஆதரவு தருவதன் மூலம், சர்வாதிகார சக்திகளை எதிர்க்கும் போராட்டத்தில் அவர்கள் தங்கள் பங்கை ஆற்றுவார்கள்.''

''சர்வாதிகார சக்திகளை எதிர்க்கும் போராட்டத்தில் அவர்களிடம் சில மாறுபாடுகளும், ஊசலாட்டங்களும் இருக்கக் கூடும் ஜனநாயகத்துக்கான போராட்டம் பரந்துபட்ட மக்கள் பகுதியை ஈர்க்கும் வகையில், ஆளும் வர்க்கங்கள் மற்றும் அவற்றின்கட்சிகளிலிருக்கும் நபர்கள் எதேச்சாதிகார எதிர்ப்பு நிலை எடுப்பதற்கு தயாராயிருந்தால் அவர்களையும் இந்த அணியில் இணைத்துக்கொள்ள வேண்டும்.''

பின்னால் நடந்த நிகழ்ச்சிப் போக்குகளைப் பார்க்கும் போது நமது பத்தாவது கட்சிக் காங்கிரசின் நிர்ணயிப்பு சரியானதே என்பது புரியும்

இந்திரா காந்தி பதவிக்கு வந்த தொடக்கத்தில் எதிர்க்கட்சிகள் பல்வேறாய் சிதறிவிட்டிருந்த போதிலும் கூட, ஒட்டுமொத்தமான எதிர்ப்பு எண்ணம் தொடர்ந்து மேலோங்கி வளர்ந்து வந்தது; வெகுஜனப் போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கியவுடன் இது மேலும் வலுவடைந்தது.

ஆனால் இந்தக் கட்சிகளிடம் ஊசலாட்டங்களும், தயக்கங்களும், குழப்பங்களும் இருந்திருக்கின்றன. எந்த பூர்ஷ்வாக் கட்சியிலும் ஒற்றுமையைக் கட்டிக்காப்பது மிகவும் கடினமான விஷயம் என நமது ஜலந்தர் தீர்மானம் சுட்டிக்காட்டியது.

ஆகவே, இந்தக் காலங்களில், மற்ற கட்சிகளிலிருந்து சிலர் இ.காங்கிரஸ் கட்சிக்கு தாவிவிட்டனர். ஒரு காலத்தில் இ.காங்கிரசிலிருந்து கட்சி தாவல்கள் இருந்து வந்தன என்பதும் உண்மை. அர்ஸ் காங்கிரசிலிருந்து சவானும், ஜெகஜீவன்ராமும் கட்சி தாவினர். இன்னும் சிலரும் அக்கட்சியிலிருந்து வெளியேறக் கூடும். ஜனதாக் கட்சி, தனது உட்கட்சிமுரண்பாடுகளின் காரணமாக முன்கையெடுத்துச் செயல்பட முடியாமல் வாளாவிருக்கிறது. லோக்தளத்தில் உட்கட்சி சண்டை முற்றிப்போய், சில முக்கியத் தலைவர்கள் வெளியேற்றப்படக் கூடிய நிலைமை இருந்து வருகிறது.

பாரதீய ஜனதாக் கட்சி மக்களைப் பாதிக்கின்ற அன்றாடப் பிரச்சனைகளில் தலையிடுவதன் மூலம், தீவிரமாக தனக்கு ஒருதோற்றத்தை உருவாக்கிக்கொண்டு வருகிறது. இ. காங்கிரசுக்கு, பிஜேபி தான் மாற்று சக்தி என்ற வகையில் பத்திரிகைகளும் அக்கட்சியை விளம்பரப் படுத்தி வருகின்றன. பிஜேபி தனது ஆர். எஸ். எஸ். ஆதரவாளர்களின் உதவியுடன் துரோகத்தனமான சூழ்ச்சிகளில் ஈடுபட்டு வருகிறது. காங்கிரசுக்கு மாற்று சக்தி என்ற அந்தஸ்தை அடைகின்ற வெறியில், தனக்கு செல்வாக்கு இல்லாத இடங்களில் கேடுகெட்ட முறையில் இ. காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து வருகிறது. 1980 தேர்தல்களிலேயே இந்தத் தந்திரத்தை அக்கட்சி கையாண்டது. கார்வால் தொகுதியில் நடைபெற்ற லோக்சபா இடைத் தேர்தலில் பகுகுணாவிற்கெதிராக இ. காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்தது.

பிஜேபி தான்தான் காங்கிரசுக்கு மாற்று என படம் காட்டிக் கொள்கிறது. ஆனால் அண்மையில் நடைபெற்ற இடைத் தேர்தல்கள் அதையெல்லாம் கேலிக் கூத்தாக்கி விட்டன.

இந்த இடைத் தேர்தல்களில், பிஜேபியும் மற்ற பூர்ஷ்வா எதிர்க்கட்சிகளும், இ. காங்கிரசுக்கெதிராக ஒரு சரியான தேர்தல் எதிர்ப்பைக் கூட காட்ட இயலாதவை என்று தங்களைவெளிக்காட்டி விட்டன. தோல்விகளால் உந்தப்பட்டு, மீண்டும் ஒன்றுபட வேண்டும் என்ற எண்ணம் அக்கட்சிகளிடம் எழுந்திருக்கிறது. இடதுசாரிக்கட்சிகளையும் இடதுசாரிசக்திகளையும்ஒதுக்கிவிட்டு, தங்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க வேண்டுமென்றும் அவற்றில் சில கட்சிகளின் தலைவர்கள் சிந்தித்து வருகிறார்கள்.

பரந்த எதிர்ப்பு அணியைக் கட்டுவதற்கான நமது கட்சியின் போராட்டம் அண்மை மாதங்களில் பல்வேறு வடிவங்களை எடுத்திருக்கிறது.

பூர்ஷ்வா எதிர்க்கட்சிகள் சோர்ந்து போய்க் கிடந்த நேரத்தில் நடைபெற்ற ஆறுகட்சி மாநாடு பரவலாக மக்களை அணிதிரட்டி செயல்பட வைப்பதில் சிறந்த பணியாற்றியது.

அதனுடைய வீச்சினால், கர்னாடகம், மகாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம், பீகார், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் மாநாடுகள் நடைபெற்றன. விலைவாசி உயர்வுக்கெதிராக ஒன்றுபட்ட ஆர்ப்பாட்ட இயக்கம் நடைபெற்றது. மாநில சட்டமன்றங்கள் முன்பாக ஆர்ப்பாட்டங்களுக்காகவும் திட்டமிடப்பட்டது.

ஆனால் ஆறுகட்சி மாநாட்டின் சில தலைவர்களிடம் ஊசலாட்டம் தொடங்கியது. சரண்சிங், சவான் போன்ற பல கட்சிகளின் பழமை வாதிகளான தலைவர்களுக்கு இடதுசாரி சக்திகளுடன் இணைந்து செல்வதில் அதிக நாட்டமில்லை.

வெகுஜன அதிருப்தியும் குறிப்பாகவிவசாயிகளின் மத்தியில் அமைதியின்மையும் ஏற்பட்டிருந்த நேரத்தில்தான் அவர்கள் இவ்வாறு தயக்கம் காட்டினர். எனினும் விவசாயிகளின் இயக்கத்திற்கு

ஆறுகட்சி மாநாடு அளித்த உத்வேகத்தை யாராலும்மட்டுப்படுத்த முடியவில்லை.

பூர்ஷ்வா எதிர்க்கட்சிகளுக்கும்,ஆளுங்கட்சிக்கும்அதிகரித்து வரும்மோதலை தினமும் நாடாளு மன்றத்திலும், மாநில சட்டமன்றங்களிலும் காணமுடியும். இது நாடாளுமன்றத்தில் எழுப்பப் படும் முக்கியமான பிரச்சினைகளில், இடதுசாரி மற்றும் பூர்ஷ்வா எதிர்க்கட்சிகள் ஒன்றாக சேர்ந்து, கூட்டாக எதிர்ப்பது என்ற ஏற்பாட்டுக்கு வழிகோலியது.

அரசாங்கம் அதன் ஏஜன்சிகள், ஆளுங்கட்சி ஆகியவற்றின் திருவிளையாடல்களையெல்லாம் பூர்ஷ்வாப் பத்திரிக்கைகளே மிக விரிவாக அம்பலப் படுத்தின. அதன் மூலம் அவர்களுக்கிடையிலான மோதலைக் காணமுடிந்தது. ஒவ்வொரு நாளும் தவறாமல், அரசாங்கத்தின் கொள்கைகள்,அதனுடைய பொருளாதாரக் கொள்கைகள் அந்நிய நாட்டு ஸ்தாபனங்களுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள், எல்லாவற்றிற்கும் மேலாக லஞ்ச—ஊழல், அதிகார துஷ்பிரயோகம்—சட்டம் ஒழுங்கு சீர்குலைவு பற்றியெல்லாம் பத்திரிகைகள் உணர்வைத் தட்டிவிடும் வகையில் அம்பலப்படுத்தி வருகின்றன.

எமர்ஜன்சி காலத்திற்கு சிறிது முன்பாக செய்தது போல் அரசாங்கத்தின் ஒவ்வொரு தவறையும், டலவீனத்தையும் அவை கடுமையாக விமர்சிக்கின்றன.

மக்களின் பிரஜா உரிமைகளைப் பாதுகாப்பதற்கும். ஆளுங் கட்சியை அம்பலப் படுத்துவதற்கும், நாடாளுமன்றம் ஒரு குறிப் பிடத்தக்க மேடையாக மாறிவிட்டது.

தேசியப் பாதுகாப்புச் சட்டம், அத்தியாவசிய சேவை பராமரிப்புச்சட்டம், கவர்னர்களை பதவியிலிருந்து விரட்டியது, வரி விதிப்பு, விலைவாசியேற்றம் அனைத்துக்கும் மேலாக மேலிடங்களிலுள்ள ஊழல்கள் ஆகிய அனைத்துப் பிரச்சினைகளிலும், அரசாங்கம் தனிமைப்படுத்தப்பட்டது.

இடது முன்னணி அரசாங்கங்களைக் கவிழ்ப்பதற்கு, இது வரை இந்தக் கட்சிகள் எதுவும் இ. காங்கிரசுக்கு ஆதரவளிக்க மறுத்துள்ளன.

அந்தக் கட்சிகள் சொந்த முறையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியுடனோ, அது தலைமை தாங்கும் அமைச்சரவைகளுடனோ மோதாமலில்லை. அந்தக் கட்சிகளின் மாநிலப் பிரிவுகள் நமது கட்சியைப்பற்றி அடிக்கடி அவதூறு செய்கின்றன. மேற்குவங்க இடது முன்னணி, கேரள கூட்டணி அரசு இவைகளுக்கெதிராக, இ.காங்கிரசுக்கு மறைமுகமாக உதவியும் செய்திருக்கின்றன. ஆனால் அவற்றின் அகில இந்தியக்கட்சித்தலைமைகள் அந்தநிலையைஆதரிப்பதிலிருந்து ஒதுங்கியே நின்றன. தற்போது, காங்கிரஸ் (எஸ்)கட்சி கேரள முன்னணியிலிருந்து வெளியேறிவிட்டது. அந்த முடிவை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி (எஸ்)யும் ஆதரித்திருக்கிறது. இந்தக் கட்சிகளில் ஊசலாட்டங்களும், முரண்பட்ட போக்குகளும்

உண்டு. கேரளாவில் காங்கிரஸ் (எஸ்) கட்சி கூட்டணியில் இருந்தாலும், மேற்கு வங்கத்தில் அக்கட்சி நம்மை எதிர்த்தே நின்றிருக்கிறது.

இத்தகைய ஊசலாட்டங்கள் இருந்தபோதிலும் அக்கட்சிகளின் சில தலைவர்களுக்கு இடதுசாரிகளைப் பற்றிய அச்சம் இருந்தபோதிலும், நாடாளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும், எதேச்சாதிகாரத்திற்கெதிரான பரந்த எதிர்ப்பு அணி வளர்ந்து கொண்டிருக்கிறது; தொடர்ந்து வளரும்.

இன்றைய நிலவரத்தில் விரிந்த எதிர்ப்புக்கான மேடை கீழ்க்காணும் அம்சங்களைக் கொண்டுள்ளது:

1) ஜனாதிபதி ஆட்சி முறைக்கு எதிர்ப்பு. 2) நிர்வாகத் துறைக்கு நீதித்துறையை அடிமைப்படுத்துவதற்கான திட்டத்தை எதிர்த்துப் போராட்டம் 3) பிரஜா உரிமைகள், ஜீவாதார உரிமைகள் மீதான தாக்குதல்களுக் கெதிரான போராட்டம் 4) தேசியப் பாதுகாப்புச் சட்டம், அத்தியாவசிய சேவைப் பராமரிப்புச் சட்டம் ஆகிய சட்டங்களை ரத்து செய்யக் கோருவது 5) தடுப்புக் காவலுக்கு வகை செய்யும் அரசியல் சாசனப் பிரிவை நீக்கக் கோருதல் மற்றும் ஜலந்தர் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கோரிக்கைகள்..

வகுப்பு ஒற்றுமை, குடியுரிமைகள், விலைவாசி ஆகிய பிரச்சினைகளின் மீது நடைபெற்ற ஆறுகட்சி மாநாடு கூட்டான வெகு ஜனப் போராட்டத்திற்கு உத்வேகம் அளிப்பதாக இருந்தது.

இந்தக் கட்சிகள் மற்றும் அவற்றின் வெகுஜன ஸ்தாபனங்களின் தலைமையில் நடத்தப்பட்ட மார்ச் 26-விவசாயிகள் பேரணியானது மேற்கண்ட அமைப்புகளின் ஒன்றுபட்ட வெகுஜனப் போராட்டங்களின் மகத்தான வெற்றியாகும்.

பல மாநிலங்களில், பல கட்சிகளின் ஆதரவில் நடத்தப்பட்ட விவசாயிகளின் போராட்டம் அதன் சாதனைகள், அகில இந்திய கிசான் ஒருங்கிணைப்புக் கமிட்டி உருவாக்கப்பட்டது, இவையெல்லாம் ஒன்றுபட்ட வெகுஜனப் போராட்டத்தின் மிக முக்கியமான வெற்றிகளில் ஒன்றாகும்.

இந்தக்காலம் முழுவதும் கட்சியின் சுயேட்சையான வெகுஜன நடவடிக்கைகள் அதிகரித்து வந்துள்ளன. தொழிலாளிகளின் உடனடிக் கோரிக்கைகளுக்காக ஒருநாள் வேலை நிறுத்தத்திற்கான அறைகூவல் வந்ததுடன், வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், விலைவாசி உயர்வுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் ஒற்றையாகவும், இதர இடதுசாரி கட்சிகளுடன் கூட்டாகவும் நடத்தப்பட்டுள்ளன. பஸ்கட்டண உயர்வை எதிர்த்தும் இதர பல அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து பெரும் கிளர்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளன. இவற்றிலெல்லாம் மாணவர்களும், பெரும் திரள் மக்களும் கலந்து கொண்டுள்ளார்கள். போலீஸ் துப்பாக்கிச் சூடுகள்

வரை இதில் நடந்துள்ளன. சட்டமன்றங்களுக்கு முன்னுலும் வெகு ஜன கூட்டு ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றுள்ளன. பல மாநிலங்களில் வளர்ந்துவரும் அதிருப்தியை கைபிடித்துக் கொண்டு பல்வேறு கட்சிகளையும் அவற்றின் வெகுஜன அமைப்புகளையும் ஈடுபடுத்தும் கடமையில் கட்சி முன்னேற முடிந்தது.

இடது முன்னணி அமைச்சரவைகளின் சாதனைகள்

இடதுசாரி தலைமையிலான மூன்று அமைச்சரவைகள் இடதுசாரி சக்திகளை ஒரு சாதகமான நிலையில் அமர்த்தியுள்ளன. அவை புரிந்துள்ள சாதனைகள் எதேச்சாதிகார எதிர்ப்புப் போராட்டத்திற்கு பெருமளவு உதவியிருக்கின்றன.

இந்த அரசாங்கங்கள் சாமான்ய மக்களுக்கு உண்மையாக உழைத்துள்ளன; ஜனநாயகக் கடமைகளை காத்துள்ளன; பொருளாதார போராட்டங்களில் சுரண்டப்பட்ட மக்களுக்கு ஆதரவாக நிர்வாக இயந்திரத்தினை நிறுத்தியுள்ளன.

இடதுசாரி - தலைமையிலான அமைச்சரவைகளின் கீழ் முஸ்லீம் சிறுபான்மையினரும், தாழ்த்தப் பட்ட மக்களும் சிறப்பாக பாதுகாக்கப் பட்டுள்ளனர்; வகுப்புக் கலவரங்களும் இல்லாது போயுள்ளன. அதுமட்டுமல்லாது பல்வேறு வகுப்பாருக்கிடையில் அமைதியும் நல்லுறவும் அங்கே நிலவுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தாக்குதல் என்பதும் அங்கே இல்லை.

அங்கே அடிப்படைச் சுதந்திரங்களும் ஜனநாயக உரிமைகளும் உத்திரவாதப் படுத்தப்பட்டுள்ளன. தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் செய்யும் உரிமையும் பாதுகாக்கப்பட்டுள்ளது. அந்த உரிமை மாநில அரசு ஊழியர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று அரசாங்கமும் தடுப்புக் காவல் ஷரத்துகளை பயன்படுத்த மறுத்துவிட்டன.

முதலாளிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் மற்றும் இதர பகுதி மக்களுக்கு எதிராக காவல் துறையினர் தலையிடுவது என்பது அங்கே இல்லை. குத்தகை —வாரதாரர்கள், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகிய அனைவரது நலனும் முழுமையாக பாதுகாக்கப்படும் ஒரு புதிய சூழல் அங்கே உள்ளது.

தேர்தலின் போது அளிக்கப் பட்ட 36 உறுதிமொழிகளில் மிகப் பெரும்பாலானவற்றை நிறைவேற்றி முடித்திட்ட ஒரு மிகப் பெரும் சாதனையின் சொந்தக்காரனுக மேற்குவங்க இடதுசாரி அரசு திகழ்கிறது.

குறிப்பிடத்தக்க அளவு கூலி உயர்வும், போனசும் கிடைத்திட அனைத்து பகுதி ஆலைத் தொழிலாளர்களுக்கும் அரசு உதவியுள்ளது. அரசு ஊழியர்களுக்குப் புதிய ஊதிய விகிதமும், முழுமையான தொழிற்சங்க உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் விவசாயத் தொழிலாளர்களின் கூலி உயர்த்தப்பட்டுள்ளது; 17.5 லட்சம் ஏக்கர் நிலம் கிராமப்புற ஏழைகளுக்கு வினியோகிக்கப்பட்டுள்ளது; ''பர்கா அமைப்பும்'' (Operation Barga), நிலச்சீர்திருத்த சட்டத்திலே செய்யப்பட்ட திருத்தங்களும் எந்தவொரு குத்தகைதாரரையும் சட்டபூர்வமாக நிலத்திலிருந்து வெளியேற்றுவது என்பதையோ அல்லது விளைபொருளில் அவருக்குரிய பங்கினை மறுப்பது என்பதையோ தடுத்துவிட்டன. அதுமட்டுமில்லாது அவர்களுக்கு மலிவான கடன் வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. நிலவரி முறையிலிருந்த காலனி காலத்து குளறுபடி நீக்கப்பட்டு, அது திருத்தியமைக்கப்பட்டுள்ளது. நில உச்ச வரம்பு ஷரத்துக்களில் உள்ள நிலப்பிரபுக்களைத் தப்பிக்க வழி வகுக்கும் சந்து பொந்துகளை அடைத்திட நிறைவேற்றப்பட்ட நிலச் சீர்திருத்த மசோதா குடியரசுத் தலைவரின் அனுமதிக்காக இன்னும் காத்துக் கிடக்கிறது. இடதுசாரி அரசு சிறப்பாக நடைமுறைப்படுத்திய உழைப்பிற்கு உணவுத் திட்டம் பரவலாக பாராட்டப்பெற்றுள்ளது. வீட்டுவசதி உள்ளிட்ட பல்வேறு விஷயங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பழங்குடியினருக்கும் சிறப்பு இடம் அளிக்கப்பட்டுள்ளது.

முந்தைய ஆட்சியினால் சீர்குலைக்கப்பட்டிருந்த கல்வி நிலையங்களில் முறையான கல்விச் சூழலினை அரசு உருவாக்கியுள்ளது. பனிரெண்டாவது வகுப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்பட்டுள்ளது.

வேலையற்றோருக்கு உதவித் தொகையும், வயது முதிர்ந்த ஏழை விவசாயிகளுக்கு ஒய்வூதியமும் அளிக்கப்பட்டுள்ளது.

கேரளத்திலுள்ள இடதுசாரி-ஜனநாயக முன்னணி அரசு இந்த நாட்டிலேயே மிகச் சிறப்பானதொரு பொது வினியோக முறையினை நல்கியதில் ஒரு சாதனை புரிந்தது. ஓணம்பண்டிகையின் போது பொதுவாக விலைகள் கட்டுப்பாடின்றிஉயரும். ஆனால் கடந்த இரண்டாண்டு இடதுசாரி ஜனநாயக முன்னணி ஆட்சியில் காய்கறிகள், துணி மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்களெல்லாம் குறைந்த விலையில் பொது வினியோக முறையில் வழங்கப்பட்டன. இதன காரணமாக வெளிச்சந்தையிலும்விலைகள் கட்டுக்குள்வந்தன.

இடது ஜனநாயக முன்னணி அரசு கடைப்பிடித்த சரியானதொரு தொழிலாளர் கொள்கையின் காரணமாக தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களின் ஊதியம் உயர்ந்தது. அது மட்டுமல்லாது வேலை நிறுத்தங்களும் இதரபோராட்டங்களும் இல்லாமலேயே அவர்களுக்கு போனசும் கிடைத்தது; விவசாயத் தொழிலாளர்களுக்கும் வயது முதிர்ந்தோருக்கும், விதவைகளுக்கும் ஒய்வூதியம் அளிக்கப்பட்டது. வேலையில்லாதோருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது.

நெருக்கடிக்கு ஆளாகியிருக்கும்பழந்தொழில்களாகியமுந்திரி, கயிறு, கைத்தறித் தொழில்களில் வேலே பார்க்கும் தொழிலாளர்களுக்கு நிவாரணம் தரப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க மீனவர்களுக்கு உதவப்பட்டது. அவர்களுக்கு நிதி வசதியும் இதர வசதிகளும் தரப்பட்டன. விவசாயிகள் கடன் தொல்லேயிலிருந்து நிவாரணம் பெற்றனர்.

முதல் முறையாக திரிபுராவில் பழங்குடியினரின் கோரிக்கைகள் பல இடது முன்னணி அரசிஞல் நிறைவேற்றபபட்டுள்ளன. பழங்குடியினரின் சுயாட்சியுடைய மாவட்டக் கவுன்சில் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது; அம்மக்களின் காக்பராக் மொழி அங்கீகரிக்கப்பட்டுள்ளது; பழங்குடியினரிடமிருந்து இதரர்களிஞல் எடுக்கப்பட்ட நிலங்கள் மீண்டும் ஒரளவிற்கு அவர்கள் கைக்கு வந்துள்ளது. திரிபுராவிலுள்ள இடது முன்னணி அரசின் கீழ் வரிச்சுமையும் கடன் சுமையும் நலிந்த பகுதியினரது முதுகிலிருந்து இறக்கப்பட்டுள்ளது. குழந்தைகல்வி அனைத்துக்கட்டங்களிலும்இலவசமாக்கப்பட்டுள்ளது; விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் தினக் கூலிகளுக்கு கூலி உயர்வு கிடைத்துள்ளது; அவர்களுக்கு, உழைப்பிற்கு உணவுத் திட்டத்தின் கீழ் போதிய அளவு வேலே கொடுக்கப்பட்டுள்ளது. கிராமத்து ஏழைகள் கூட்டுறவு சங்கங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்; கந்துவட்டிக்காரர்கள், காண்டிராக்டர்கள் மற்றும் கொள்ளே லாப வியாபாரிகள் பிடியிலிருந்து கிராம மக்களே விடுவிக்க வெற்றிகரமான பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மாநிலங்களில் நமது இயக்கப்பணிகள்

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ந்துவரும் பலத்தையும் செல்வாக்கையும் குறைப்பதற்காகத்தான் அதன் தலேமையிலான இடதுசாரி அமைச்சரவைகள் மீது திட்டமிட்டு தாக்குதல் தொடுக்கப் பட்டது.

இந்திராகாங்கிரஸ் அரசுக்கும் மக்களுக்குமிடையிலான வளர்ந்துவரும் மோதலின் காரணமாக நாட்டிலே உருவாகும் பல்வேறு போராட்டங்களே ஆரம்பித்திடும்—மேலும் ஒருங்கிணைத்து முன்னின்று நடத்திடும்—கட்சியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி திகழ்வதால் ஆளுங்கட்சிக்கு இந்த தாக்குதல் அவசியமாகிறது. அதிலும் இந்த மோதலானது இந்திரா காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் மேலும் கூர்மையடையத் தொடங்கியது; 1980க்குப் பிறகு ஏற்பட்ட பரவலான வெகுஜன போராட்டங்களில் அது வெளிப்படவும் செய்தது.

இந்த போராட்டங்களில் எல்லாம் கட்சியும் இதர இடதுசாரி சக்திகளும் தங்களது முத்திரையினைப் பதித்துள்ளனர். இந்திபேசும் பகுதிகளில் கவனம் செலுத்துவது என்று கட்சி எடுத்திருந்த முடிவு

அனைத்திந்திய ஆர்ப்பாட்டங்களுக்கு பெருமளவில் வெகுஜனங்களைத் திரட்டிட உதவியுள்ளது.

விவசாயப் பேரணிக்கும், வாலிபர்-மாணவர் பேரணிக்கும் ராஜஸ்தானும், பீகாரும், உத்திரப்பிரதேசமும், மத்தியப் பிரதேசமும, ஹரியானாவும் பல ஆயிரக்கணக்கானோரை அனுப்பின. அடுத்து அத்தியாவசியப் பணிகள் பராமரிப்பு அவசரச்சட்டத்தினை எதிர்த்து நடைபெற்ற வெகுஜன, தொழிலாளி வர்க்க ஆர்ப்பாட்டத்திற்கு டெல்லியும் அதற்கருகிலுள்ள இந்தி பேசும் பகுதிகளும் பல ஆயிரக் கணக்கானவரைத் திரட்டிட முடிந்தது. இந்தப் பகுதிகளில் தொடர்ந்து தொழிற்சங்க இயக்கமும், மாணவர்-வாலிபர் இயக்கமும் நடைபெற்று வருகிறது. உத்திரப் பிரதேசம், ஹரியானா, ராஜஸ்தான், பீகார், மத்தியப்பிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் பல மாதங்கள் நீடித்த வேலைநிறுத்தப் போராட்டங்கள் நடத்தப் பட்டுள்ளன.

நம்மால் தலைமைதாங்கி நடத்தப்பட்டவெகுஜன அமைப்புகளின் சுயேட்சையான நடவடிக்கைகளும், இதரர்களுடன்இணைந்து நடத்தப்பட்ட வெகுஜன நடவடிக்கைகளும் இந்தப் பகுதிகளை முன்னெப்போதைக் காட்டிலும் பெரிய அளவில் போராட்டப் பாதையில் திருப்பிவிட்டுள்ளன. விவசாயிகள் கோரிக்கைகள் நீண்ட பயணம், மற்றும் இதர பிரச்னைகள் சமீபத்தில் முதலமைச்சர் செய்த ஊழல்கள் போன்றவற்றில் மகாராஷ்டிராவில் ஆறு அரசியல் கட்சிகளின் ஒன்றுபட்ட இயக்கங்கள் நடைபெற்று வருகின்றன. தொழிற் சங்கங்கள் இணைந்து நடத்தப்பெற்ற பிரம்மண்டமான ஊர்வலங்களையும், கண்டன வேலை நிறுத்தங்களையும் இந்த மாநிலம் கண்டது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி ஆகியவற்றிற்கிடையில் ஏற்பட்ட நெருங்கிய உறவின் காரணமாக இடதுசாரி சக்திகளுக்கிடையில் நெருங்கிய உறவு ஏற்பட்டுள்ளது.

கர்நாடகத்தில் விவசாயிகள் சங்கம் பெரும் விவசாயப் போராட்டத்தினை நடத்தியது. அங்குள்ள சிஐடியூ ஒன்றுபட்ட நடவடிக்கைகளையும், தொழிற்சங்க ஒற்றுமையினையும் உருவாக்குவதில் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

ஆந்திரப் பிரதேசத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில் உறவு பலப்படும் வகையில் ஒன்றுபட்ட நடவடிக்கைகளை உருவாக்குவதில்மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து முன்முயற்சி எடுத்துவந்துள்ளது. இந்த தொடர்ந்த போராட்டத்தின் விளைவாகத்தான் விஜயவாடா மாநகராட்சி தேர்தலில் இந்திரா காங்கிரஸ் முறியடிக்கப்பட்டது. மேலும் அரசினை எதிர்த்து ஒன்றுபட்ட நடவடிக்கைகளை சட்டமன்றத்திலே உருவாக்கிடவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

பஞ்சாபில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சிமற்றும் அகாலி கட்சியின் துணையோடு சட்டமன்றத்தினை முற்றுகையிட்டது. உட்பட பல வெகுஜன போராட்டங்களை நடத்தியது. விவசாயிகள் பேரணியில் அகாலி கட்சியும் ஆர்வத்துடன் கலந்து கொண்டது. ஆனால், சமீப காலங்களில் காலிஸ்தான் பிரச்சனையில் அகாலி கட்சியில் ஒரு பகுதியினர் சந்தர்ப்பவாத நிலையினை எடுத்து வருகின்றனர். அமிர்த சரசினை ஒரு புனித நகரமென அறிவிக்கவேண்டும் என்று வந்த பிரச்னையிலும் இவர்கள் இதே போன்றதொரு நிலையினை எடுத்தனர். இதுபோன்ற சந்தர்ப்பவாத நிலைகளுக்கு தன்னை பலியிட்டுக் கொள்ளாமல் ஆனால் அதே நேரத்தில் இடது ஜனநாயக சக்திகளின்ஒற்றுமைக்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி.

பீகாரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு கடினமான சூழலினை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. மாநிலத்தில் சட்டம்—ஒழுங்கு நிலை பெருமளவு சீர்குலைந்து போயுள்ளது; நிர்வாகம் எங்கே முடிகிறது, சமூக விரோதிகள் எங்கே தங்களது லீலைகளை ஆரம்பிக்கிறார்கள் என்று யாருக்கும் அங்கே தெரியாது. நிலப்பிரபுக்களுக்கும் நிர்வாகத்திற்கும் மற்றும் கொள்ளைக்காரர்கள் போன்ற சமூகவிரோதிகளுக்குமிடையில் நிலவும் உறவு இருக்கிறதே அது அந்த மாநில கிராமங்களில் மிக வெளிப்படையானதொரு விஷயம். விவசாயத் துறையில் ஏற்படும் முரண்பாடு இம்மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஓர் உச்சக் கட்டத்தினை எட்டியுள்ளது என்பதனை இது உணர்த்துகிறது. விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் திரட்டும்பொழுது கட்சி உறுப்பினர்கள் கடுமையானதொரு போராட்டத்தினை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. தாக்குதல்களையும், கொலைகளையும் எதிர்த்து அவர்கள் போராட வேண்டியுள்ளது. அந்தப் போராட்டத்தின் மூலம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியோடும் இதர இடதுசாரி கட்சிகளோடும் நெருங்கிய உறவினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வளர்த்து வருகிறது. அதே நேரத்தில் இடதுசாரி கட்சிகளுக்கும் இதர கட்சிகளுக்குமிடையில் ஒரு பரந்த உறவு ஏற்படவும் அது முயன்று வருகிறது.அனைத்துஅனைத்திந்தியபேரணிகளுக்கும் கட்சியும் அதன் தலைமையிலான வெகுஜன அமைப்புகளும் இம் மாநிலத்திலிருந்து மிகப் பெருவாரியானவர்களை அனுப்பியிருந்தன.

அஸ்ஸாமில் கட்சி, பிரிவினைவாதிகள் விடுத்துள்ள சவாலை எதிர்ப்பதிலும், அ[illegible]க நிறுவனங்களால் தூண்டிவிடப்பட்டு நடைபெறும் தாக்குதல்களை எதிர்த்து தேச ஒற்றுமையைப் பாதுகாப்பதிலும் முன்னணியில் உள்ளது. பிற்போக்குவாதிகளின் கடுமையான தாக்குதல்களை நமது தோழர்கள் முழுமையாக தாங்க வேண்டியிருந்தது. நமது தோழர்கள் பலர் வெட்டுண்டனர்; முடமாக்கப்பட்டனர்; கொலையும் செய்யப்பட்டனர். ஆனாலும் பிரிவினைவாதிகளை எதிர்த்து தேச ஒற்றுமை எனும் பதாகையினை நமது கட்சி தொடர்ந்து உயர்த்திப் பிடித்தது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

புரட்சி சோஷலிஸ்ட் கட்சி (RSP) புரட்சி கம்யூனிஸ்ட் கட்சி (RCPI) மற்றும் அனைத்து இடதுசாரிகட்சிகளின் ஆதரவினைப் பெற்றிடவும், அங்கு நடைபெறும இயக்கத்தின் பிற்போக்குத் தலைவர்களுக்கு எதிராக ஓர் ஒன்றுபட்ட இயக்கத்தினை நடத்திடவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினால் முடிந்தது. இந்திரா காங்கிரசினை எதிர்க்கிறேன் என்று பிரிவினைவாதிகளின் நிலையினை ஆதரிக்கத்தயாராகிவிட்ட ஜனதா, காங்கிரஸ்(அ) போன்ற முதலாளித்துவ எதிர்க் கட்சிகளுடன் கைகோர்த்துச் சென்றிட மார்க்சிஸ்ட் கட்சி மறுத்தது. ஆனால் அதே நேரத்தில் மாநிலத்தில் ஓர் அரசாங்கத்தினை நடத்திட இந்திரா காங்கிரஸ் எடுத்த அனைத்து முயற்சிகளையும் மார்க்சிஸ்ட் கட்சி தடுத்தது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த நடவடிக்கைகள் எல்லாம் கட்சியினையும் அதன் செல்வாக்கினையும் பலப்படுத்தியிருக்கிறது. இடதுசாரி சக்திகளையும் பலப்படுத்தியிருக்கிறது, அவற்றிற்கு மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கினையும் உயர்த்தியிருக்கிறது. பிரிவினைவாதிகளாலும் காவல்துறையினராலும் நமது வெகுஜன அமைப்புகள் தாக்குதலுக்குட்பட்ட இதே கால கட்டத்தில் தான் மாநிலத்திலுள்ளதோட்டப் பகுதிகளில் சி. ஐ. டி. யூ. வளர்ந்துள்ளது.

தமிழகத்தில் நமக்கும் அ.இ.அ.தி.மு.க. விற்குமிடையில் தேர்தல் உறவு இருந்தது, தி.மு.க.வின் குறுகிய கோஷ்டி உரசல்களிலிருந்து விலகி நின்று அ.இ.அ.தி.மு.க. அரசிற்கு விமர்சன பூர்வமான ஆதரவினையோ அல்லது குறிப்பிட்ட பிரச்சனைகளில் அந்த அரசிற்கு நமது எதிர்ப்பினையோ தெரிவித்து வந்திருக்கிறோம். இந்திரா காங்கிரசைப் பொறுத்த வரையில் எம்.ஜி.ஆர். அரசிற்கு ஏற்பட்ட ஊசலாட்டங்களை நாம் விமர்சித்ததும், அவரது அரசின் சில ஜனநாயக விரோத நடவடிக்கைகளை நாம் எதிர்த்ததும், அ.இ.அ.தி.மு.க. அணிகளுக்கு நாம் பொறுமையாக பிரச்சனைகளை எடுத்துச் சொன்னதும் வேண்டிய பலனைத் தந்திருக்கிறது. இரு கட்சிகளையும் பின்பற்றுவோரிடையே பொது உறவு ஏற்பட்டுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உள்ளூர்த் தலைவர்கள் பிரச்சனைகளை உருவாக்கினாலும் அக்கட்சிக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையில் மாநிலத்தில் உறவு பலப்பட்டு வருகிறது. ஒன்றுபட்ட போராட்டங்களுக்கும் வெகுஜன நடவடிக்கைகளுக்கும் அறைகூவல்கள் விடுக்கப்பட்டுள்ளன. அவை வெகுஜன இயக்கங்களுக்கு பேருதவியாய் இருக்கின்றன.

குஜராத்தில் இட ஒதுக்கீடு பிரச்சனையில் முதலாளித்துவ கட்சிகளினால் தூண்டி விடப்பட்ட வெறித்தனமான ஹரிஜன எதிர்ப்பினை எதிர்த்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போராடியது. இட ஒதுக்கீடு எதிர்ப்பு போராட்டத்தின்போது அனைத்து முதலாளித்துவ கட்சிகளையும் அது எதிர்க்க வேண்டியிருந்தது. இந்திய கம்யூனிஸ்ட்

கட்சி மற்றும் இதர சக்திகள், தொழிற்சங்க தலைவர்களின் துணையோடு வர்க்க ஒற்றுமையினைக் காத்திட கட்சி போராடியது. ஹரிஜனங்களுக்கு கட்சி அளித்த உதவி, ஜனநாயக மற்றும் பொருளாதாரப் பிரச்சனைகளில் அது தலையிட்டது என்பதெல்லாம் கட்சியின் வெகுஜன நடவடிக்கைக்கு உந்து சக்தியாக இருந்துள்ளது.

டெல்லி மாநிலக்குழு அனைத்திந்திய பேரணிகளுக்கும், மாநிலத்தில் நடைபெறும் போராட்டங்களுக்கும் பொறுப்பேற்க வேண்டியுள்ளது. மாநிலத்திலுள்ள சி.ஐ.டி.யு. பொதுக் கோரிக்கைகளுக்காக ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைத் திரட்டுவதில் முன்கை எடுத்துள்ளது; அதேபோன்று இதர தொழிற்சங்க அமைப்புகளின் உதவியோடு பல எதிர்ப்பு வேலை நிறுத்தங்களையும், வெகுஜன நடவடிக்கைகளையும் போராட்டங்களையும் நடத்துவதில்வெற்றி கண்டிருக்கிறது. தன்னுடைய பதாகையின் கீழேயும் அது பல வேலை நிறுத்தங்களை நடத்தியுள்ளது;அதுவெல்லாம் ஸ்தாபனத்தினைபலப்படுத்தியுள்ளது. இந்திய மாணவர் சங்கம், வாலிபர் சங்கம் மற்றும் இதர ஸ்தாபனங்கள் புதுப்பலம் பெற்று வருகின்றன.

கேரளத்தில் இந்தக் கால கட்டத்தில் கட்சியும் வெகுஜன ஸ்தாபனங்களும் சுயேச்சையாக நடத்திய, அதேபோன்று இடதுசாரி மற்றும் இதர சக்திகளோடு இணைந்து நடத்திய எண்ணற்ற வெகுஜன நடவடிக்கைகள் நடந்தேறியுள்ளன.

வாலிபர், மாதர், மாணவர் விவசாயத் தொழிலாளர்,விவசாயி, ஆசிரியர் என்று அனைத்து அரங்கங்களிலும் நமது நடவடிக்கைகள் பரவியுள்ளன. அனைத்து வெகுஜன அமைப்புகளின் உறுப்பினர் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது; அது கூட்டணியில் நமது கட்சி ஒரு பிரதான சக்தி என்றுள்ள நிலையினை பலப்படுத்தியுள்ளது.

காங்கிரஸ் (அ) மற்றும் அதுபோன்று இயங்கும் கேரள காங்கிரஸ் போன்ற மாநில கட்சிகள் உள்ளிட்ட பல கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசு ஒன்றினை கேரளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடத்தி வந்தது. இதில் இருந்த சில கட்சிகள் (1969—79) மார்க்சீய—விரோத கூட்டணியில் அங்கம் வகித்தவை. அவை தங்களது வர்க்க பார்வையையும் விடவில்லை; தங்களது மார்க்சீய விரோத கண்ணோட்டத்தையும் கைவிடவில்லை. நமது கட்சியின் பால் அவர்களுக்கு இருந்த இந்த விரோத மனப்பான்மை அரசு இயங்குவதிலும், மக்களின்பால் அதற்குள்ள பொறுப்பினை நிறைவேற்றுவதிலும் பெரும் இடையூறுகளை விளைவித்தது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோ அல்லது இடதுசாரி சக்திகள் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, புரட்சி சோஷலிஸ்ட் கட்சி) முழுமையுமோ பெரும்பான்மை கூட்டணியில் பலத்தினை பெற்றிராத காரணத்தினால் நிலைமை மேலும்சிக்கலானது.

கூட்டணிக்குள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வந்த எதிர்ப்புகளையும் இடையூறுகளையும் எதிர் கொள்ள வேண்டியிருந்ததால மிகக் கடினமானதொரு பணியினை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலையில் கேரளத்தில் நமது கட்சியும், அமைச்சரவையிலிருந்த நமது தோழர்களும் இருந்தனர்.

கேரளாவில் இந்திரா காங்கிரஸை ஆட்சிக்கு வரவிடாமல் செய்வதில இந்த விரிந்த கூட்டணி வெற்றி கண்டது. இந்த யதேச்சாதிகாரத்தை எதிர்த்த போராட்டத்தில் நமது கட்சி எத்தகைய கஷ்டங்களையும், இடையூறுகளையும் சந்திக்க வேண்டியிருந்தது என்பதைஇந்தகட்சிகளின் விரிந்த சேர்க்கையே காட்டும்.

மேற்கு வங்கத்தில் இந்திரா காங்கிரசின் தாக்குதல்களையும் முறியடித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடது முன்னணி வெற்றிக்கு மேல் வெற்றியாக ஈட்டி வருகிறது. ஜனதா, காங்கிரஸ் (எஸ்) போன்ற முதலாளித்துவ எதிர்க்கட்சிகளின் மேற்குவங்கப் பிரிவுகள் வெளிப்படையாக அல்லது மறைமுகமாக காட்டிடும் எதிர்ப்புகளையும் சமாளித்து முன்னணி தனது கடமைகளை நிறைவேற்றி வந்துள்ளது காங்கிரஸ் (எஸ்) குறிப்பாக ஜனதா தங்களது தாக்குதல்களில் தீவிரம் காட்டி வருகின்றன. பல நேரங்களில் இந்திரா காங்கிரசோடும் கைகோர்த்துக் கொள்கின்றன

ஆனால் மக்கள் சக் யும் மக்கள் மத்தியில் நமக்குள்ள ஆதரவும், இந்தக் கட்சிகளை தனிமைப்படுத்தியுள்ளன. ஆரம்பத்தில் இதர கட்சிகளுடன் சேர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இடது முன்னணி அமைச்சரவையின் பால் விரோத மனப்பான்மையினைக் கடைத் பிடித்தது ஆனால் 1980 நாடாளுமன்றத் தேர்தலின் போது ஏற்பட்ட உறவின் காரணமாக அதன் போக்கு மாறியது. இன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் முன்னணியில் இணைந்துள்ளது. பகுகுணாவின் ஜனநாயக சோஷலிச கட்சியும் சேர்க்கப்பட்டு முன்னணி பலப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தக் காலங்களில், தொழிலாளர் நலனுக்கான வேலை நிறுத்தங்களிலிருந்து, அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் விவசாயிகள் பேரணி முதல் எத்தனையோ பல வெகுஜன போராட்டங்களையும் மேற்கு வங்கம் கண்டுள்ளது. இடது முன்னணி அரசினைப் பாதுகாக்கும் முகத்தான் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து ஆர்ப்பாட்டம் நடத்தினர் 1981 ஏப்ரல் 3-ஆம் நாள் இந்திரா காங்கிரஸால் நடத்தப்பட்ட சுட்டுப்பொசுக்கும் பந்த்தினை துணிச்சலாக எதிர்த்து நின்ற டிராம்வே தொழிலாளர்களின் பங்கு இங்கு குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது. மாணவர், வாலிபர், மாதர் அமைப்புகள் இப்பொழுது பல்லாயிரக் கணக்கான உறுப்பினர்களைச் சேர்த்துள்ளன. விவசாய சங்கத்திலோ நாற்பது இலட்சம் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். கட்சி நாளொரு மேனியும் பொழு

தொரு வண்ணமுமாய் வளர்ந்து வருகிறது. மக்கள் மத்தியில் அதன் செல்வாக்கு மிக உயர்ந்து நிற்கிறது.

திரிபுராவில் நமது கட்சி சோதனைகளும், வேதனையும் நிறைந்த மிகக் கடினமான சவால்களை எதிர்த்து நிற்க வேண்டி வந்தது மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவது எனும் போரை மக்களின் சார்பாக நமது தலைமையிலான அமைச்சரவை புதிய வேகத்தோடு விடாது தொடர்ந்தது.

பழங்குடியினருக்கும் வங்காளிகளுக்குமிடையில் ஆத்திர மூட்டும் கலகங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன என்பது நமக்கொரு சோதனையாக வந்தது. இந்தியாவிலிருந்து பழங்குடி மக்களைப் பிரிக்கும நோக்கத்துடன் பிரிவினை கோஷங்களைக் கொடுத்த பாப்டிஸ்ட் கிறிஸ்தவ மிஷனரிகளின் தாக்குதலுக்கெதிராக கட்சி போராட வேண்டியிருந்தது. மிக மிக கடுமையான ஆத்திரமூட்டும் நிலைமைக்கு மத்தியிலும் பழங்குடியினருக்கும் வங்காளிகளுக்குமிடையில் இருந்த ஜனநாயக ஒற்றுமையினை பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலும் கட்சி பெரும் வெற்றி கண்டது. இந்த ஒற்றுமையின் மீதுதான் ஏகாதிபத்திய ஏஜெண்டுகளும் இந்திரா காங்கிரஸ் தலைவர்களும் குறி வைத்து தாக்கினர். ஆனால் அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர்..

ஒரு கட்டத்தில் நிர்வாகத்தினைக் கவிழச் செய்துவிடலாம் எனும் நப்பாசையில் மூன்று இலட்சம் மக்களை அகதிகள் முகாமிற்கு அனுப்புவதில் அவர்கள் வெற்றி பெற்றனர். நமது கட்சி இவர்களை எதிர்த்துப் போராடியது; அவர்களை முறியடிக்கவும் செய்தது. தொடர்ந்து பழங்குடியினரையும், வங்காளிகளையும் தலைமை தாங்கிச் செல்கிறது. ஜனநாயக இயக்கத்தின் தலைவனாக நமது கட்சியே விளங்கி வருகிறது.

நமது கட்சி தலைமையின் காரணமாக ஏகாதிபத்திய சதித் திட்டங்களை முறியடித்து பழங்குடியினரும் பழங்குடியினரல்லாதவரும் ஒன்றுபட்டு வாழும் ஒரே மாநிலம் வடகிழக்குப் பிராந்தியத்தில் திரிபுரா ஒன்றுதான்.

இடது ஜனநாயக சக்திகளைத் திரட்டுவதிலும் சர்வாதிகார ஆட்சிக்குபரந்தஎதிர்ப்பினைஉருவாக்குவதிலும்கட்சி எல்லாஇடங்களிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அதனுடைய நடவடிக்கைகள் ஆளும் கட்சிக்கு கோபத்தையும் எரிச்சலையும் கொடுத்திருக்கிறது. மூன்று மாநிலங்களில் அது ஈட்டியுள்ள வெற்றிகளும் மேற்கு வங்கத்தில் இந்திரா காங்கிரசிற்கு கிடைத்த தேர்தல் தோல்வியும் பரவலான மக்கள் பகுதியினரால் பாராட்டப் பெற்றுள்ளது; அவர்கள் சர்வாதிகார எதிர்ப்பு போராட்டத்தினை தீவிரப்படுத்திட நமக்கு உதவவும் செய்கிறார்கள். ஆயினும், திருப்தி அடைவதற்கு வழியில்லை. பல மாநிலங்களில் கட்சி பலவீனமாயிருப்பது இன்றுள்ள

சாதகமான சூழ்நிலையினை இன்னும் பெரிய அளவில் பயன்படுத்தி பெரும் முன்னேற்றம் காணுவதிலிருந்து கட்சியினை தடுக்கிறது. விரிந்து பரந்த எதிர்ப்பிற்கு முதலாளித்துவ எதிர்க்கட்சிகளிடமிருந்து வரும் இடையூறுகளை முறியடிப்பதிலோ, அல்லது இவர்களுக்கும் ஆளும் கட்சிக்குமிடையில் ஏற்படும் முரண்பாடுகளை ஜனநாயகத்தினை பாதுகாப்பதற்காக திருப்பி விடுவதிலோ அல்லது சர்வாதிகார சக்திகளை தடுத்து நிறுத்துவதிலோ நம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் வெற்றி பெறுவதில்லை

இதர கட்சிகளின் நடவடிக்கைகளில் நமது செல்வாக்கினைப் பயன்படுத்தும் அளவிற்கு இன்னும் பல மாநிலங்களில் நமது கட்சியின் சொந்த பலம் போதுமானதாக இல்லை இதன் காரணமாக இந்த கட்சிகளின் பால் வெறுப்புறும் மக்கள் இடதுஜனநாயக சக்திகளின் பால் திரும்பாமல் செயலிழந்து அரசியல் அற்றவர்களாய் மாறுகின்றனர். மேலும் இந்திரா காங்கிரஸ் இன்று செல்வாக்கு இழந்து வந்தாலும் பெரும்பகுதியானவர்கள் இன்னும் அதன் பதாகையின் கீழ் திரண்டு கொண்டிருக்கிறார்கள்.

இந்த பாதகமான சூழலை, நமது சுயேச்சையான நடவடிக்கைகளை விரிவாக்குவதாலும் இதர இடது ஜனநாயக சக்திகளுடன் உறவினைவிரிவுபடுத்துவதாலும் சர்வாதிகார சக்தியினை எதிர்க்கும் அனைத்து பகுதியினரையும் ஒரு பொது எதிர்ப்பில் ஈர்ப்பதினாலும் கட்சி மாற்றிட வேண்டும்.

வளர்ந்து வரும் வெகுஜனப் போராட்டங்கள்

கடந்த ஆண்டு தொடர்ந்த முன்னெப்போதுமில்லாத ஒரு வெகுஜன போராட்ட ஆண்டாக இருந்தது. இப்போராட்டங்களின் பிரதான அம்சமாக விவசாயிகள் இவற்றில் பிரவேசித்தது இருந்தது.

சில மாநிலங்களில் விவசாயிகள் மத்தியில் அதிருப்தியினை கட்டவிழ்த்துவிடுவதில் முதலாளிகள் நிலப்பிரபுக்கள் எனும் பங்காளிகளுக்கிடையில் நடைபெறும் இழுபறி ஒரு திட்டவட்டமான பங்கினை வகித்தது. இந்த இழுபறி அகில இந்திய வளர்ச்சி போக்குகளிலும் தனது பங்கினை செலுத்தியது.

அரசின் விவசாய வளர்ச்சித் திட்டங்களிலிருந்து பலனடைந்துள்ள சக்திமிக்க நிலப்பிரபுத்துவ கூட்டம் வரிச்சுமையில் போதுமான பங்கை ஏற்க மறுத்து எதிர்த்தது; சொத்து வரி மற்றும் வருமான வரிகளை எதிர்த்துப் போராடியது; பல நேரங்களில் மின் கட்டணத்தையும் கடனையும் செலுத்த மறுத்தது.

நெருக்கடி முற்றியதால் புதிய வரிகள் விதிக்கப்பட்டன; கொடுத்த சலுகைகள திருப்பப் பெறப்பட்டன. இந்த நிலப்பிரபுத்துவகூட்டத்திலிருந்து எதிர்ப்பு கிளம்பியது. அதன்காரணமாக அரசு பின்வாங்க வேண்டி வந்தது.

இந்த எதிர்ப்புகள் எல்லாம் நகரத்திற்கு எதிராக கிராமம், அதிகாரத்தை பரவலாக்குதல், பெருந் தொழில்களுக்கு எதிர்ப்பு, கிராம மற்றும் சிறு தொழில்களுக்கு முன்னுரிமை, காந்தீய சுயசார்பு எனும் கோஷங்களில் வெளிப்பட்டது.

ஆனாலும், 1980-81ல் பொருளாதார நிலை சீர்கெட்டதால் இந்திரா காங்கிரஸ் அரசு எண்ணெய், உரம், இன்னும், பல இடு பொருட்களின் விலைகளை உயர்த்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானது. இது இந்த நிலப்பிரபுத்துவ கன தனவான்களின் லாபத்தையும் பாதித்தது.

புதிய வரியினாலும், பொருட்களின் விலைகள் உயர்ந்ததாலும் ஏற்பட்ட இழப்பினை ஈடு கட்ட இந்த நிலப்பிரபுக்கள் தங்களது விவசாய விளைபொருட்களின் விலையினை உயர்த்தக் கோரினர்-விவசாயிகளுக்கு கட்டுபடியாகும் விலை கேட்டனர்.

சில மாநிலங்களில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கும்படி இந்த நிலப்பிரபுத்துவ திருக் கூட்டம் நேரடியாகவே விவசாயிகளுக்கு அறைகூவல் விடுத்தது. இது பல மாநிலங்களில் விவசாயிகள் போராட்டங்களை கட்டவிழ்த்து விட்டது. தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் பெரும் போராட்டங்கள் நடைபெற்றன. அதன் காரணமாக ஆயிரக்கணக்கானோர் கைதாயினர். போலீஸ் துப்பாக்கி சூடுகள் நடந்தன. பல விவசாயிகள் கொல்லப்பட்டனர். தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் இந்தப் போராட்டங்களுக்கான முன்முயற்சிநிலப்பிரபுக்களிடமிருந்து வந்தது என்றால் ஆந்திரப் பிரதேசத்திலும் பஞ்சாபிலும் இதற்கான முயற்சி பல அரசியல் கட்சிகளின் கூட்டுறவுடன் இடதுசாரிப் பிரிவிலிருந்து வந்தது. மகாராஷ்டிரத்தில் போராட்டமானது முதலில்நிலப்பிரபுக்களால் தொடங்கப் பெற்றது என்றாலும் பின்னர் ஆறுகட்சி அணியில் ஆளுகைக்குள் வந்தது. அந்த ஆறு கட்சிகளும் நீண்ட பயண போராட்டத்தையும் நடத்தின.

மகாராஷ்டிரத்தில் கோரிக்கைப் பட்டியலில் விவசாய விளை பொருட்களுக்கு கட்டுபடியாகும் விலை எனும் கோரிக்கையோடு விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலியாக நாளொன்றுக்கு ரூ ஏழு தரவேண்டும் என்பதும் இருந்தது.

கர்நாடகத்தில், நிலப்பிரபுக்கள் போராட்டத்தினை வாபஸ் பெற்ற பிறகும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து நடத்தியது. கரும்பு, நெல் போன்றவற்றிற்கு விலை உயர்வு உட்பட பலசலுகைகளை விவசாயிகள் பெற்றார்கள். போக்குவரத்தினை ஸ்தம்பிக்கச் செய்யும் ராஸ்தாதோடோ, ராஸ்தாரோகோ போன்ற புதிய போராட்ட வடிவங்களை விவசாயிகள் உருவாக்கினர்.

ஆரம்பத்தில் இந்த இயக்கம்முதலாளி-நிலப்பிரபு பங்காளி இழுபறியின் காரணமாக உருவாகியிருந்தாலும் பின்னர் அது வளர்ந்

தோங்கி கிராமப்புற சுயநலமிகள் வைத்திருந்த எல்லைகளையெல் லாம் மீறிச் சென்றது.

கட்சி இதர கட்சிகளின் ஒத்துழைப்புடன் சரியான சமயத் தில் அதிலே தலையிட்டதுதான் அதற்குக் காரணமாகும்.

விவசாய இயக்கம் நடந்து கொண்டிருந்த நேரத்திலேயே அதோடு ஈடு இணையாக மாணவர், மாதர் இயக்கங்களும் விலைவாசி உயர்வை எதிர்த்த போராட்டமும் வளர்ந்து கொண்டிருந்தன. குறிப்பாக மாணவர்கள், பல்கலைக் கழகங்கள் மாதக்கணக்காய் மூடி யிருக்க, அவற்றில் போலீசார் பாசறை அமைத்திருக்க, அப் போலீ சாரையும் எதிர்த்து பல நேரங்களில் கடுமை மிகு போராட்டங்களை நடத்தினர்.

அனைவருக்கும் கல்வி ,அனைவருக்கும் வேலை எனும் கோரிக் கைகளுக்காக செப்டம்பர் 15ம் நாள் மாணவரும் வாலிபரும் நாடா ளுமன்றத்தினை நோக்கி நடத்திய பேரணி வெற்றிகரமாக அமைந் தது. மாணவர் வாலிபர் மத்தியில் பெரும் வரவேற்பினைப்பெற்றது.

1980 தேர்தலுக்குப் பிறகு இருந்த மந்தநிலை மாறி புதிய கோபத்துடன் தொழிலாளி வர்க்கப் போராட்டங்கள் சமீபத்தில் வெடித்துக் கிளம்பியுள்ளன. பெங்களூரைத் தளமாசக் கொண்டு உள்ள பொதுத்துறைத் தொழில்களில் பணியாற்றும் பெங்களூர் ஹைதராபாத் தொழிலாளர்கள் நடத்திய நீண்டநெடும் போராட் டமும். அதற்கு ஆதரவாக மார்ச் 11ம் தேதி நாடு முழுவதிலு முள்ள பொதுத்துறை ஊழியர்கள் நடத்திய ஒரு நாள் வேலைநிறுத் தப் போராட்டமும் இதற்கு நல்லதொரு உதாரணமாகும்.

ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள கூலி மற்றும் வருமானக்கொள்கை, கூலி மற்றும் ஊதிய உயர்வுகளை அரசு நிராகரிக்கும் என்பதனை தெளிவாக்குகிறது. பணவீக்கம், கதவ டைப்புகள், மூடுவிழாக்கள் இந்த நெருப்பிற்கு நெய் வார்க்கின்றன.

அரசு அடக்குமுறையினை ஏவி விட்ட எல் ஐ.சி., ரயில்வே லோகோ, பொதுத் துறை ஆகிய மூன்று போராட்டங்களும் இடது சாரிகளினால் தலைமை தாங்கி நடத்தப்பெற்றவை.

விலைவாசி உயர்வை எதிர்த்தும் அரசின் தொழிலாளர் விரோத கொள்கைகளை எதிர்த்தும் பம்பாயில் நடைபெற்ற மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களின் அகில இந்தியமாநாடு தொழிற்சங்க ஒற்றுமையினை வளர்ப்பதில் ஒரு மைல் கல்லாய் திகழ்ந்தது. ஒன்றுபட்ட நடவடிக்கைகளுக்கு அம்மாநாடு பெரும் சக்திகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது. கிட்டத்தட்ட அனைத்து மாநி லங்களிலும் பலநூறு பேர் கலந்து கொண்ட மாநாடுகள் நடை பெற்றுள்ளன.

அத்தியாவசியப் பணிகள் பராமரிப்பு அவசரச் சட்டத்தினை எதிர்த்து இந்தியா முழுவதும் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டங்கள் ஆகஸ்டு 17ஆம் நாள் நடை பெற்றன. இந்த ஆர்ப்பாட்டங்களில் மாணவர்களும் இதர பகுதி மக்களும் பங்கெடுத்தது குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அத்தியாவசியப் பணிகள் பராமரிப்பு அவசர சட்டத்தினையும், மத்திய அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கைகளையும் எதிர்த்து கேரளா, மேற்குவங்கம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் மாநிலம் தழுவிய வேலை நிறுத்தம் நடைபெற்றது. இதர மாநிலங்கள் தங்களுடைய நடவடிக்கைகளுக்கான தேதிகளை ஏற்கெனவே அறிவித்துள்ளன.

இந்த ஒன்றுபட்ட வெகுஜன நடவடிக்கைகள் எல்லாம் சர்வாதிகார எதிர்ப்பு போராட்டத்திற்கான முன் முயற்சியினை மேலும் மேலும் தொழிலாளி வர்க்கத்திலுள்ள இடது மற்றும் தீவிர உணர்வுபெற்றுள்ள சக்திகளின் கரங்களில் மேலும் மேலும் ஒப்படைக்கும்.

பிளவு சக்திகள்

மக்களின் அதிருப்தி வளர்ந்துவரும் அதே நேரத்திலேயே, அவர்கள் ஒன்றுபட்டுவரும் அதே நேரத்திலேயே பிளவுவாத சக்திகள் அதனை சீர்குலைக்க செயல்படுகின்றன. அவர்களது பங்கினையும் அவர்கள் விடுத்துள்ள சவாலினையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒன்றுக்கொன்று விரோதமான முகாம்களாக வெகுஜனங்களைப் பிரித்திட்ட குஜராத் இட ஒதுக்கீடு எதிர்ப்பு போராட்டத்தில் நிலைமை எந்த அளவிற்கு கவலையளிக்கத்தக்கதாக இருக்கிறது என்பதும், முதலாளித்துவ கட்சிகள் எந்த அளவிற்கு சந்தர்ப்பவாத போக்கினைக் கைக் கொள்வார்கள் என்பதும் வெளிப்பட்டது.

தீண்டத்தகாதவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமைகளைக் கணக்கிற்கொண்டு பார்த்தால் அவர்களுக்கும் பழங்குடியினருக்கும் உள்ள இட ஒதுக்கீட்டினை எதிர்ப்பது என்பது கேவலமான சாதீய வாதமேயன்றி வேறொன்றுமில்லை. ஆனால் இட ஒதுக்கீடு மட்டுமே ஹரிஜனங்கள் மற்றும் பழங்குடியினரது பிரச்னைகளைத் தீர்த்திடாது.

அது பழைய பாழடைந்துவிட்ட நில உறவுகளை எதிர்த்தும், வேலையில்லாத் திண்டாட்டத்தினை எதிர்த்தும் மற்றும் புதிய தொரு சமூக-பொருளாதாரஅமைப்பில் விரைவானதொழில் வளர்ச்சியைக் காண்பதற்காகவும் நடத்தப்படும் பொதுப் போராட்டத்தோடு நேரடியாக இணைந்துள்ளது.

இட ஒதுக்கீடும், கல்வியில் ஏற்பட்டுள்ள ஒரு குறைந்தபட்ச முன்னேற்றமும் ஹரிஜனங்கள் மத்தியில் ஒரு மெல்லிய மேல் தட்டினை உருவாக்கியுள்ளது. அவர்களில் சிலர் ஆளும் கட்சியினை ஆதரிப்பதில் ஆர்வம் உள்ளவர்கள். அது மட்டுமல்லாது தங்களது செல்வாக்கினைப் பயன்படுத்தி சமூக அமைப்பினை மாற்றுவதற்கு நடைபெறும் பொது இயக்கத்தில் ஹரிஜன மக்கள் கலந்து கொள்ளாதவாறு பார்த்துக் கொள்கின்றனர். இது தீண்டாமை மற்றும் ஹரிஜனங்களுக்கு இழைக்கப்படும் இதர கொடுமைகளுக்கு ஊற்றுக் கண்ணாயிருக்கும் சொத்து உறவுகளைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் இந்திரா காங்கிரசின் தொங்கு சதையாக ஹரிஜன மக்களை ஆக்கிவிடுகிறது. வெகுஜனப் போராட்டங்களை நடத்தும் தொழிற்சங்கங்கள் மற்றும்விவசாய சங்கங்கள் ஹரிஜனங்களுக்கென உள்ள சில பிரத்தியேகப் பிரச்சனைகளை கருத்தில் கொள்ளாமல் இருந்தன. இது இந்தப் பகுதி மக்களிடையே பொது வர்க்கப் போராட்டங்களின்பால் ஓர் அசிரத்தை மனோபாவத்தினை உருவாக்கியது. இப்படி அந்நியப்பட்டுநிற்பதனை, சர்வாதிகாரத்தினை எதிர்ப்பதற்கு எந்த சக்திகளின் ஒற்றுமை அவசியமோ அந்த சக்திகளாகிய உழைப்பாளிகள் மற்றும் ஜனநாயக வர்க்கசக்திகளை மற்றவர்களால் பிளவுபடுத்துவதற்கு திறமையாகப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்பதனை குஜராத் போராட்டம் உணர்த்துகிறது. இங்கேயுள்ள மிகப் பெரிய தடைக்கல் வெகுஜனங்களில் உள்ள தீண்டாமையினை அனுஷ்டிக்கும் பரவலான பகுதியினரின் சாதீயப் போக்கு ஆகும். இதனால்தான் ஹரிஜன மக்கள் தொடர்ந்துபொது இயக்கத்திலிருந்து அந்நியப்பட்டு நிற்கிறார்கள்.

வெகுஜன அமைப்புகளில் உள்ள இந்த பலவீனம் போக்கப் படாவிட்டால், தீண்டாமையினையும் சாதீய அமைப்பினையும் எதிர்த்துப்பிரச்சாரம் செய்துகொண்டே இட ஒதுக்கீட்டின் உண்மைத் தன்மையினையும் ஹரிஜன மக்களுக்கு கட்சி சொல்லாவிட்டால் ஜாதீய அடிப்படையில் மக்களைப் பிளந்திடும் வேலையினை ஆளுங்கட்சியும் இதர முதலாளித்துவ கட்சிகளும் இன்னும் தீவிரமாக செய்யக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

பழங்குடி மக்கள்

பிளவுவாத தாக்குதலின் இரண்டாவது முனை நாட்டிலுள்ள ஆதிவாசிகள் வசிக்கும்பகுதிகளில் பிரிவினை வாதத்தினைப் பிரச்சாரம் செய்வதாகும்.

ஆதிவாசிகள் மனிதர்களாய்வாழமுடியாதநிலையில்அவர்கள் கொத்தடிமைகளாக கிராமப்புறங்களில் விற்கப்படும் நிலையில், அவர்கள் வீட்டுப் பெண்கள் விபச்சார சந்தைகளில் விற்கப்படும் நிலையில், நாட்டின் இதர பகுதிகளிலிருந்தும், பொதுஜனநாயக போராட்டத்திலிருந்தும் அவர்கள் அந்நியப்பட்டுள்ள நிலையில் அவர்கள் வசிக்கும் பகுதிகள் சில அயல்நாட்டு கிறிஸ்தவ மிஷினரிகளுக்கு

பிரிவினைவாத வித்தை விதைக்க நல்ல விளை நிலமாகியுள்ளது.

வடகிழக்குப் பகுதியில் இந்த மிஷினரிகள் செய்துள்ள விஷமம், அந்தப் பகுதியில் இப்பொழுது மேலோங்கியுள்ளபிரிவினை உணர்வுகளில் வெளிப் படுகிறது.

பிரிவினைப் பிரச்சாரத்தின் மூலம் இந்த நாட்டினை துண்டாடி உருக்குலைத்திட ஏகாதிபத்திய பிரச்சாரகர்கள்முயலுகின்றனர்

திரிபுராவில் மட்டும்தான் பழங்குடி மக்களைஇடதுஜனநாயக இயக்கம் குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தனது தலைமையின் கீழ் திரட்டிடுவதில் வெற்றி கண்டுள்ளது. மேற்குவங்கம் தவிர நாட்டின் இதர பகுதிகளில் முன்னேறிய ஜனநாயக மற்றும் இடதுசாரி இயக்கத்தின் பலவீனமாக இருப்பது, ஆதிவாசிகள் அடிமைப் படுத்தப்பட்டிருப்பதற்கு எதிராகவும் அவர்களுக்குஜனநாயகஉரிமைகளைப் பெற்றுத் தருவதற்காகவும் தொடர்ந்த போராட்டம் நடத்தாதிருப்பதும், ஒரு தனிவகுப்பார்என்ற முறையில்அவர்களுக்குள்ள பிரத்யேகப் பிரச்சனைகளை அங்கீகரிக்காதிருப்பதும் ஆகும். இவையெல்லாம் ஆதிவாசிகளை பொது இயக்கத்திலிருந்து இன்னும் அந்நியப்படுத்தியே வைத்துள்ளது. இந்திரா காங்கிரஸ் ஆட்சியின் கீழ் அவர்கள் மனிதத் தன்மையற்ற முறையில் நடத்தப் பெற்றதானது சில கிறிஸ்தவ மிஷனரிகளின் பிரச்சாரத்திற்கு எளிதில் அவர்களை இரையாக வைத்துள்ளது. ஆதிவாசிகள் மத்தியில் நிலவுகின்ற, பொறுக்கமுடியாத படுமோசமான நிலை ஜார்கண்ட் கட்சி போன்ற கட்சிகளைபொது இயக்கத்தில் அவர்கள் கலந்திடாதவாறு தடுத்து நிறுத்திதவறுன வழியில் அழைத்துசெல்ல வாய்ப்பளிக்கிறது.

ஏகாதிபத்தியத்தின் இந்தப் பிரிவினைப் பிரச்சாரத்தினை எதிர்த்துகட்சி துணிச்சலோடு போராட வேண்டியிருக்கிறது. இந்திரா காங்கிரஸ் அரசு அம்பலப்படுத்தப் பயப்படும் இந்தக் கிறிஸ்தவ மிஷினரிகளின் சூழ்ச்சிகளையும் கட்சி அம்பலப்படுத்த வேண்டும்.

இதனைச் செய்யவேண்டுமென்ருல் இந்த ஆதிவாசிகளுக்கு மனிதத் தன்மையுடன் கூடிய வாழ்நிலையினையும், அவர்கள் சுரண்டப் படுவது நிறுத்தப்படுவதனையும் உறுதி செய்யப் போராடுவது மிக முக்கியமான காரியமாகும். அதே போன்று இவர்கள் வசிக்கும்பகுதிகளுக்கு பிராந்திய சுயாட்சிக்காகப் போராடுவதும் அவசியமாகும். தீண்டப்படாதவர்கள் இருப்பது போலவே தற்சமயம் ஆதிவாசிகளும் இந்திரா காங்கிரசின் ரிசர்வ் படையாக அமைந்துள்ளார்கள்.

ஜனநாயக சக்திகளுக்குள் ஒரு பெரும் பிளவு இருக்கிறது. ஏகாதிபத்திய வாதிகள் தங்களது சொந்த ஆதாயத்திற்காக நமது நாட்டை உருக்குலைப்பதற்காக அந்தப் பிளவை உபயோகப் படுத்துகிருர்கள்.

இஸ்லாமிய பழமைவாதம்-பிளவுவாத தாக்குதலின் மூன்ருவது முனை

சிறுபான்மையோர், சிறுபான்மையோர் பிரிவினை வாதம்,

வகுப்பு சமூக உறவு எனும் பிரச்னைகளின் தன்மை சுதந்திரத்திற்குப் பிறகு மாறியுள்ளது. அது இப்பொழுது அரசியல் அமைப்புச் சட்டத்தில் எத்தனையோ வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தாலும், பூர்ஷ்வாக்களின் தலைமையில் உள்ள முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ ஆட்சியின் கீழ் அவமானமாகவும் பாரபட்சமாகவும நடத்தப்படும் சிறுபான்மையோர் பிரச்சனையாக உள்ளது.

கட்சி எப்பொழுதும் முஸ்லீம் சிறுபான்மையோரின் உரிமைகளைப் பாதுகாத்து வந்துள்ளது; அவர்கள் அடக்குமுறைக்கு ஆளாவதையும் பாரபட்சமாக நடத்தப்படுவதையும எதிர்த்து குரல் கொடுத்து வந்துள்ளது. பொருளாதார ரீதியில் அடக்கப்பட்டும், பல நேரங்களில் ஹிந்து வெறித்தனத்திற்கும் கலகங்கள் நடக்கும்பொழுது நிர்வாக அதிகாரிகளுக்கும் பலியாகி வரும் முஸ்லீம் மக்கள்பால் கட்சி எப்பொழுதும் அனுதாபம் கொண்டுள்ளது. ஆனால் ஹரிஜனங்கள் பிரச்னையில் கண்டதுபோல் இங்கும் உண்மையின் மற்றொரு பக்கம் சரியாக வலியுறுத்தப்படவில்லை. அதாவது சிறுபான்மை வகுப்புவாதக் கண்ணோட்டத்திலிருந்து விடுபடாமல், ஜனநாயகப் போராட்ட நீரோட்டத்தில் கலந்திடாமல அவர்களுக்கு விடுதலை கிடைக்கப் போவதில்லை.

பெரும்பாலான முஸ்லீம் மக்கள் இன்று பொதுவானவர்க்க ஜனநாயக இயக்கத்திலிருந்து விலகி நிற்கிறார்கள். பெருமளவில் பாரபட்சம் காட்டப்படுவது போன்ற சிறுபான்மையோருக்கேயுரிய பிரச்னைகளில் போதிய கவனம் செலுத்தி அவர்கள் தனித்து நிற்பதை முடிவிற்குக் கொண்டு வர பொதுவான வெகுஜன ஸ்தாபனங்கள் தீவிரமாகப் போராடவில்லை. இந்தச் சூழ்நிலையினைப் பயன்படுத்திக் கொண்டு சிறுபான்மையோர் பிரிவினைவாதத்தையும் வகுப்பவாதத்தையும் முன்வைத்து அந்த மக்கள், ஜனநாயக இடதுசாரி சக்திகள் பக்கம் சாயாதவாறு பிற்போக்கு வகுப்புவாத தலைவர்கள் பார்த்துக் கொள்கின்றனர்.

இதே தலைவர்கள், தேர்தலின்போது ஜனநாயக இயக்கத்திற்கு எதிராகவும் இந்திரா காங்கிரசிற்கு ஆதரவாகவும் வாக்களிக்குமபடி முஸ்லீம மக்களை வற்புறுத்துகின்றனர். இன்று இந்தியாவில் முஸ்லீம் மக்கள் மதத்தின் பேரால் மற்றொரு பிளவு வாத கவர்ச்சிக்கு இலக்காக்கப்பட்டு வருகின்றனர்.

முஸ்லீம் மக்களது ஏழ்மை மிக்க பொருளாதார நிலை, அவர்கள்பாரபட்சமாக நடத்தப்படுவது அவர்கள் மத்தியில் பிற்போக்கு, வாதிகளுக்குள்ள செல்வாக்கு இவற்றின் காரணமாக ஏகாதிபத்தியத்திற்கும் உலக முஸ்லீம் பிற்போக்கு வாதத்திற்கும் உதவக் கூடிய இஸ்லாமிய பழமைவாதத்திற்கு இந்த மக்கள் பலியாகக் கூடிய அபாயம் உள்ளது.

முஸ்லீம்கள் பெரும்பான்மையாய் உள்ள அனைத்து நாடு

களிலும் இந்த இஸ்லாமிய பழமை வாதம் ஜனநாயக மற்றும் தொழிலாளி வர்க்க இயக்கத்தினை தாக்குகிறது. இதன் மூலம் ஏகாதிபத்தியம் மற்றும் உள்நாட்டு மத பிற்போக்குவாதத்திற்கு சேவை செய்கிறது.

இந்தியாவில் தேசிய ஒற்றுமைகளை சீர்குலைக்கும் வகையில் முஸ்லீம் மக்கள் மத்தியில் அவர்கள் ஒரு தனிதேசம் எனும் உணர் வினை இந்த இஸ்லாம் பழமைவாதம் பரப்பி வருகிறது. இந்திரா காங்கிரசால் இந்த அபாயத்தினை எதிர்த்துப் போராட இயலவில்லை.

முஸ்லீம் மக்களை கையடக்கி வைத்துள்ளவர்களில் சிலர் வெளிநாடுகளில் உள்ள இஸ்லாமிய பழமை வாதங்களின் ஏவுதலின் படி வேலைசெய்கின்றனர்; அவர்களிடமிருந்து நிதி உதவியும் பெறு கின்றனர். சில பிற்போக்குத் தனமான சலுகைகளை தந்தே ஆக வேண்டுமென்று இந்திரா காங்கிரசையும்அதன் அரசையும்பயமுறுத் தக் கூடிய நிலையில் இன்று அவர்கள் இருக்கிறார்கள்.

இன்றுள்ள அந்த சலுகைகளில் இந்திய ஒற்றுமைக்கு எதி ராகவும், பிரிவினை வாதத்திற்கு ஆதரவாகவும், பிரச்சாரம் செய் வதற்கான சுதந்திரமும் உள்ளடங்கியுள்ளது.

சில எண்ணெ உற்பத்தி செய்யும் நாடுகளிலுள்ள பிற்போக்கு ஆட்சியாளர்களைப் பகைத்துக் கொள்ள இந்திராகாந்தி அரசு விரும் பாத காரணத்தால் இந்தப் பிரச்சாரத்தினை எதிர்த்துப் போராட அது பயப்படுகிறது.

இந்த முஸ்லீம் பழமைவாத பிரச்சாரத்தினை செய்து வரும் பிரதான அமைப்பு ஜமைத்-இ-இஸ்லாமி ஆகும். வெளிநாட்டிலி ருந்து கொழுத்த நிதியுதவி பெறும் இந்த ஸ்தாபனம் தனது தேச விரோத நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்து வருகிறது. பேரம் பேசி அதற்கு ஆளும் கட்சியின் ஆசிர்வாதத்தையும் பெறுகிறது. ஹைதராபாத்தில் நடைபெற்ற அதன் மாநாட்டிற்கு இந்திராகாந்தி வாழ்த்துச் செய்தி அனுப்பினார்; ஆந்திரப் பிரதேசத்தின் இந்திரா காங்கிரஸ் அரசோ அம்மாநாட்டிற்கு சில லட்ச ரூபாய்களைச் செல வழித்துத் தனது ஆதரவைத் தெரிவித்துக் கொண்டது.

தேச விரோதப் பிரச்சாரத்தினைச் செய்வதற்காகப் பல உருது பத்திரிகைகளுக்கு சவூதி அரேபியப் பணம் வருவது தெரிந்த விஷயமே! தங்களது தேச விரோத நடவடிக்கைகளைத் திறம்படச் செய்வதற்காக ஹோட்டல்கள் போன்றவற்றில் பெரும் முதலீடு செய்திட வெளிநாடுகளிலிருந்து இந்த அமைப்புகளினால் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. ஆனால் அரசோ இதைக் கண்டு ஊமையாகிவிட் டது. இன்று நமது பொருளாதாரம் இருக்கும் கடுமையான நிலை யில் அதனைத்தூக்கி நிறுத்திட அரசு பெட்ரோல் டாலர் வரத்தை நம்பி நிற்கிறது. இந்த நிலையில் முஸ்லீம் மக்களுக்கெதிராகப்பழமை வாதிகள் திட்டமிட்டுள்ள சூழ்ச்சிகளை முறியடித்திட தீவிர முயற்சி

களைக் கட்சி மேற்கொண்டிட வேண்டும். இந்தப் பேரபாயத்தை எதிர்த்து முஸ்லீம் மக்கள் மத்தியிலுள்ள ஜனநாயக உணர்வுள்ள முற்போக்கு அறிவுஜீவிகளைத் திரட்டுவதும், அதேநேரத்தில் முஸ்லீம் சிறுபான்மையோரின் உரிமைகளைக் காத்திட இன்னும் அதிகமாகத் தலையிடுவதும் அவசியமாகும்.

இந்து மத இன வெறி

ஹிந்து தேசத்துக்காக ஆர்.எஸ்.எஸ். விடுத்துள்ள அறை கூவலுக்குப் பின்னால் மக்களின் உண்மையான குறைகளோ, முறை யீடுகளோ ஏதும் இல்லை. மக்களை பிரிப்பதற்காக வேண்டுமென்றே விடுக்கப்பட்ட வகுப்புவாத வேண்டுகோள்தான் இது. தொன்று தொட்டு ஹிந்துக்கள் முஸ்லீம்கள் ஆகிய இரு வகுப்பாரிடையே பிரிவை உபயோகித்து முஸ்லீம்களுக்கு எதிராக ஹிந்துக்களை கிளப்பிவிட்டு முன்னவரை ஒடுக்குவதற்கே இந்த ஆர்.எஸ்.எஸ். காரர்களின் ஹிந்து ராஜ்ய முழக்கம் பயன்படுகிறது. முஸ்லீம்கள் எல்லாம் வேற்று நாட்டவர்கள், நமக்குப் புறம்பானவர்கள் என்று சித்தரிக்கப்படுகிறார்கள். அவர்களது நேர்மை தாக்கப்படுகிறது; சமத்துவமாகவோ, சாமான்யர்கள் போலோ நடத்தப்படுவதில்லை.

மதசம்பந்தமான சில்லரைத் தகராறுகளுக்கு அடிக்கடி ஆர்.எஸ்,எஸ். காரணமாக இருக்கிறது; அது கலவரங்களில் பங்கு கொள்கிறது. முஸ்லீம் சிறுபான்மையினருக்கு எதிராக ஹிந்துக்களின் கோபவெறியைத் திருப்பிவிடுகிறது. அது ஜனநாயக விரோதத் தன்மையை கொண்டது. முற்போக்கு சிந்தனை போக்குகளுக்கு எதிரானது. அண்மைக்காலம் வரையில், கொடுமை யான சாதி அமைப்பு முறையை இந்து மதத்தின் அடிப்படை அம்சமாகச் சொல்லி, பகிரங்கமாக நியாயப்படுத்தியது. கேரளத் தில் வகுப்புவாதத்தை பரப்புவதில்ஆர்.எஸ்.எஸ்.முடிந்ததனைத்தை யும் செய்தது.

பல மார்க்சிஸ்ட் கட்சி ஊழியர்கள் கொலை செய்யப்படுவதற்கு அது காரணமாகஇருந்தது. கூட்டு அமைச்சரவையை அவதூறுசெய் தது. ஜாம்ஷெட்பூர் கலவரங்களில் அதன் பங்கு பற்றி, அதிகார பூர்வ விசாரணை கமிட்டியே அண்மையில் பகிரங்கப்படுத்தியது.

ஆர். எஸ். எஸ் நடவடிக்கைகளும், பிரச்சாரமும் இரண்டு சமூகங்களிடையே நிரந்தரமான பகைமையை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாக இருக்கிறது. இந்துதேசம் என்று வாதிடும் கோஷம் நடைமுறையில் மைனாரிட்டி சமூகத்தினரை இந்து பாரம்பரியத்துடனும், கலாச்சாரத்துடனும் தாங்களாகவே உள்ள டங்கி ஒன்றி விடுவதற்கான கோரிக்கையாக இருக்கிறது. அதாவது மைனாரிட்டியினர் தங்கள் தனித்தன்மையை இழக்கின்றனர்.

இந்தச் சூழலில், இந்துதேசம் என்ற அடிப்படையில் ஆர் எஸ். எஸ்ஸின் இனவெறி கோஷம் முஸ்லீம் மக்களை முஸ்லீம்பழமை வாதிகளின் (Fundamentalists) பக்கம் தள்ளுவதற்கு ஏகாதிபத்தி யத்தின் ஒரு ஆத்திரமூட்டும் கருவியாக அமைகிறது.

முஸ்லீம்கள் இந்தியாவின் ஏனைய பகுதி மக்களிடமிருந்து தனித்தன்மை கொண்டவர்கள் என்ற முஸ்லீம் மதவாதிகளின் பிரச்சாரத்தைவேறொரு திசையிலிருந்து அங்கீகரிக்கும் முறையிலான ஆர். எஸ். எஸ்ஸின் ஆத்திரமூட்டும் பிரச்சாரம், முஸ்லீம் பழமைவாதிகளின் (சாரத்தை) பிரிவினை வாதத்தை மேலும் பலப்படுத்துகிறது. கலவரங்களில் அதன் தூண்டிவிடும் பங்கு, வெறி பிடித்த முஸ்லீம் எதிர்ப்பு ஊழியர்களைப் பயிற்றுவித்தல் போன்றவை நாட்டை பிளவுபடுத்துவதற்கு ஏகாதிபத்தியங்களுக்கு உதவி செய்கிறது. முற்போக்கு சிந்தனைகளுக்கும் கருத்துக்களுக்கும் எதிரான அதன் பிற்போக்குத்தன்மை, தேச விரோத சக்திகளைப் பலப்படுத்துகிறது.

சீக்கியர்களுக்கு தனிநாடு, காலிஸ்தான் போன்ற கோஷங்கள் எழுப்பப்படுவது, இந்திரா காங்கிரஸ் ஆட்சியின் கீழ் நாடு சிதறுண்டு போவதற்கான வளர்ச்சிப் போக்கின் ஒரு பகுதியாகும்.

வெளிப்படையான ஏகாதிபத்திய ஆதரவு சக்திகள் இம்மாதிரி கோஷங்களை தட்டிக்கேட்பாரின்றி எழுப்புகிறார்கள். பத்தாம் பசலி பிற்போக்கு சக்திகளால் (Obscurantist) அவை ஆதரிக்கப்படுகின்றன.

ஏகாதிபத்திய ஏஜெண்டுகள் ஒரு விமானத்தைப் பாகிஸ்தானுக்குக் கடத்திக் கொண்டு போகுமளவிற்குத் தைரியமடைந்திருக்கின்றனர். அகாலித் தலைவர்கள் திட்டவட்டமாக கண்டிக்காததிலிருந்து அவர்களின் அழுகிப்போன மனசாட்சிவெளியானது, இந்தத் தாக்குதலில் அன்னிய சக்திகளின் கையும் உண்டு என்பது எவ்வித சந்தேகமுமின்றி தெளிவாயிருக்கிறது.

ஏகாதிபத்தியங்கள், ஆனந்த மார்க்கிகள் போன்ற கூலிப் பட்டாளங்களை இடதுசாரி சக்திகளுக்கு எதிராக எந்நேரமும் பயன்படுத்தும் முறையில் அவர்களுக்கு பணம் கொடுத்து உதவுகின்றன. ஆனந்த மார்க்கிகளால் உருவாக்கப் பட்ட அம்ரா வங்காளிகள் திரிபுராவில் பயன்படுத்தப் பட்டார்கள். மேற்குவங்கத்தில் பயன்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு தடுக்க முடியாத முறையில் வளர்ந்து வருகிறது. அதன் கொள்கை முழக்கம் மக்களை ஈர்த்துவருகிறது. மெகுஜனங்கள் தீவிரத்தன்மையடைந்து இடதுசாரி சக்திகளின் அறை கூவலுக்கு செவி மடுக்கின்றனர். அதே நேரம் முதலாளித்துவ கட்சிகளின் பால், அதிருப்தி வளர்ந்து வருகிறது. அந்தச் சூழலில், அதிதீவிர இடதுசாரி கருத்துக்கொண்டவர்களிடமிருந்தும் சீர்குலைவுக்கான தாக்குதல்கள் வருகின்றன.

ஏகாதிபத்திய ஆதரவு சக்திகளால் அவை ஜாக்கிரதையாக (கவனமாக) சில கிறிஸ்தவ தேவாலய(church) அமைப்புகளின்மூலம்

தயாரிக்கப்படுகின்றன. இடதுசாரிகள் என்று தங்களை சொல்லிக் கொள்ளும், அதேசமயம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரான, எல்லா குழுக்களையும் ஒன்று திரட்டுவதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. இந்தக் குழுக்களை திரட்டுவதற்காக, இந்த ஸ்தாபனங்கள், கருத்தரங்கங்களை நடத்துகின்றன. மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ந்து வரும் வலிமையை சீர்குலைப்பதற்கும், இடதுசாரி சக்திகளின் ஒற்றுமையைச் சீர்குலைப்பதற்கும், இடதுசாரி சொற்றொடர்களை உச்சரிக்கும் அமைப்புகளை உருவாக்குகின்றன. பல குழுக்களாகப் பிளவுபட்டிருக்கும், நக்சலைட்டுகள், இதே பிற்போக்குத் தன்மையில் பங்கு கொண்டு, ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்கிறார்கள். அவர்களின் சோவியத் ஏகாதிபத்தியம், என்ற சிறுபிள்ளைத்தனமான பேச்சு, சோவியத் எதிர்ப்பு தத்துவம ஆகியவை அமெரிக்க உளவு ஸ்தாபனத்தின், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தத்துவார்த்த பிரச்சாரத்திற்கு மிகவும் பொருத்தமாயிருக்கிறது.

ஏகாதிபத்தியத்தின் கொள்கையை நிறைவேற்றிக்கொண்டு மேலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியையும், அதன் அமைச்சரவையையும் அதன் கொள்கைகளையும் தாக்குவதில் அவர்கள் குறியாயிருக்கின்றனர். இயக்கத்தின் பகிரங்க சீர்குலைப்பாளர்களாக செயல்படுகின்றனர்.

நக்சலைட்டு குழுக்கள் வெகுஜன அமைப்புகளை அதி தீவிர இடதுசாரி கோஷங்களின்மூலம் சீர்குலைப்பதற்காக அவற்றில் ஊடுருவிக் கொண்டிருக்கிறார்கள்.

சில அரசியல் கட்சிகள் வளர்ந்து வரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வலிமையை எதிர்க்கும் சக்தியாக பயன்படுத்த, அவர்களை ஆதரிக்கிறார்கள். இதன்மூலம் அமெரிக்காவை போலவே சர்வதேசீய நிலையைக் கொண்ட, ஒரு பிற்போக்கு சீர்குலைவு அமைப்பை ஆதரிக்கின்றனர்.

நக்ஸலைட்டுகள் மே.வங்கம். கேரளா, ஆந்திரா, தமிழ்நாடு, பீகார் மாநிலங்களில் தீவிரமாக செயல்படுகிறார்கள். இம்மாநிலங்களில் நமதுதோழர்களை கொலை செய்யும் வேலையில் ஈடுபடுகிறார்கள். கேரளத்தில், அவர்களின் பயங்கரவாத நடவடிக்கைகளை, நமது அமைச்சரவையை தாக்குவதற்கும், இந்திரா காங்கிரஸை திரும்பக் கொணர்வதற்காகவும், பிற்போக்கு சக்திகள் பயன்படுத்துகின்றன.

இந்த போலி இடதுசாரிகளின் திட்டமிட்ட தாக்குதலை எதிர்த்து, நடத்தவேண்டிய தத்துவார்த்த அரசியல் போராட்டத்தை அலட்சியம் செய்வது மிகப்பெரிய குற்றமாகும்.

இடதுசாரி சக்திகளின் ஒற்றுமை

ஒரு வலுவான இடதுசாரி ஜனநாயக சக்திகளின் அணியை

உருவாக்க கட்சி பல்லாண்டுகளாக கடுமையாக பாடுபட்டு வருகிறது.

இந்தஇடதுசாரிசக்திகளின்ஒற்றுமையைஉருவாக்கஅவர்களிடையே, ஒருவரையொருவர் மேலும் மேலும் புரிந்து கொள்ளும் உணர்வு வளர்வதுஅவசியமாகும். இடதுசாரி ஒற்றுமையை வலுப்படுத்துவதிலும் அதற்கான முயற்சியில் ஈடுபடுவதிலும், பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு வெற்றிகளை கடந்த நான்காண்டுகளில் காண முடிந்தது.

பல்வேறு இன்னல்களுக்கும், சோதனைக்கும் மத்தியில் மே. வங்க இடதுசாரி அணி தொடர்வதோடு வலுவடைந்துள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட பல கட்சிகளை இந்த அணியில் சேர்த்ததின் மூலம் இடதுசாரி ஒற்றுமைக்கான வலு மேலும் கூடியுள்ளது.

1977 தேர்தலுக்குப் பிறகு கேரளத்தில் நிலைமை மாறியுள்ளது.இந்திரா காங்கிரஸுடன் கூட்டுச்சேர்ந்திருந்த இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி உள்ளிட்ட மார்க்சிஸ்ட்எதிர்ப்பணி உடைக்கப்பட்டது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை, அதன் கட்சியின் (மாறிய) பார்வைக்கேற்பகடந்தகாலத்தன்நிலையிலிருந்து விடுபடத்தீர்மானித்தது. இந்திரா காங்கிரஸ் அமைச்சரவையிலிருந்து வெளியேற முடிவெடுத்தது. இதன்மூலம், கேரளத்தில் இடதுசாரி ஒற்றுமைக்கான கதவுதிறக்கப்பட்டது. இந்த நடவடிக்கை இந்தியாமுழுவதும் இடதுசாரி ஒற்றுமைக்கான வீச்சை ஏற்படுத்தியது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான உறவை வளர்ப்பதற்கு உதவியது.

நாடாளுமன்றத்தில் எல்லா இடதுசாரி கட்சிகளையும் கொண்ட ஒரு இடதுசாரி ஒருங்கிணைப்பு குழு தற்போது இயங்கி வருகிறது. மற்ற எதிர்க் கட்சிகளை அணுகுவதற்கு முன்பாக அது முறையாக கூடி பொதுவான முடிவுகளை எடுக்கின்றது. மாநிலங்களில் இடதுசாரி கட்சிகள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் அனேகமாக சட்டமன்றங்களில் பல பிரச்சனைகளில், இணைந்து செயல்படுகின்றன. அஸ்ஸாம், ஹரிஜனங்களுக்கு எதிரான கொடுமைகள், வகுப்பு கலவரங்கள், மதச்சார்பின்மை, மக்களின் பொருளாதார அரசியல் உரிமைகளை பாதுகாத்தல், அந்நிய நாட்டுக் கொள்கைகள் போன்றபிரச்னைகளில், பொதுவான அணுகுமுறை, மக்களைக் கவர்ந்திருப்பதோடு, நாட்டின் அரசியலில்இடதுசாரிகளின் அந்தஸ்தையும் உயர்த்தியுள்ளது.

இந்த இடதுசாரி அந்தஸ்து உயர்வுக்கு, நமது இடதுசாரி தலைமையிலான அரசுகளின் கொள்கையும், சாதனைகளும் பெரிதும் உதவியிருக்கின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக இடதுசாரி கட்சிகளின் பரவ

லான வெகுஜன நடவடிக்கைகள், அவைகளின் கூட்டு வெகுஜனப் போராட்டங்கள், வேலை நிறுத்தம், ஊர்வலம், ஆர்ப்பாட்டம் ஆகியவைகளுக்கான அறைகூவல்கள், மக்களைப் பாதிக்கும் முக்கிய மான பிரச்னைகளில் அவைகளின் தலையீடு, இந்தப் பொதுவான போராட்டத்தில் மேலும் மேலும் பரந்த சக்திகளை ஈடுபடுத்துவதில் அவைகளின் சக்தி, இவைகள்தான் இடதுசாரிகளின் ஒற்றுமையை உருவாக்குவதற்கான காரணங்களாகும்.

பல கஷ்டங்களுக்கிடையில் எல்லா மாநிலங்களிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மற்ற இடதுசாரி கட்சிகளுக்கும் இடையிலான ஒற்றுமை வளர்ந்திருக்கிறது. மகாராஷ்டிரா, ராஜஸ்தான், தமிழ்நாடு, ஆந்திரா, ஒரிஸ்ஸா, பீகார், பஞ்சாப், குஜராத், ஹரியாணா, உத்திரப்பிரதேசம் ஆகிய இந்த மாநிலங்கள் அனைத்தும் இடதுசாரி சக்திகளின் ஒற்றுமையின் வளர்ச்சியைக் காட்டுகின்றன.

இடதுசாரி ஒற்றுமையை வலுப்படுத்துவதில் பெற்ற வெற்றிகள் எந்தவிதக் கஷ்டமும் இன்னலும் இன்றி அடையப்பெற்றன என்றோ, ஒரு சரியான கொள்கைக்கானபோராட்டமின்றி அடையப் பெற்றது என்றோ கற்பனை செய்யக் கூடாது.

இடதுசாரி அரசியல் கட்சிகள், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தபிரச்னைகளில் பல்வேறு கருத்துக்களைக்கொண்டிருக்கின்றன. உடனடி அரசியல் நிலைமை பற்றிய கணிப்புகளிலும் அவை அடிக்கடி மாறுபடுகின்றன. அரசியல் கட்சிகளின் விஷயத்திலும் கணிப்புகளும் அவைகளின் பால் கடைப்பிடிக்க வேண்டிய தந்திரோபாயங்களிலும் அடிக்கடி வித்தியாசப்படுகின்றன.அதோடு சர்வதேச நிலைமை சம்பந்தப்பட்ட சில ஜீவனுள்ள பிரச்னைகளிலும் மாறுபட்ட கருத்துக்கள் கொள்கின்றன.

புரட்சிகரமான போராட்டத்தின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்காமல் இந்தக் கஷ்டங்களைக் சமாளித்து கூட்டணிகளை உருவாக்குவதற்குப் பொறுமையும் அடிப்படைக் கொள்கைகளில் ஒரு உறுதியான கோட்பாடான நிலையும் அவசியமாகும்.

இந்த சில கட்சிகளின் தவறான நிலைகள், மதிப்பீடுகள், தந்திரங்கள் இவைகளை எதிர்த்து தத்துவார்த்த போராட்டமும் அவ்வப்போது அரசியல் விவாதமும் அவசியமாகும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியோடு அதன் தலைமையின் கணிப்புகள் அதன்பால் அது கொள்ளும்பாத்தியதைகள் ''பீப்பிள்ஸ் டெமாக்ரசி''யில் நடத்தப்பட்ட விவாதம் இந்த வகையைச் சார்ந்தது.இது கோட்பாடு ரீதியான இடதுசாரிஒற்றுமைக்கான போராட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை இந்தியச் சூழ்நிலை

அதாவது அரசின் அரசாங்கத்தின் வர்க்கத் தன்மை, புரட்சியின் கட்டம்போன்றபிரச்னைகளில் அதன்அடிப்படையான நிலைபாட்டை அது கைவிட்டுவிடவில்லை. அதன் மாறுதஇந்நிலையில்நடைமுறை கொள்கைகளில் ஊசலாட்டங்களும் கருத்து வேறுபாடுகளும் எதிர்பார்க்கக் கூடிய ஒன்றேயாகும். சர்வதேச நிகழ்ச்சிகளிலும் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன; அவை வரத்தான் செய்யும். இவைகளை மறைத்துப் பேசுவதில் அர்த்தமில்லை.

ஜலந்தரில் நமது கட்சிக் காங்கிரஸ் நடந்த பொழுது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அதன் நிலையை மாற்றிக் கொள்ளவில்லை. கேரளத்தில் மார்க்சிஸ்டு எதிர்ப்புக் கூட்டணியில் இந்திரா காங்கிரஸின் ஆர்வமிக்க கூட்டாளியாயிருந்தது. அதற்குப் பிறகு பல மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 'பட்டின்டா' மாநாடு ஏற்கெனவே இருந்த கொள்கையை, முறிப்பதற்கான அறைகூவலை விடுத்தது. இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி மார்க்சிஸ்ட் எதிர்ப்பு கூட்டணியிலிருந்து வெளியேறியது, இடது ஒற்றுமையை உருவாக்குவதற்கு உதவியது. கேரளத்தில் தேர்தலில் இந்திரா காங்கிரசைத் தோற்கடிக்க இந்திரா காங்கிரசை எதிர்த்து எல்லா சக்திகளையும் ஒன்றுபடுத்தும் பணியில் நம்மோடு இணைந்து பணியாற்றியது.

கொள்கையின் இந்த மாறுதல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் கருத்து வேறுபாட்டை உருவாக்கியது, அந்தக் கட்சியின் தலைவர் எஸ். ஏ. டாங்கேயை வெளியேற்றுவதில் போய் முடிந்தது.

சமீப மாதங்களில் கூட்டு நடவடிக்கைகளும் வெகுஜன போராட்டங்களும் கண்டனங்களும் மென்மேலும் அதிகரித்துள்ளன. இரண்டு கட்சிகளிடையே ஒத்துழைப்பு வளர்ந்து கொண்டிருக்கிறது. இத்துணை இன்னல்களுக்கும் பலவீனங்களுக்கும் மத்தியில் இடதுசாரி ஒற்றுமை தொடர்ந்து வலுப்படும். ஏனெனில் அது காலத்தின் தேவையாகும். ஆனால் அது தானாக உருவாகும் தன்மை கொண்டதல்ல. கட்சி உஷாராயிருப்பதோடு மற்ற கூட்டாளிகளின் தவறான கொள்கைகளையும், ஊசலாட்டங்களையும் எதிர்த்து தேவைப்பட்ட பொழுதெல்லாம் ஒருஅரசியல் போராட்டத்தை நடத்த வேண்டும். இம்மாதிரி போராட்டங்களோடு, நெருக்கமான உறவுகளுக்கான கடுமையான முயற்சிகள் இல்லாமல், இடதுசாரி ஒற்றுமையைக் கட்ட முடியாது.

இடதுசாரி ஜனநாயக ஒற்றுமைக்கான போராட்டம் என்பது அகாலிகள், தி.மு.க. அ.தி.மு.க. இதுபோன்ற பிற ஜனநாயக கட்சிகளையும் கொணர்வதற்கான போராட்டமாகும். பொதுவான போராட்டத்தில் இந்த சக்திகளை இறக்கிவிடுவதில் சில வெற்றிகள் கிடைத்துள்ளன. அகாலி கட்சி, பஸ் கட்டண உயர்வை எதிர்த்த போராட்டத்திலும், பஞ்சாப் சட்டமன்றம் முன்பு கூட்டு ஆர்ப்பாட்டத்தை நடத்துவதிலும் ஒரு கூட்டாளியாக இருந்தது.

விவசாயிகளின் பேரணியை நடத்துவதில் அது பங்குகொண்டது. விவசாய இணைப்புக் குழுவிலும் அது அங்கம் வகிக்கிறது. எனினும் சமீப மாதங்களில் அது பிளவுபட்டிருக்கிறது. ஒரு பகுதி அதன் தன்மையை இழந்தது. காலிஸ்தான் கோஷத்தையும், ''அமிர்தசரஸ் ஒரு புனித நகரம்'' என்ற கோஷத்தையும் அது ஆதரிக்கிறது. ஆனால் இம்மாதிரி சீர்குலைவு சக்திகளை பெரும்பான்மையினர் ஆதரிக்கவில்லை. இருந்த போதிலும், இந்திய விமானம் கடத்தப்பட்டதை எந்த அகாலி தலைவர்களும் திட்டவட்டமாக கண்டிக்கவில்லை. பொதுவான பாதையிலிருந்து இம்மாதிரியானதிருப்பங்கள் இந்தக் கட்சிகளுக்கு சர்வ சாதாரணமாகும். குஜராத்தில்இடஒதுக்கீட்டை எதிர்த்த போராட்டத்தை ஆதரித்த முதலாளித்துவஎதிர்க் கட்சிகளின் நிலையிலும் இதைப் பார்க்க முடிந்தது.

தி.மு.க. இன்னும், அது இந்திரா காங்கிரஸுடன் கொண்டுள்ள சந்தர்ப்பவாத கூட்டணியில் கட்டுண்டு கிடக்கிறது. மக்கள் சபையிலும். வெளியிலும், ராஜ்ய சபையிலும், வெளியிலும், ஆளும் கட்சியை விசுவாசத்தோடு ஆதரிக்கிறது.

அகில இந்திய அண்ணா தி.மு.க. தலைவர் தி.மு.க வோடு மோதுவதில்தான் கவனமாயிருக்கிறார். ஒரு உறுதியான சர்வாதிகார எதிர்ப்பு நிலை எடுப்பதில் ஆர்வம் இல்லாமலிருக்கிறார். அதே சமயம், மத்திய இந்திரா காங்கிரஸின், தலைவர்கள் அமைச்சர்கள், அண்ணா தி.மு.க. அரசை தாக்கிப் பேசுவதை எதிர்ப்பதிலும், மாநில சுயாட்சிக்கான போராட்ட வீரர் என்ற பெருமையை நிலைநாட்டிக் கொள்வதிலும், சில பிரச்னைகளில், அ.தி.மு.க. அரசாங்கம் மத்திய அரசை எதிர்த்து நிலைஎடுக்கிறது. அ.தி மு.க. அரசாங்கம் அண்மையில் ஒரு தொழிலாளர் விரோத மசோதாவை கொணர்ந்தது. அது பொறுக்கு கமிட்டிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாநில அரசின் உள் விவகாரத்தில் தலையிடும் மத்திய அரசின் திட்டமிட்ட சாராய விசாரணை கமிஷனின் விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்க அது தயாராயிருக்கிறது என்று தோன்றுகிறது. ஆனால் அதே சமயம், தான் நியமித்த விசாரணைக்கமிஷனும் தனது விசாரணையை நடத்தவேண்டும் என்றும் விரும்புகிறது.

இடதுசாரி, ஜனநாயக அணி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இன்றைய சமூக பொருளாதார அமைப்பிற்கு முடிவுகட்டவும், இன்றைய வர்க்க ஆட்சிக்கு முடிவுகட்டி, சோஷலிசத்தை நோக்கி முன்னேற, ஒரு மக்கள் ஜனநாயக அரசை அமைப்பதற்காகவும் நிற்கிறது.

கட்சி, உடனடியான சர்வாதிகாரத்தை எதிர்த்த போராட்டத்தில், வெகுஜன நடவடிக்கைகளின் மூலம், எதிர்காலத்தில்

மக்கள் ஜனநாயக அணியின் பிரதான சக்தியாகத் திகழப்போகும், வர்க்கங்களேயும், சக்திகளேயும் திரட்ட முயற்சிக்கிறது.

ஜலந்தர் தீர்மானம் கூறுவதாவது:— ''அந்த அணியை கட்டும் போராட்டம், வர்க்க சக்திகளின் பலா பலத்தை மாற்றுவதற்கான நமது முயற்சியின் ஒரு பகுதியாகும். மக்களை அந்த அமைப்பின் வரையறைக்குள்ளேயே கட்டுப்படுத்தி, இரண்டு முதலாளித்துவ நிலபிரபுத்துவ கட்சிகளுக்கிடையே ஒன்றைத்தான்தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற இன்றைய சூழலுக்கு முடிவு கட்டுவதையும் தன்னகத்தே கொண்டது. மேலும் முன்னேறுவதற்கு எல்லா இடதுசாரி ஜனநாயக சக்திகளேயும் திரட்டுவதின் மூலம், தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் மக்கள் ஜனநாயக அரசாங்கத்தை அமைப்பதற்கான அணியை எதிர்காலத்தில் உருவாக்க உதவிகரமாயிருக்கும், இந்த சக்திகளே திரண்டு பலமடையச் செய்வதற்கான ஆரம்ப முயற்சியில் கட்சி ஈடுபடுகிறது. இடதுசாரி ஜனநாயக அணி என்பது தேர்தல் அல்லது அமைச்சரவை, இவைகளுக்கான கூட்டணி, என்று கருதக் கூடாது. மாருக உடனடி அரசியல், பொருளாதார முன்னேற்றத்துக்காக, போராடும் போராட்டக் கூட்டணியாகும். பொருளாதாரத்தை தன் கையில் வைத்திருக்கும், பிற்போக்கு வர்க்கங்களே தனிமைப் படுத்துவதற்கான கூட்டணியாகும்.''

நமது திட்டத்தில் கூறப்பட்டுள்ளதாவது:—

''தொழிலாளி-விவசாயி, கூட்டணியை அடித்தளமாகக் கொண்ட, எல்லா தேச பக்த ஜனநாயக சக்திகளேயும், புரட்சிகரமான முறையில் ஒன்றுபடுத்துவதின் மூலம், மக்கள் ஜனநாயக புரட்சியின் நோக்கத்தை அடைவது என்பது, நீண்ட நெடிய சிக்கல் நிறைந்த ஒன்ருகும். அது பல கட்டங்களில் பல்வேறு சூழ்நிலையில் நடத்தப்பட வேண்டும். பல்வேறு வர்க்கங்கள், ஒரே வர்க்கத்தில் பல்வேறு வகையினர். ஆகியோர் புரட்சி இயக்கத்தின் வெவ்வேறு கட்டங்களில் பல்வேறு நிலைபாடுகளே, எடுக்கவே செய்வார்கள்.

இந்த பல்வேறு வர்க்கங்கள், ஒரே வர்க்கத்தின் பல்வேறு பிரிவினர், பல கட்டத்தில், தாங்கள் எடுக்கும் நிலைகளிஞல் ஏற்படும் சிக்கல் மிகுந்த நிலைமைகள், புரட்சிகர தொழிலாளி வர்க்கத்தின் தானே தலைவஞக, கம்யூனிஸ்ட் கட்சியை வளர்க்க வேண்டிய அவசியத்தையும் தேவையையும் கோடிட்டுக் காட்டுகின்றன......

ஒவ்வொரு கட்டத்திலும்: மக்களை திரட்டுவதற்காக இடைக்கால கோஷங்களும் மேடைகளும் உருவாக்கப்படவேண்டும் அவை அனைத்தும், மக்கள் ஜனநாயக அணியை உருவாக்குவதற்கான தயாரிப்பாகும்; இது படிப்படியாக போராட்டங்களின் மூலம், 'பல கட்டங்களில் உருவாக்கப்படும்''

ஒரு இடதுசாரி ஜனநாயக அணியை உருவாக்க ஒரு வெற்றிகரமான போராட்டத்தை நடத்துவதற்கு இன்றைய சூழ்நிலையில், இந்த சக்திகளை சர்வாதிகார அபாயத்தை எதிர்த்து எல்லா வழிகளிலும் திரட்டுவது என்பது அவசியமாகும்.

அதே சமயம், முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ கட்சிகளின் மேடைகளுக்கும், கொள்கைகளுக்கும் நேர் எதிரான ஒரு தெளிவான அரசியல், பொருளாதாரத் திட்டத்தை அவைமுன் வைப்பது அவசியமாகும். அதற்கான போராட்டத்தை நடத்துவதன் மூலம், முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ கட்சிகளிலிருந்து அதிகப்படியான அளவில் மாற்றுத் தலைமையின் கீழ், வெகுஜனங்களை வென்றெடுப்பதற்கு முடியும். இடதுசாரி ஜனநாயக அணியைக் கட்டி உருவாக்கும் போராட்டம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியையோ, அல்லது தொழிலாளி வர்க்கத்தையோ, மற்றவர்கள் தலைமைதாங்கும் சக்தியாக ஏற்றுக் கொள்ளாத சூழ்நிலையில் ஆரம்பமாகிறது. அவர்கள் முக்கியமான கூட்டாளிகளாகவும் சமமான கூட்டாளிகளாகவும் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர்; இந்த சக்திகளின் ஒற்றுமையின் வளர்ச்சி, முன் வைத்த திட்டத்தை அடைவதற்கான போராட்டம் ஆகியவைகளினால், தொழிலாளி வர்க்கத்தின் செல்வாக்கும், பலமும் நிச்சயமாக அதிகரிக்கும். ஆனால் இதை அடைய நீண்ட நெடிய தூரம் போக வேண்டியிருக்கும். முற்றிலும் மாறுபட்ட சக்திகளின் சேர்க்கையில் இந்த தொழிலாளி வர்க்கத் தலைமை உருவாகும்.

வெகுஜன அமைப்புகளும், வெகுஜன இயக்கமும்

அரசியல் நிலைமையை மாற்றுவதற்கும், சர்வாதிகார சக்திகளை தோற்கடிப்பதற்கும், இடதுசாரி ஜனநாயக சக்திகளை கட்டுவதற்கும் ஆன நெம்புகோல் வெகுஜனங்களின் போராட்டமேயாகும் புதிய தெம்புடன் அது தற்போது வெடித்து கிளப்பிக் கொண்டிருக்கிறது; நமது கட்சி தலைமை தாங்கும் வெகுஜன அமைப்புகள் சால்கியா பிளீனத்தில் சொல்லப்பட்ட பலவீனங்களை களைந்தெறியவேண்டும்; வெகுஜனங்களையும், அதன் உணர்வுகளையும் அது பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும்; முன்னணிப் படையை வெகுஜனங்களோடு இணைக்க வேண்டும்.

நமது மாணவர், வாலிபர், மாதர் அமைப்புகள், மே.வங்கத்திலும், கேரளத்திலும் முன்னேறியிருக்கின்றன. மற்ற மாநிலங்களில் துரித வளர்ச்சிக்கான பாதையிலிருக்கின்றன.

மே. வங்கத்திலும், கேரளத்திலும் இருக்கும் இந்த மாணவர், வாலிபர், மாதர் வெகுஜன அமைப்புகள் அவர்களின் பகுதியினரின்

அகில இந்திய அமைப்புகளை உருவாக்குவதில் பெரும் பங்காற்ற வேண்டும். மற்றும் மாநிலங்களில் அமைப்புரீதியிலும், உணர்வு மட்டத்திலும் அவர்களை விட பின் தங்கியிருக்கும் மற்றவர்களுக்கு படிப்படியாக வழிகாட்ட வேண்டும்.

வெகுஜனங்கள் கொதிப்படைந்திருக்கும் இன்றைய சூழ்நிலை நமது வெகுஜன அமைப்புகளை விரிவுபடுத்துவதற்கும், பலப்படுத்துவதற்கும், விரிவான வாய்ப்பை கொண்டிருக்கிறது என்பதை நமது கட்சியும், வளர்ச்சியடைந்த வெகுஜன அமைப்புகளும் மனதில் கொள்ளவேண்டும். கட்சியின் மீது கூடுதலாகவும், சிக்கல் மிக்கதாகவும் பொறுப்புகள் திணிக்கப்பட்டுள்ளன. அவற்றை நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை அதிகப்படியான மக்களின் அங்கீகாரம் நமக்கு ஏற்பட்டுத்தியுள்ளது. இதனால் நம் அமைப் பொறுத்தவரை வெகுஜனங்கள் என்ற அர்த்தமே மாறிக் கொண்டிருக்கிறது. மேற்கு வங்கத்தில் விவசாயிகள் சங்கம் கிட்டத்தட்ட 40 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டதாக மிகோன்னத வளர்ச்சி பெற்றிருப்பது கட்சிக்கு எத்தகைய வாய்ப்பு திறந்துவிடப்பட்டிருக்கிறது என்பதை காட்டுகிறது.

அரசியல், பொருளாதார பிரச்சனைகளில், கட்சியின் சுயேச்சையான இயக்கம் இல்லாமல், வெகுஜன இயக்கங்களை உருவாக்க முடியாது; வெகுஜனங்களின் உணர்வு மட்டத்தையும் உயர்த்த முடியாது. கூட்டணி என்பதன் பெயரால் இம்மாதிரி நடவடிக்கைகளை, முடமாக்குவது என்பது, நமது கட்சியை, மற்ற கட்சிகளின் தொங்கு சதையாக மாற்றுவதோடு மற்ற கட்சிகள் எந்த அளவிற்கு தேவை எனக் கருதுகிறதோ, அதற்கு மேல் வெகுஜனங்களின் உணர்வு மட்டத்தை உயர்த்தாமல் இருக்க ஒத்துக் கொள்வதுமாகும். கட்சியின் தலைமையில் இயங்கும் வெகுஜன அமைப்பு மக்களிடம் தங்களின் சுயேச்சையான நடவடிக்கைகளை அதிகரித்து அவர்களின் அரசியல் மட்டத்தை உயர்த்த வேண்டும். மேலும் மேலும் அதிகப்படியான மக்கள் பகுதியைத் தழுவிய மற்ற இதர அமைப்புகளுடன் இணைந்து கூட்டு நடவடிக்கைகளுக்கும் போராட்டங்களுக்கும் தேவையான முயற்சியை எடுப்பதற்கு இந்த சுயேச்சை நடவடிக்கை ஒரு உந்து சக்தியாக அமைய வேண்டும்.

நெருக்கடியின் விளைவுகளையும் புதிய சுமைகளை சுமத்துவதையும் எதிர்த்து ஒரு வலுவான இயக்கத்தைக் கட்டுவதில் ஒன்றுபட்ட வெகுஜனநடவடிக்கைகளின் அவசியத்தை கட்சி என்றும் வலியுறுத்தி வந்திருக்கிறது. கட்சியின் தலைமையில் இயங்கும் எல்லா வெகுஜன அமைப்புகளும் இந்தக் கொள்கையை கடைப்பிடிக்கின்றன. தங்கள் அலுவலகங்களில் முக்கியமான முன்னேற்றத்தைக் காட்டவும் முடிகிறது.

விவசாயிகளின் பேரணி பரந்துபட்ட ஒற்றுமையின் கண் கண்ட எடுத்துக்காட்டாகும். இந்தப் போராட்டத்தின் மூலம் உரு

வான விவசாயிகளின் ஒருங்கிணைப்புக் குழு பல பிரச்னைகளில் அவர்களைப் பெரிய அளவில் திரட்டுவதற்கான கருவியாகத் திகழ வேண்டும். இந்தக் குழுவை இயக்குவதில் விவசாய சங்கத்தின் சுயேச்சையான நடவடிக்கை இயல்பாகவே ஒரு முக்கியமான தலைமைதாங்கும் பங்கை வகிக்கும். மேற்கு வங்க விவசாயிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 40 லட்சத்தைத் தாண்டிய வியத் தகு வளர்ச்சியும், விவசாய இயக்கத்திற்கு அது சேர்த்துள்ள வலிமையும், மற்ற அமைப்புகளைத் தன்பால் ஈர்த்து விவசாய நடவடிக்கைகளை மேலும் பரவலாக்க ஒரு உந்து சக்தியாக இருக்கின்றன.

கடந்த 4 ஆண்டுகளில் விவசாயத் தொழிலாளர்களின் அமைப்புகள் பல மாநிலங்களில் தன் வலுவை அதிகரித்துள்ளன.

அண்மையில் அமைக்கப்பட்ட அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் இயக்கத்தை மேலும் வலுவடையச் செய்யும் இந்த கேந்திரமான பகுதியில் வளர்ச்சியடைந்த நிலை, மற்ற விவசாயிகளின் அமைப்புகளின் அதிகரித்துவிட்ட வெகுஜன அங்கத்தினர் எண்ணிக்கை-இவை இரண்டும் நமது கட்சியின் விவசாய அரங்க கோரிக்கைகளை முன்னுக்குத் தள்ளும் கடமையை ஆற்ற வழிவகை செய்கின்றன.

இந்தியத் தொழிற்சங்க மையமும், நமது தலைமையில் இயங்கும் சிப்பந்திகளின் வெகுஜன அமைப்புகளும் தற்போது நாட்டின் தொழிற்சங்க இயக்கத்திற்கு ஒரு வலுவான சக்தியாகத் திகழ்கிறது.

தொழிற்சங்க ஒற்றுமைக்காக நாடு முழுவதுமுள்ள தொழிற்சங்க அமைப்புகள் உறுதியான போராட்டத்தை நடத்தியுள்ளன. இந்த திசைவழியில் முன்னேற இந்தியத் தொழிற்சங்க மையம் அதன் மாநில அமைப்புகள், இணைந்த சங்கங்கள் உறுதி பூண்டுள்ளன. ஜலந்தர் கட்சி காங்கிரசிற்கு பிறகு தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக இந்தியத் தொழிற்சங்க மையத்தைச் சார்ந்த சங்கங்கள் நீண்ட வேலை நிறுத்தப் போராட்டங்களை நடத்தியிருக்கின்றன. தொழிலாளர்களும் அதன் அமைப்புகளும், போலீஸ் அரசாங்கங்களின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள்-இவைகளை தொழிலாளர்களும் அவர்களின் சங்கங்களும் சந்தித்துள்ளன. முதலாளிகளால் பகிரங்கமாக பாரபட்சம் காட்டப்பட்டும் வந்துள்ளார்கள்.

ஒற்றுமைக்கான போராட்டம், இறுதியாக பம்பாய் மாநாட்டின் மூலம் அனைத்து தொழிலகங்களிலும் ஒரு பரவிப் படர்ந்த கண்டன வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுமளவிற்கு இட்டுச் சென்றது. பல்வேறு மத்திய தொழிற்சங்க அமைப்புகளை உள்ளடக்கிய தேசிய பிரச்சாரக் கமிட்டி ஒற்றுமையை மேலும் முன் கொண்டு செல்வதற்கும் போராட்டங்களைக் கட்டவிழ்த்து விடுவதற்கும் தனி ஒரு வாய்ப்பினை அளிக்கிறது. இதற்கான முன்முயற்சியை

இடதுசாரி சக்திகளின் கரங்களிலும் தொழிலாளி வர்க்கத்தின் கரங்களிலும் வைத்துள்ளது.

மாதர்கள்

மாதர்களின் இயக்க வளர்ச்சியிலும் அவர்களது உணர்வு மட்ட வளர்ச்சியிலும், கடந்த மூன்றுண்டு காலத்தில் ஒரு திடீர் எழுச்சி காணப்படுகிறது. அரசியல் சட்டத்தில் ஆண் பெண் சம உரிமை உறுதி செய்யப்பட்டிருந்த போதிலும் இந்திய மாதர்கள் பத்தாம் பசலித்தனமான அரை நிலப்பிரபுத்துவக் கண்ணேட்டத்திற்கு பலியாகி உள்ளனர். பெண்ணுக்கு ஆணுடன் சமமான சம்பளம் மறுக்கப்படுகிறது; சமமாக நடத்தவும் மறுக்கிருர்கள். இந்தக் கொடுமைகளுக்கெதிரான மாதர்களின் போராட்டம் ஒரு சமூக சீர்திருத்தத்திற்கான ஒரு போராட்டம் மட்டுமல்ல; மாருக ஜனநாயகத்திற்கும், சோஷலிசத்திற்கும் இந்திய மக்கள் நடத்தும் போராட்டத்தின் ஒரு பகுதியேயாகும்.

சமத்துவமின்மை, பாரபட்சம், அரை நிலப்பிரபுத்துவக் கண்ணேட்டம் இவைகளை எதிர்த்து மாதர்களின் போராட்டம் நடத்தப்பட அதை வெகுஜன அடிப்படையிலானதாக ஆக்கவேண் வேண்டும்.

மாதர்களின் வெகுஜன அமைப்பை உருவாக்குவதிலும் வளர்ப்பதிலும் கட்சி முன்முயற்சி எடுக்க வேண்டும். மாதர்களின் அணியில் கட்சியின் பங்கு பற்றி கட்சி முழுமைக்கும் கல்வி புகட்ட வேண்டும். அகிலஇந்திய ஜனநாயகமாதர்சங்கம் அமைக்கப்பட்டது இந்தத் திசை வழியில் ஒரு மைல் கல் ஆகும்.

தொழிலகங்களிலும், அலுவலகங்களிலும் பணிபுரியும் உழைக்கும் பெண்கள், தொழிலாளி வர்க்க பிற ஊழியர்கள் ஆகியோரில் கணிசமான பகுதியாக இருக்கின்றனர். தமது தொழிற்சங்கங்களில் மாதர்களின் மிகக் குறைந்த அங்கத்தினர் எண்ணிக்கை தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் தொழிற்சங்கத்தை நடத்துவதிலும் மாதர்களின் பங்கு அநேகமாக இல்லாத நிலைமை இவையிரண்டும் தொழிற்சங்க இயக்கத்தில் பலவீனமாய் இருக்கிறது. மாதர்கள் பெரும்பான்மையாயிருக்கும் தொழிலகங்கள் நிறுவனங்கள் இவற்றில் கூட அந்த அமைப்புகளின் அலுவலகப் பொறுப்புகளிலும் செயலாற்றும் தலைமையிலும், ஸ்தாபனத்தின் செயல் வீரர்கள் பட்டியலிலும் அவர்களைப் பார்ப்பது குதிரைக்கொம்பு போலாகும்.

தொழிற்சங்கங்கள், நிறுவனங்களில் மாதர்களுக்கிருக்கும் பிரச்னைகளை அநேகமாக அலட்சியம் செய்கின்றன. பதவி உயர்வுகளில் மாதர்களுக்கு பாரபட்சம், சமத்துவமற்ற நடத்தப் படுவது போன்ற இவைகளை எதிர்த்து அவை போராடுவதில்லை.

தொழிற்சங்கங்கள், உழைக்கும் பெண்களின் கமிட்டிகளை அமைத்து இந்த பலவீனத்தைப் போக்க வேண்டும். இதன் மூலம் மாதர்கள், சங்க நடவடிக்கைகளில் பங்குகொள்ள முடியும். மாதர்களின் பிரச்னைகளில் சங்கத்தைப் போராட வைக்கவும் இது வற்புறுத்தும்.

இவ்வாறு தொழிற்சங்கங்களின் கீழ் அமைக்கப்படும் இந்த கமிட்டிகள தொழிலாளர் வர்க்கத்தின் ஒற்றுமைக்கான போராட்டத்தின் ஒரு பகுதியாகும். — தீட்டு —

சால்கியா பிளீனம் கட்சியின் உள் பிரச்னைகளின்பால் கவனம் செலுத்தி ஆலோசனைகளை வைத்தது. பிளீனத்தின் ஆலோசனைகளை அமுல்படுத்தநடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டன. சால்கியா பிளீனம் ஹிந்தி பேசும் பகுதிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று மத்தியக் கமிட்டிக்கு ஆணையிட்டது

அதன் அடிப்படையில் மத்தியக் கமிட்டி ''லோக் லாஹர்'' என்ற ஒரு ஹிந்தி வார ஏட்டைத் துவக்கியது. தற்போது 15,000 பிரதிகள் விற்பனையாகின்றன. உருது மொழியில் மாதம் இரு முறை 'லோக் லாஹர்' என்ற ஏட்டையும் வெளியிட ஆரம்பித்துள்ளது.

சமீப மாதங்களில் ஹிந்தி பேசும் பிரதேசங்கள் பெரும் முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன. பீகார், ஹரியானா, ராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து விவசாயப் பேரணியிலும், செப்டம்பர் 15ல் நடைபெற்ற வாலிப-மாணவர் பேரணியிலும் பெருமளவில் மக்கள் கலந்துகொண்டனர். இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும், மற்றஎல்லோரையும் விட, பீகாரின் பங்கு பெருமளவில்இருந்தது. மத்திய பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான, உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து மாணவர்-வாலிபர் பேரணிக்கு, ஒவ்வொரு மாநிலமும் 5000 பேரை அனுப்பியிருந்தன. டெல்லி தலைநகரும், தனது பங்கை ஆற்றியது. வேலைநிறுத்தத தடை அவசரச் சட்டத்தை (ESMO) எதிர்த்து ஆகஸ்ட் 17ம் நாள் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பல தொடர்ச்சியான கட்டுரைகளில் பழமைவாத ஜமையத் இஸ்லாமியின் பிரிவினை கோஷம், சீக்கிய பிரிவினைவாதிகளின் காலிஸ்தான் கோஷம் ஆகியவற்றை நமது கட்சி அம்பலப்படுத்தியுள்ளது.

தொடர்ச்சியாக ஆர்.எஸ்.எஸ். இந்து வகுப்புவாத வெறியர்களை எதிர்த்து நமது கட்சி தொடர்ந்து நடத்திவரும் போராட்டம் பற்றி சொல்ல வேண்டியதில்லை.

நமது கட்சியின் அரசியல் கொள்கை கடந்த 4 ஆண்டுகளில் அமுல் நடத்தப்பட்டது; சோதிக்கப்பட்டது. அதன் விளைவாக நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சர்வாதிகாரத்தை எதிர்த்த போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது; மேலும் தீவிரமடைந்துள்ளது.

நாடாளு மன்றத்தின் ஒன்றுபட்ட எதிர்ப்பு

வெகுஜனங்களின் போராட்டங்கள் இரண்டையும் கட்சி இணைத்தது, நம் தலைமையில் இயங்கும் இடதுசாரி அரசுகளின் சாதனை, இவை அனைத்தும் சேர்ந்து இடதுசாரியின் அந்தஸ்தை உயர்த்தின.

சர்வதேச ரீதியில் நிகழ்ச்சிப் போக்குகளை கணிப்பதில் சுயேச்சைத் தன்மை, சோஷலிச முகாமை பாதுகாப்பதில் அதன் உறுதிப்பாடு, வலதுசாரி முறையிலோ அல்லது இடதுசாரி முறையிலோ மார்க்சிஸ லெனினஸத்தை திரித்துக் கூறுவதை எதிர்த்து, அதன் விட்டுக் கொடுக்காத தன்மை - இவையனைத்தும் கட்சி பல கம்யூனிஸ்ட் கட்சிகளிடம் தனது உறவை வளர்த்துக் கொள்வதில் வெற்றியை ஈட்டித் தந்துள்ளது.

தற்காலத்தில் உலகநிலைமையில்பிரதான முரண்பாடாக-சோஷலிஸமுகாமுக்கும்-ஏகாதிபத்திய முகாமுக்கும்இடையேஉள்ள முரண்பாடு இருக்கிறது என்ற —நமது கருத்துடன் கூடிய நமது சுயேச்சையான கொள்கையை கட்சி தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது.

இன்றைய சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் மார்க்சிசம், லெனினிசத்திற்கு எதிரான திருகுதாளங்களும், திரிபுகளும் ஒரு குறிப்பான அம்சமாகி விட்டன. இவற்றை எதிர்த்து மார்க்சிச — லெனினிசப் பதாகையை கட்சி உயர்த்திப் பிடித்துள்ளது.

உள்நாட்டில் வலதுசாரி திருத்தல்வாதம், இடதுசாரி வறட்டுவாதம், பயங்கர வாதம் இவற்றை எதிர்த்து தொடர்ந்து போராடிவருகிறது. இடதுசாரி வறட்டுவாதத்தையும், பயங்கர வாதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நக்சலைட்டுகள் நமது கட்சியைக் குறிவைத்துத் தாக்குகிறார்கள். அவர்களின் புரட்டுவாதத்தை எதிர்த்து தொடர்ச்சியாக நமது கட்சி போராட வேண்டியுள்ளது. அதே சமயம் எல்லாவித திருத்தல்வாத வெளிப்பாடுகளை எதிர்த்தும் அது போராடுகிறது. கட்சியையும் வெகுஜன ஸ்தாபனங்களையும் பாதுகாப்பது அதற்கான வழிமுறைகள் ஆகியவை கட்சி முழுவதின் முழுகவனத்தையும் பெற்று இருக்க வேண்டும்.

ஒரு சிறப்பாக கட்டப்பட்ட வலுவான கட்சியினால் தான் முன்னணிப் படையின் கடமைகளை கட்சி நிறைவேற்ற முடியும். கட்சி வெகுஜனங்களிடம் தனது பிடிப்பை ஆழமாக்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான புதிய ஆதரவாளர்களை வென்றெடுக்க வேண்டும். தொழிலாளி வர்க்கத்தில் கட்சியின் பலவீனம் கூடிய சீக்கிரத்தில் போக்கப்பட வேண்டும். கட்சி அங்கத்தினர்களை பிரும்மாண்டமான அளவில் அதிகரிக்க சால்கியா பிளீனம் அறைகூவல் விட்டுள்ளது. புதிய உறுப்பினர்களைப் பயிற்றுவிக்க வேண்டும் என்றும் அது கட்டளையிட்டுள்ளது.

சிறப்புமிகு மார்க்சிஸ, லெனினிச பாரம்பர்யத்தில் பயிற்றுவிக்கப்பட்ட —புரட்சிக்கான லட்சியத்தின் சுயநலமற்ற அர்ப்பணிப்பின் மூலம், மக்களை எழுச்சியூட்டக்கூடிய —எல்லாவித திரிபுகளையும் எதிர்ப்பதில் சமரசமற்ற தன்மை கொண்ட ஒரு கட்சியே புரட்சிகரப் போராட்டத்தின் முன்னணிப்படையாகத் திகழ முடியும்; இம்

மாதிரியான கட்சியைக் கட்டுவதே நமது லட்சியமாகும்.

கட்சியின் லட்சியம்

உடனடியான சர்வாதிகாரத்தின் சவாலே பிரதான அபாயமாகக் கருதி எதிர்த்துப் போராடுவதை உடனடி லட்சியமாக கொண்டிருக்கும் அதே நேரத்தில் அதன் புரட்சிகர லட்சியத்தையும் கட்சி மறந்துவிடாது, சோஷலிஸத்திற்கான கதவுகளை திறப்பதற்கு மக்கள் ஜனநாயகப் புரட்சியை நடத்துவதைக் கட்சி தனது கடமையாகக் கொண்டுள்ளது.

இன்றைய போராட்டத்தை, அந்த லட்சியத்தை அடைவதற்கான வர்க்க சக்திகளின் சேர்க்கைகளையும், பலாபலத்தையும் ஏற்படுத்துவதற்கான தயாரிப்பு நடவடிக்கையாகப் பயன்படுத்துகிறது.

இடதுசாரி ஜனநாயக அணியைக்கட்டுவதற்கான போராட்டம், எல்லா முதலாளித்துவக் கட்சிகளின் கொள்கைகளையும் எதிர்த்த தனது திட்டங்களை பிரபலப்படுத்துவது (விளம்பரப்படுத்துவது), பெருமளவில் திரட்டுவதின் மூலம் அரசியல்சக்திகளின் பலாபலத்தை மாற்றுவது, எல்லாவற்றுக்கும் மேலாக வெகுஜனப் போராட்டங்கள் நடத்துவது —இவைகளின் மூலம் மக்கள் ஜனநாயக அணியில் பிரதானப் பாத்திரத்தை வகிக்க வேண்டிய அந்த வர்க்கங்களையே இந்த அரங்கத்திற்குள் கட்சி கொண்டு வருகிறது.

இதுதான் நமது கட்சியின் உடனடி போர்த் தந்திர கொள்கையின் முக்கியத்துவமாகும்.

இடதுசாரி, ஜனநாயக அணியின் திட்டம்

1. சர்வாதிகார சக்திகளை எதிர்ப்பது, ஜனாதிபதி ஆட்சி முறையை எதிர்ப்பது, நீதிமன்றத்தை அதிகார வர்க்கத்திற்கு உட்பட்டதாக ஆக்குவதை எதிர்ப்பது, தேசீயப் பாதுகாப்பு சட்டம், அத்திவாவசிய சேவை பராமரிப்பு சட்டம் — இவற்றை எதிர்ப்பது, ஜனநாயக சீர்திருத்தத்திற்கும், பரந்த மேடையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையில் அரசியல் சட்டத்தை திருத்துவது ஆகிய இவற்றுக்காக நிற்பது, இடதுசாரி அரசுகளின் மீதான தாக்குதல்களிலிருந்து பாதுகாத்து நிற்பது.

2. மாநிலங்களின் அதிகாரத்தை அதிகமாக்குவதற்கும் அவை சுயாட்சியை உத்திரவாதப்படுத்தவதற்கும் அரசியல் சட்டத்தில், புதிதாக வகை செய்திடவேண்டும். எஞ்சிய அதிகாரங்கள் (Residuary Powers) மாநிலங்களிடம் இருக்க வேண்டும். அரசியல் சட்டத்தின் 356—360 பிரிவுகள் நீக்கப்படவேண்டும்.

3. அரசின் மீது பெரு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ வர்க்கங்கள் ஆதிக்கம் செலுத்துவதையும் அதிகார வர்க்கத்திற்குள்ள சக்தியையும் ஒழிக்கும் முறையில் அரசியல் சட்டத்தை அடிப்படையில் மாற்றுவதும் அரசும், ஆளும் கட்சியும் ஊறுவிளைக்காத வண்

ணம் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பளிப்பதற்கு வழிவகையும் வேண்டும்.

4. அரசியல் சட்டத்தில் வேலை செய்யும் உரிமை அடிப்படை உரிமையாகச் சேர்க்கப்பட வேண்டும்.

5. நிலப்பிரபுத்துவத்தை ஒழித்துக் கட்டுவது, விவசாயத் தொழிலாளிகளுக்கும் ஏழை விவசாயிக்கும் நிலத்தை உத்திரவாதப் படுத்தும் முறையிலான தீவிர நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளை மேற் கொள்ளுவது, நில வெளியேற்றத்தை எதிர்த்த நடவடிக்கை, விவசாயிகளின் விளை பொருள்களுக்கு நியாயமான விலையை உத்திர வாதப்படுத்துவது, விவசாய மக்களுக்கு மலிவான கடன், மானிய மளித்து மலிவான விலையில் உரம் வழங்குவது.

6. அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட திட்டமிட்ட சுதந்திர மான வளர்ச்சியைக் கொண்ட தேசீயப் பொருளாதாரத்தை உருவாக்குவது, பொதுத்துறைக்கு அதிகமான பங்கு.

7. உலக வங்கியுடன் ஒப்பந்தம், பன்னாட்டு நிறுவனங்களுக்கு அழைப்பு இது போன்ற நாட்டின் பொருளாதாரத்தைச் சார்ந்து நிற்கும் தன்மையை உருவாக்கும் கொள்கையை எதிர்த்து தொடர்ச்சியான போராட்டம், அந்நிய ஏகபோக நிறுவனங்களை நாட்டுடைமை ஆக்குவது அந்நிய கடன் தவணைகளை செலுத்தாமல் நிறுத்தி வைக்க உடனடியாக சட்டம், உலக வங்கியும் அந்நிய மூல தனமும் நமது நாட்டில் ஊடுருவுவதற்கு உதவும் எல்லா நடவடிக் கைகளையும் எதிர்ப்பது.

8. இந்திய ஏகபோக நிறுவனங்களை நாட்டுடைமை ஆக்குவது.

9. வெகுஜனங்களுக்கு தேவையை ஆதாரமாகக் கொண்ட வருமானம் உட்பட குறைந்த பட்ச நிலைமைகளுக்கு வகை செய் வதை அடிப்படையாகக் கொண்ட ஒரு நியாயமான, சமமான வருமான ஊதியக் கொள்கை; பெரும் முதலாளிகள் - நிலப்பிரபுக் கள் ஆகியோருக்கும் வெகுஜனங்களுக்கும் இடையில் வருமானத் தில் உள்ள பூதாகரமான ஏற்றத் தாழ்வைக் குறைப்பது.

10. பணவீக்கம், பற்றாக்குறை பட்ஜெட், அதிகப்படியான வரிவிதிப்பு, விலைவாசி ஏற்றம் இவைகளை எதிர்ப்பது, அன்றாட உபயோகப் பொருட்களின் விலையைக் கடுமையாக குறைத்து அதன் விநியோகத்தை உத்திரவாதப் படுத்துவது, அன்றாடப் பொருட் களின் மொத்த வியாபாரத்தை நாட்டுடைமையாக்குவது.

11. விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியத்தை உத்திரவாதப் படுத்துவது, வயது முதிர்ந்த விவசாயத் தொழி லாளர்களுக்குப் பென்ஷன் வழங்குவது, விவசாயத் தொழிலாளர் களுக்கும் ஏழை விவசாயிக்கும், அரைகுறைத் தொழிலாளர்களுக் கும் இலவசமாக வீட்டுமனை வழங்குவது, குறைந்த விகிதத்தில் தாராளமாக கடன், நுகர்வோர் கடன் வழங்குவது, தேவையான அளவு கல்வி வசதிகளை அமைத்துக் கொடுப்பது.

12. கிராமப்புற வேலை இல்லாதவர்களுக்கு முழுமையான, வேலைக்கான விரிந்த அளவிலான திட்டம், அது இல்லாத காலத்தில் அதற்கான நிவாரணம்.

13. தொழிலாளி வர்க்கத்திற்குத் தேவை அடிப்படையிலான ஊதியம் வழங்குவது ஊதிய முடக்கம், கதவடைப்பு, லே-ஆப், ஆலைகளை மூடுவது இவைகளை எதிர்ப்பது, மூடப்பட்ட ஆலைகளையும், நிறுவனங்களையும் தேசவுடைமையாக்குவது, முழுமையான தொழிற்சங்க உரிமைகளுக்காக நிற்பது, மத்திய, மாநில அரசு ஊழியர்களுக்கு முழுமையான ஜனநாயக உரிமைகள் வழங்குவது, உத்தியோகங்களுக்கு ஆள் எடுப்பதில் போலீஸ் விசாரிக்கும் முறையை ஒழிப்பது, எல்லா தொழிலாளிவர்க்க விரோத சட்டங்களையும் எதிர்ப்பது, எல்லோருக்கும் வேலை கொடுப்பது, வேலையில்லாத காலத்தில் நிவாரணம் அளிப்பது, தானியங்கி இயந்திரங்கள் போன்ற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்கும் திட்டங்களை எதிர்ப்பது.

14. எல்லா மாநிலங்களிலும் செகண்டரி கட்டம் வரை கல்வியை இலவசமாக்கும் திட்டத்தைக் கொணர்வது, மாணவர்களுக்குத் தங்கும் விடுதிகள், தேவையான மாணவர்களுக்கு உபகாரத்தொகை (ஸ்காலர்ஷிப்) வழங்குதல் போன்றவைகளை அமுலாக்குவது, தாழ்த்தப்பட்ட, மலைஜாதியினர், தாழ்த்தப்பட்ட ஜாதியினர் ஆகியோரின் தேவைக்கேற்ற முறையில் பிரத்யேகக் கவனம் செலுத்துவது, முழுமையான சீர்திருத்தங்களை அமுலாக்குவதற்கான கல்விக் குழுக்களில் மாணவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்குவது.

15. கல்வித் துறையில், ஜனநாயக, மத சார்பற்ற விஞ்ஞான அடிப்படையில் தீவிர மாற்றங்களுக்காக நிற்பது.

16. தாழ்த்தப்பட்ட சாதியினர் மலைஜாதியினர்மீது கொடுமைகள் புரிபவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பது, காண்ட்ராக்டர்கள், நிலப்பிரபுக்கள் ஆகியோர் இவர்கள் மீது செலுத்தும் பொருளாதார சமூக ஒடுக்குமுறைகளுக்கு உடனடியாக முடிவு கட்டும் நடவடிக்கை எடுப்பது, அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களைத் திரும்பக் கொடுப்பது, உத்தியோகங்களில் இவர்களுக்கு ரிசர்வேஷன் கல்வியிலும், பொருளாதார முன்னேற்றத்திலும் பிரத்தியேக வசதிகள் வழங்குவது.

17. முஸ்லீம் மைனாரிட்டியினரின் உரிமைகளைப் பாதுகாப்பது, அரசுத் துறைகளிலும், கல்வி நிறுவனங்களிலும் வேலையில் அமர்த்துவதிலும் உருது மொழிக்கு எதிரான பாரபட்ச நிலைகளை எதிர்ப்பது, இந்து, முஸ்லீம் வகுப்பு வெறியர்கள் வகுப்புவாத விஷத்தைப் பரப்புவதை எதிர்த்துப் போராடுவது.

18. பெண்களுக்கு, சமமான ஊதியம், அந்தஸ்து, வாய்ப்பு இவைகளுக்காக நிற்பது.

19. மலைஜாதியினர் பெரும்பான்மையினராக இருக்கும் பகுதியை ஒதுக்கப்பட்ட பகுதியாக அறிவிப்பது, இம்மாநில பகுதிக்கு சுயாட்சி அந்தஸ்து வழங்கும் வகையில் அரசியல் சட்டத்தில் வழிவகை செய்வது, இதன் மூலம் மாநிலத்திற்குள்ளடங்கிய அந்த

பகுதியில் வரும் பிராந்திய அரசாங்கம் அந்த ஆதிவாசியினரின் பொருளாதார, அரசியல், கலாச்சார, மொழி வளர்ச்சிக்கு அக்கறை காட்ட முடியும். அவர்களின் பிற்பட்டதன்மையைப் போக்குவதற்கு முழுமையான பொருளாதார உதவி வழங்கப்படும்.

அரசியல்சட்டத்தின் எட்டாவது பிரிவில் நேபாளம், மெய்தி மொழிகளை சேர்ப்பது. மே.வங்க மாநிலத்திற்குள் சுயாட்சி தன்மை கொண்ட நேபாளி மொழி பேசும் மாவட்டத்தை அமைக்க தேவையான அரசியல் சட்ட திருத்தங்களைச் செய்வது.

20. தேச ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கும் எல்லா சீர்குலைவு பிரிவினைவாத சக்திகளையும் எதிர்த்து, இடதுசாரி ஜனநாயக சக்திகள் போராடும்.

21. நாட்டை பிளவு படுத்தி ஒற்றுமையை குலைக்கும் ஏகாதிபத்திய சக்திகளின் திட்டங்களுக்கு எதிராக இடதுசாரி ஜனநாயக சக்திகள் மக்களுக்கு எழுச்சியூட்டும். பாகிஸ்தான் ராணுவ அரசுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் நவீன பல்திறன் வாய்ந்த ஆயுதங்களைக் கொடுப்பதன் மூலம், நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் வெளி அபாயத்தை மக்களுக்கு அவை எச்சரிக்கை செய்யும். இந்து மகா கடலில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நடமாட்டத்தால் இந்திய பாதுகாப்பிற்கு ஏற்பட்டிருக்கும் பயமுறுத்தலுக்கு எதிராக மக்களை அவை எச்சரிக்கின்றன.

22) ஏகாதிபத்தியத்தின் அணு ஆயுதப் போருக்கான திட்டத்தை இடதுசாரி ஜனநாயக சக்திகள் அம்பலப்படுத்தி அதை எதிர்த்து மக்களை எழுச்சியுறச் செய்வார்கள்.

23) இடதுசாரி ஜனநாயக சக்திகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலையை கொண்ட கோஷ்டி சேரா கொள்கையை தொடர்ச்சியாக கடைபிடிக்கின்றன. நவீன காலனியாதிக்கத்தை எதிர்த்து, நடத்தும் மூன்றும் உலக நாடுகளை அவை ஆதரிக்கின்றன. சோவியத் யூனியன், மக்கள் சீனம், மற்றும் பிற சோஷலிஸ்ட் நாடுகளின் நட்புறவுக்கு அவைகள் நிற்கின்றன. ஏகாதிபத்தியத்துடன் எல்லாவித சமரசங்களையும் அவை எதிர்க்கின்றன. இந்தியா சோவியத் நட்புறவு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை அவை பலப்படுத்த விரும்புகின்றன. மக்கள் சீனத்துடன் உறவை சகஜமாக்க அவை அறைகூவல் விடுக்கின்றன. நெருக்கமான நட்புறவுகளை ஏற்படுத்திக் கொள்ள அவை கோருகின்றன. இந்தியாவின் அண்டை நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், ஸ்ரீலங்கா ஆகியவற்றுடன் நட்புறவுக்காகவும், இந்நாட்டு மக்களின் ஜனநாயகத்திற்கான போராட்டத்திற்கு ஆதரவாகவும் நிற்கின்றன.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பை எதிர்த்து, அரபு நாடுகளின் போராட்டத்தை அவை தொடர்ச்சியாக ஆதரிக்கின்றன. பாலஸ்தீனர்கள் அவர்களுக்கென ஒரு அரசு அமைத்துக் கொள்ளும் உரிமையை ஆதரிக்கின்றன. நமீபிய மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு முழு ஆதரவுதருகின்றன. ஏகாதிபத்தியம், இனஒதுக்கீடு, இன

ஆதிக்கம் இவற்றை எதிர்த்துப் போராடும் நாமீபியா இதர மற்றும் பிற ஆப்ரிக்க மக்களின் போராட்டங்களை ஆதரிக்கின்றன.

இந்த திட்டத்தின் ஏதாவது ஒரு பிரச்னையில் நடத்தும் கூட்டுப் போராட்டஙகள் இடதுசாரி, ஜனநாயக அணியை கட்டுவதில் முன்னேற்றம் காண உதவிகரமாயிருக்கும். அந்த அணி எதிர்காலத்தில் இந்தத் திட்டத்தின் எல்லா பிரச்னைகளையும் எடுத்துப் போராடும்.

இன்றைய அமைப்பின் கடுமையான நெருக்கடியின் பிரசவ வேதனையில், நாடு துடித்துக்கொண்டிருக்கிறது. சர்வாதிகாரத்தைத் திணிப்பதன் மூலம் ஆளும் கட்சி இதற்குமுடிவுகாண முயற்சிக்கிறது. கட்சி சரியான நேரத்தில் மக்களை ஒன்றுபடுத்தி எழுச்சியுறச் செய்ய இயலவில்லையென்றால் மக்களுக்கு அரசியல்சட்டம் அளித்துள்ள அடிப்படை உரிமைகள் நாடாளுமன்ற அமைப்பு ஆகிய எல்லாம் அடுத்த எதிர்காலத்தில் பறி போகும் அபாயமிருக்கிறது.

இடதுசாரி ஜனநாயக சக்திகளை ஒன்றுபடுத்த, கட்சி அவசரமாக, தொடர்ச்சியாகச் செயல்படவேண்டும்; ஏனெனில் அப்பொழுதுதான் சர்வாதிகாரத்தை எதிர்த்த போராட்டத்தின் முன் முயற்சியைத் தங்கள் கையில் தக்கவைத்துக் கொள்ள முடியும்; இது காலத்தின் தேவையாகும்.

ஜனநாயகத்தைத் தொலைத்துக் கட்ட, சர்வாதிகாரக்கட்சியின் எல்லாத் தாக்குதல்களையும் எதிர்த்து, எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு பரந்த எதிர்ப்பு சக்திகளை உருவாக்கக் கட்சி அறை கூவல் விடுக்கிறது.

இடதுசாரி அரசுகளை பாதுகாப்பது என்பது ஜனநாயகத்திற்கான போராட்டத்தின் அவசியமான ஒன்றாகும். இடதுசாரி ஜனநாயக சக்திகளின் ஒற்றுமையைக் கட்டுவதற்கு அவைகளின் சாதனைகள் அடித்தளமாக திகழ்கின்றன.

இடதுசாரி முன் முயற்சிக்கும், பரந்த வெகுஜனங்களை திரட்டுவதற்கும், நமது கட்சி தனியாகவும் மற்ற ஏனைய கட்சிகள், வெகுஜன அமைப்புகள் இவற்றோடு சேர்ந்தும் நடத்தும் வெகுஜன இயக்கங்கள் போராட்டங்கள் உந்து சக்தியாக இருக்கின்றன.

எல்லா மட்டத்திலும் ஒரு பொதுவான உணர்வை உருவாக்குவதற்கும், பரந்த விரிவான எதிர்ப்பு இயக்கத்தை உருவாக்குவதற்கும், வெடித்துவரும் வெகு ஜனங்களின் அதிருப்தியும் போராட்டங்களும் ஆயுதமாகத்திகழ்கின்றன. இந்தஎல்லா போராட்டங்களுக்கும் தீர்க்கமாக தலைமைதாங்குவதும், எல்லாவற்றையும் சர்வாதிகார எதிர்ப்பு திசை வழியில் கொண்டு வந்து சேர்ப்பதும், கட்சியின் முன்னால் இருக்கும் பெரும் கடமையாகும். முழுமையாக நீதித்துறையை நிர்வாக அதிகார வர்க்கத்திற்கு உட்படுத்துவது, ஜனாதிபதி ஆட்சிமுறையைக் கொணர்வது ஆகிய இவை இரண்டும் ஒரு கட்சி சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான இரண்டு ஆயுதங்களாகும். இநத பிரச்சனைகளின்பால அரசியல் கட்சிகளையும் மக்களையும், திரட்டுவதில், கட்சியும் இடதுசாரிகளும் தலைமை தாங்குவதும் மிகவும்

அவசர அவசியமானதாகும். சீர்குலைவு சக்திகளின் தாக்குதலால் இக்கடமை மேலும்சிக்கலாகியுள்ளது. இடதுசாரி ஜனநாயக மதச் சார்பற்ற சக்திகளுக்கு தலைமை தாங்கும் கட்சியால் மட்டுமே அந்த தாக்குதலை முறியடிக்க முடியும்.

ஏகாதிபத்திய ஆதரவு சக்திகளால் ஊக்குவிக்கப்படும் பிரிவினை சக்திகளின் சவாலைஎதிர்த்து, கட்சி, மற்ற இடதுசாரி ஜனநாயகதேசபக்த சக்திகளின் ஒத்துழைப்போடு போராட வேண்டும்.

கடைசியாக நமது அந்நிய நாட்டுக் கொள்கைக்கு எதிராக ஏகாதிபத்தியத்திடமிருந்து வரும் சவால் சோஷலிச அமைப்புடன் உள்ள உறவு, இந்தோ - சோவியத் ஒப்பந்தம் இவற்றை பலவீனப் படுத்துவதற்கான நிர்ப்பந்தம், பாகிஸ்தானின் ராணுவ கும்பலை ஆயுத பாணியாக்குதல் ஆகியவற்றை கவலையுடன் கணக்கில் எடுக்க வேண்டும். பாரதீய ஜனதா கட்சி போன்ற சோவியத் எதிர்ப்பு அமெரிக்க ஆதரவு வட்டாரங்கள் குறிவைத்து பிரச்சாரம் செய்கின்றன. கோஷ்டிசேரா கொள்கையை எதிர்த்து உள்நாட்டு நிர்ப்பந்தம் இன்றுபோல் என்றும் இருந்ததில்லை.

இதை எதிர்த்த போராட்டத்தை மக்கள் சீனத்தின், பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் குவிக்கப்படுவதற்கு ஆதரவான கொள்கை, சிக்கலாகுகிறது. ஏகாதிபத்திய சவாலை எதிர்த்து எல்லா தேசபக்த சக்திகளின் விரிந்த பகுதியினரை திரட்டுவதற் கான வேலையில் கட்சி ஈடுபட வேண்டும்.

இந்தப் பல்வேறு நீரோடைகளை இணைத்து, பெருக்கெடுத் தோடும் பெரும் நதியாக ஆக்கி ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தைத் தளர்த்தாமலேயே, எதேச்சாதிகார சக்திகளுக்கு எதிரான ஒன்றுபட்ட போராட்டமாக இதைத்திருப்பி விடுவதுசுலப மான வேலையல்ல. இதை நமதுகட்சிமட்டுமே நிறைவேற்றமுடியும்.

பல இடதுசாரி கட்சிகளே, ஒன்று மாற்றி ஒன்று ஏதாவது ஒரு பிரச்சனையில், ஊசலாடவே செய்வார்கள். சில மாநிலங்களில், மற்ற இடதுசாரி கட்சிகளின் சந்தர்ப்பவாத நிர்ப்பந்தங்களை கட்சி, நிராகரிக்க முடியவில்லை; அது கட்சி ஆற்ற வேண்டிய பணியை,மேலும் கஷ்டத்துக்குள்ளாக்குகிறது. எனவே,மிகவும் கண்காணிப்பு (உஷார்த் தன்மை) அவசியமாகிறது. ஆனால் வெகு ஜன அதிருப்திக்குத் தலைமை தாங்குவது, இடதுசாரி அரசாங்கங்களைப் பாதுகாப்பது, சர்வாதிகாரத்தை எதிர்த்து பரவலான ஜனப் பகுதியைத் திரட்டுவதற்கானபணியிலஈடுபடுவது போன்ற வேலைகளை நமது கட்சி பொறுப்பேற்று நடத்த வேண்டும்.

இந்தப் பிரச்சினைகளில் கட்சி ஒரு கொள்கைரீதியான நிலைபாட்டையே உறுதியாக கடைப்பிடிக்கிறது. இது இடதுசாரி ஒற்றுமையைப் பலப்படுத்தும் எதேச்சாதிகார சக்திகளுக்கு எதிரான விரிந்து பரந்த எதிர்ப்பை உருவாக்குவதில் இடதுசாரி சக்திகளின் திறனை உயர்த்தும்.

விலை 80 பைசா

தீக்கதிர் அச்சகம், மதுரை-18.